

மாகாணக் கல்வித் திணைக்களம்
வடக்கு மாகாணம்

# குடியியற் கல்வி

## கற்றல் கையேடு

தரம் 10, 11 மாணவர்களின்
அடைவு மட்டத்தை உயர்த்தும் நோக்கில்
சுயகற்றல் கையேடாகத் தயாரிக்கப்பட்டுள்ளது.









**தரம் 10 - 11**

தரம் 10, 11 மாணவர்களுக்கானது
CF நிதி மூலம் அச்சிடப்பெற்றது
2025

DENP

**பகுதி** - I A

1. நேரடி சனநாயகத்தின் தாயகமாக விளங்கும் நாடு,
   (1) பிரித்தானியா (2) கிரேக்கம்
   (3) எதேன்ஸ் (4) சுவிட்சர்லாந்து

2. நேரடி சனநாயகம் பற்றி கருத்து வெளியிட்ட அறிஞர்,
   (1) பேராசிரியர் காணர் (2) அரிஸ்ரோட்டில்
   (3) ஆபிரஹாம் இலிங்கன் (4) சீலர்

3. பண்டைய காலத்தில் குழுவாட்சி முறை நிலவிய கீழைத்தேய நாடு,
   (1) கிரேக்கம் (2) இங்கிலாந்து
   (3. இந்தியா (4) அமெரிக்கா

4. மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட பாராளுமன்ற ஆட்சி அமைவதற்குக் காரணமாயிருந்த பிரித்தானியாவில் இடம்பெற்ற புரட்சியாக அமைவது,
   (1) அமெரிக்கப் புரட்சி (2) பிரான்சியப் புரட்சி
   (3) ரஷ்யப் புரட்சி (4) ஆங்கிலப் புரட்சி

5. உலகில் இருகட்சிமுறை இடம்பெறும் நாடுகளை மட்டும் கொண்ட விடைத் தொகுதி?
   (1) பிரித்தானியா, ஐக்கிய அமெரிக்கா (2) ஐக்கிய அமெரிக்கா, இலங்கை.
   (3) வடகொரியா, பிரித்தானியா (4) இந்தியா, இலங்கை

6. சர்வதேச மனித உரிமைகள் பிரகடனத்தை வெளியிட்ட ஐக்கியநாடுகள் சபையின் பிரதான நிறுவனமாக அமைவது,
   (1) செயலகம் (2) பாதுகாப்புச் சபை
   (3) பொதுச்சபை (4) சமூக பொருளாதார சபை

7. சனநாயக நாடொன்றில் சகலருக்கும் சமவாய்ப்புக்களையும், சந்தர்ப்பங்களையும் வழங்குவதாகக் காணப்படுவது பின்வருவனவற்றுள் எது?
   (1) உரிமை (2) சுதந்திரம்
   (3) சமத்துவம் (4) சட்டவாட்சி

8. தேர்தலொன்றில் பெரும்பான்மை ஆசனங்களைப் பெற்றுக் கொள்ளும் கட்சி,
   (1) ஒரு கட்சி (2) இரு கட்சி
   (3) ஆளுங்கட்சி (4) எதிர்க்கட்சி

9. சட்டத்துறை மூலம் நிறைவேற்றுத்துறை தெரிவு செய்யப்படுவது,
   (1) சனாதிபதி அரசாங்க முறையிலாகும் (2) பாராளுமன்ற அரசாங்க முறையிலாகும்
   (3) ஒற்றையாட்சி அரசாங்க முறையிலாகும் (4) சமஷ்டி அரசாங்க முறையிலாகும்

10. ஒரு நாட்டின் அடிப்படைச் சட்டமாக அமைவது,
   (1) அரசியல் யாப்புச் சட்டம் (2) குடியியல் சட்டம்
   (3) குற்றவியல் சட்டம் (4) நிர்வாகச் சட்டம்

11. “மகிழ்ச்சிகரமானதும் கௌரவமானதுமான வாழ்க்கையை நோக்காகக் கொண்ட அமைப்பே அரசு” என்ற கருத்தை வெளியிட்டவர்,
(1) பேராசிரியர் காணர் (2) ஆபிரகாம் இலிங்கன்
(3) சீலர் (4) அரிஸ்ரோட்டில்

12. இலங்கையில் இரு மாவட்டங்களை மட்டும் கொண்ட தேர்தல் மாவட்டமாக அமைவது,
(1) கொழும்பு தேர்தல் மாவட்டம் (2) மட்டக்களப்புத் தேர்தல் மாவட்டம்
(3) யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம் (4) கம்பஹா தேர்தல் மாவட்டம்

13. சனாதிபதி அரசாங்க முறையொன்றில் நிறைவேற்று அதிகாரத்தைச் செயற்படுத்துபவர்,
(1) சனாதிபதி (2) பிரதமர்
(3) முதலமைச்சர் (4) பிரதம நீதியரசர்

14. கீழ்வருனவற்றுள் பண்பாட்டுரீதியான கடமைகளுள் ஒன்றாக அமைவது,
(1) பொதுச் சொத்துக்களைப் பாதுகாத்தல் (2) சுற்றாடலைப் பாதுகாத்தல்
(3) அரசியல் யாப்பினைப் பாதுகாத்தல் (4) அரசுக்குரிய வரியைச் செலுத்துதல்

15. பிரசைகளின் வெளிநடத்தைக் கோலத்தைக் கட்டுப்படுத்துவதற்காக அரசால் நடைமுறைப் படுத்தப்படும் நிபந்தனைகள்
(1) சட்டவாட்சி எனப்படும் (2) சட்டம் எனப்படும்
(3) அரசியல் சட்டம் எனப்படும் (4) சமாதானம் எனப்படும்

16. ஐரோப்பாவில் ஆரம்பத்தில் தோன்றிய தேசிய அரசுகளாக அமைவன,
(1) இங்கிலாந்து, பிரான்ஸ் (2) ஜேர்மனி, இத்தாலி
(3) பிரான்ஸ், போர்த்துக்கல் (4) ஸ்பானியா, ஜேர்மனி

17. பின்வருவனவற்றுள் பிரசைகள் மீதான அரசின் பொறுப்புக்களில் **உள்ளடங்காதது,**
(1) அரசியல் யாப்பிற்கு மதிப்பளித்தல்.
(2) அரச நிதியைப் பயன்படுத்தும்போது வெளிப்படைத்தன்மையைப் பேணுதல்.
(3) நாட்டின் வளங்களை நியாயமாகப் பகிர்ந்தளித்தல்.
(4) அரசியல் யாப்பிற்கமைய செயற்படுதல்.

18. இருவகையான அரசாங்கங்களினால் செயற்படுத்தப்படும் ஆட்சிமுறை,
(1) ஒற்றையாட்சி (2) கூட்டாட்சி (3) பாராளுமன்ற ஆட்சி (4) ஜனாதிபதி ஆட்சி

19. சனநாயக சமூகமொன்றில் ஆட்சி தொடர்பான விவகாரங்களை மேற்கொள்வதற்கு மக்களுக்கு இருக்க வேண்டிய அதிகாரமாக அமைவது,
(1) வாக்குரிமை (2) அடிப்படை உரிமை (3) மனித உரிமை (4) இறைமை

20. பின்வருவனவற்றுள் சனநாயக வாழ்க்கைமுறையின் பண்பாக அமைவது,
(1) தேர்தல் தொகுதி முறை.
(2) நீதித்துறைச் சுதந்திரம் பேணப்படுதல்.
(3) கலந்துரையாடல் மூலம் தீர்மானங்களை மேற்கொள்ளல்.
(4) போட்டிக் கட்சிமுறை.

(20x2= 40 புள்ளிகள்)

## பகுதி - II

➢ **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

1. (1) சனநாயகம் தொடர்பாக வரைவிலக்கணங்களை முன்வைத்த இரு அறிஞர்களைக் குறிப்பிடுக.
   (2) அரசின் மூலக் கூறுகள் இரண்டு தருக.
   (3) தேசிய அரசின் தோற்றத்துக்கான காரணிகள் இரண்டு தருக.
   (4) தற்கால அரசுகளில் செயற்படும் அரசாங்க வகைகள் இரண்டினைக் குறிப்பிடுக.
   (5) பிரஜைகளின் பிரதான கடமைகளின் இரு வகைகளைக் குறிப்பிடுக.
   (6) சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலின் பண்புகள் இரண்டு தருக.
   (7) சட்டவாட்சியின் நடைமுறைப் பண்புகள் இரண்டினைக் குறிப்பிடுக.
   (8) ஒரு கட்சிமுறை நிலவும் நாடுகளுக்கு இரண்டு உதாரணங்கள் குறிப்பிடுக.
   (9) இறைமை என்பதனுள் உள்ளடங்கும் விடயங்கள் இரண்டு தருக.
   (10) தேர்தல் தொகுதிகளைப் பிரிக்கும்போது பிரதான அளவீட்டு நியதிகளாகப் பயன்படுத்தப்படும் விடயங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

(20x2= 40 புள்ளிகள்)

2. (i) சனநாயகம் தொடர்பாக வரைவிலக்கணம் ஒன்றினைக் குறிப்பிடுக.
   (ii) நேரடி சனநாயக ஆட்சியினைத் தற்காலத்தில் நடைமுறைப்படுத்துவதில் உள்ள சவால்கள் மூன்றினைக் குறிப்பிடுக.
   (iii) (a) சனநாயக ஆட்சியின் பண்புகள் இரண்டினைக் குறிப்பிடுக.
   (b) மேலே (a)இல் குறிப்பிட்ட பண்பில் ஒரு பண்பினை விளக்குக.

(2+3+2+3= 10 புள்ளிகள்)

3. (i) அரசியல் கட்சி முறையின் அனுகூலங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
   (ii) சனநாயக ஆட்சி வெற்றிபெறுவதற்கு எதிர்க்கட்சியினால் ஆற்ற வேண்டிய கடமைகள், பொறுப்புக்கள் மூன்றினைக் குறிப்பிடுக.
   (iii) (a) சனநாயக ஆட்சிமுறை இடம்பெறும் ஒரு நாட்டில் அரசியல் யாப்பிற்கமைய செயற்படுவதால் கிடைக்கும் நன்மைகள் இரண்டினைக் குறிப்பிடுக.
   (b) அதில் ஒரு நன்மையினை விளக்குக.

(2+3+2+3= 10 புள்ளிகள்)

4. (i) அரசின் பிரதான வகைகள் இரண்டினைக் குறிப்பிடுக.
   (ii) தேசிய அரசுகள் பலமடையக் காரணமான சிந்தனையாளர்கள் மூவரைக் குறிப்பிடுக.
   (iii) (a) அரசாங்கத்தின் மூன்று துறைகளைக் (கூறுகள்) குறிப்பிடுக.
   (b) மேலே (a) இல் குறிப்பிட்ட துறைகளில் ஒன்றின் செயற்பாட்டை விளக்குக.

(2+3+2+3= 10 புள்ளிகள்)

5. (i) பாராளுமன்ற அரசாங்க முறையின் பண்புகள் இரண்டினைக் குறிப்பிடுக.
   (ii) சட்டரீதியான கடமைகளுக்கு மூன்று உதாரணங்கள் குறிப்பிடுக.
   (iii) (a) சனநாயக ஆட்சி முறை வெற்றிபெற அவசியமான காரணிகள் இரண்டினைக் குறிப்பிடுக.
   (b) மேலே (a) இல் குறிப்பிட்ட காரணிகளில் ஒன்றை விளக்குக.

(2+3+2+3= 10 புள்ளிகள்)

## பகுதி - I

➢ **சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

1. இலங்கையில் மாகாண ஆளுநரின் பதவிக்காலம்,
   (1) மூன்று வருடங்களாகும் (2) நான்கு வருடங்களாகும்
   (3) ஐந்து வருடங்களாகும் (4) ஆறு வருடங்களாகும்

2. இலங்கையில் செயற்படும் மாநகரசபையின் பிரதானி,
   (1) ஆணையாளர் (2) செயலாளர்
   (3) நகரபிதா (4) தவிசாளர்

3. ஒற்றையாட்சியின் பண்பு ஒன்றாகக் கருதப்பட **முடியாதது,**
   (1) ஆட்சியதிகாரம் மத்தியரசால் மட்டும் நடைமுறைப்படுத்தப்படல்.
   (2) அதிகாரப் பன்முகப்படுத்தல் இடம்பெறுதல்
   (3) பிராந்திய அலகுகளுக்கு மத்தியரசினால் வழங்கப்பட்ட அதிகாரங்களை மீளப்பெறுதல்.
   (4) சட்டவாக்கத்துறையில் மேல்சபை ஒன்று காணப்படுதல்.

4. மாகாண ஆளுநரை நியமிக்கும் அதிகாரம் பெற்றவர்,
   (1) முதலமைச்சர் (2) ஜனாதிபதி
   (3) பிரதமர் (4) பிரதம நீதியரசர்

5. மாகாணசபை ஒன்றின் அமைச்சரவையானது, முதலமைச்சர் உட்பட,
   (1) மூன்று அமைச்சர்களைக் கொண்டது. (2) நான்கு அமைச்சர்களைக் கொண்டது
   (3) ஐந்து அமைச்சர்களைக் கொண்டது. (4) ஆறு அமைச்சர்களைக் கொண்டது.

6. ஐக்கிய அமெரிக்காவில் மாநில அரசுக்குரிய அதிகாரமாக **அமையாதது,**
   (1) கல்வி (2) சுகாதாரம்
   (3) தேசிய பாதுகாப்பு (4) வீடமைப்பு

7. மாகாண முதலமைச்சரை நியமிக்கும் அதிகாரமாக கொண்டவர்,
   (1) ஜனாதிபதி (2) பிரதம மந்திரி
   (4) பிரதம செயலாளர் (4) ஆளுனர்

8. ஐக்கிய அமெரிக்க சட்டத்துறை அழைக்கப்படுவது,
   (1) காங்கிரஸ் எனவாகும் (2) பாராளுமன்றம் எனவாகும்
   (3) சமஸ்டி பேரவை எனவாகும் (4) பிரதிநிதிகள் சபை எனவாகும்

9. சுவிட்சர்லாந்தின் கன்ரன்களுக்குரிய அதிகாரமாக அமைவது,
   (1) வெளிவிவகாரம் (2) பெருந்தெருக்கள்
   (3) பாதுகாப்பு நடவடிக்கை (4) வெளிநாட்டு ஒப்பந்தம்

10. சுவிட்சர்லாந்தின் மத்திய அரசுக்கும் கன்ரன்களுக்கும் இடையே அதிகாரம் தொடர்பில் ஏற்படக் கூடிய பிரச்சினையைத் தீர்க்கும் நிறுவனம்,
    (1) உயர் நீதிமன்றம் (2) சமஷ்டி சபை
    (3) சமஷ்டி பேரவை (4) செனட் சபை

11. மத்திய அரசின் அதிகாரங்கள் அரசியல் யாப்பின் மூலம் பிராந்திய ஆட்சி அலகுகளுக்கு ஒப்படைக்கப்படுவது,

(1) அதிகாரத்தைப் பகிர்ந்தளித்தல் எனப்படும்
(2) அதிகாரத்தைப் பன்முகப்படுத்தல் எனப்படும்
(3) அதிகாரக் குவிப்பு எனப்படும்
(4) அதிகாரத்தைக் கைவிடுல் எனப்படும்

12. மாகாண சபையின் பதவிக்காலம்,

(1) மூன்று வருடங்களாகும்
(2) நான்கு வருடங்களாகும்
(3) ஐந்து வருடங்களாகும்
(4) ஆறு வருடங்களாகும்

13. இலங்கையில் மாவட்ட மட்டத்தில் நிர்வாக அதிகாரத்தைச் செயற்படுத்துபவர்,

(1) கிராம அலுவலர்
(2) பிரதேச செயலாளர்
(3) அமைச்சின் செயலாளர்
(4) மாவட்ட செயலாளர்

14. சமஷ்டி ஆட்சிமுறை நிலவும் நாடாக அமைவது,

(1) ஐக்கிய அமெரிக்கா
(2) ஐக்கிய இராச்சியம்
(3) பிரான்ஸ்
(4) இலங்கை

15. ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதி செனட் சபையின் அனுமதியைப் பெற்று செயற்படுத்த **தேவையற்ற** விடயம்,

(1) வெளிநாட்டுப் பயணம்
(2) போர்ப்பிரகடனம்
(3) வெளிநாட்டுத் தூதுவர் நியமனம்
(4) உயர்நீதிமன்ற நீதிபதிகள் நியமனம்

16. சுவிஸ்லாந்தின் சட்டத்துறை அழைக்கப்படுவது,

(1) சமஷ்டிப் பேரவை
(2) தேசிய சபை
(3) அரச சபை
(4) சமஷ்டி சபை

17. ஐக்கிய அமெரிக்காவில் மத்திய அரசுக்கும் மாநில அரசுகளுக்கும் இடையில் அதிகாரம் தொடர்பில் ஏற்படக்கூடிய பிரச்சினைகளைத் தீர்க்கும் நிறுவனம்,

(1) பிரதிநிதிகள் சபை
(2) செனட் சபை
(3) உயர்நீதிமன்றம்
(4) சமஷ்டி சபை

18. சமஷ்டி ஆட்சி வெற்றி பெறுவதற்கான இயல்புகளில் **அடங்காதது,**

(1) மத ரீதியான பாரபட்சம்
(2) அரசியல் யாப்புக்கு ஏற்ப செயற்படுதல்
(3) இனக்குழுக்கள் தேசிய உணர்வுடன் செயற்படுதல்
(4) நிதிப் பங்கீடு

19. இலங்கையில் அதிகாரப் பங்கீடு தொடர்பில் 1957ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட முயற்சியாக அமைவது,

(1) பண்டா - செல்வா ஒப்பந்தம்
(2) போர் நிறுத்த ஒப்பந்தம்
(3) டட்லி-செல்வா ஒப்பந்தம்
(4) இலங்கை- இந்திய ஒப்பந்தம்

20. ஐக்கிய அமெரிக்காவின் அரசியல் யாப்பு உருவாக்கப்பட்டஆண்டு,

(1) கி.பி. 1757
(2) கி.பி.1767
(3) கி.பி. 1777
(4) கி.பி.1787

## பகுதி - II

➢ **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

1. (1) ஆட்சி நடவடிக்கைளில் அதிகாரத்தின் வகைகள் இரண்டைக் குறிப்பிடுக.
   (2) சமஷ்டி அரசொன்றின் பண்புகள் இரண்டை ஐத் தருக.
   (3) அனுராதபுர காலத்தில் பண்டுகாபய மன்னன் கிராம நிர்வாகத்திற்காக நியமித்த அதிகார பதவிகள் இரண்டையும் தருக.
   (4) இலங்கையில் மாகாணசபை உருவாக்கத்திற்குக் காரணமான இரண்டு சட்ட ஏற்பாடுகள் இரண்டைத் தருக.
   (5) மாகாணசபையின் நிறுவன கட்டமைப்பின் பிரதான அலகுகள் இரண்டு குறிப்பிடுக
   (6) சுவஸ்லாந்தின் சட்டத்துறையான சமஷ்டிப் பேரவையின் இரு மன்றங்களும் எவை?
   (7) ஐக்கிய அமெரிக்காவின் மாநில அரசுக்குரிய அதிகாரங்கள் இரண்டைத் தருக.
   (8) இலங்கையில் செயற்படும் உள்ளூராட்சி மன்றங்கள் இரண்டைத் தருக.
   (9) ஐக்கிய அமெரிக்கா, சுவிஸ்லாந்து ஆகியவற்றின் பிராந்திய அரசுகளின் எண்ணிக்கைகளை முறையே குறிப்பிப்பிடுக.
   (10. மத்திய அரசுக்குரிய அதிகாரம் பிராந்திய ஆட்சி நிறுவகங்களுக்கு ஒப்படைக்கும்போது பின்பற்றப்பட வேண்டிய இரண்டு முறைகளும் எவை?

02. (i) நவீன அரசுகளில் அதிகாரப் பங்கீடு மேற்கொள்ளப்படுவதற்கான காரணங்கள் இரண்டைத் தருக. (02 புள்ளிகள்)
    (ii) சமஷ்டி ஆட்சி நிலவும் நாடுகள் மூன்றைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)
    (iii) (a) அரசாங்கத்தின் சட்டத்துறையின் அதிகாரங்கள் இரண்டைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)
    (iv) (b) மேலே குறிப்பிட்ட அதிகாரங்களில் ஒன்றை விளக்குக. (03 புள்ளிகள்)

03. (i) இலங்கையில் முதலில் உருவாக்கப்பட்ட மாநகரசபைகள் எவை? (02 புள்ளிகள்)
    (ii) மாகாணசபையில் அதிகாரங்கள் பகிரப்பட்டுள்ள நிரல் மூன்றையும் தருக. (03 புள்ளிகள்)
    (iii) (a) மாகாணசபை ஆளுநரின் அதிகாரங்கள் இரண்டைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)
    (எ) (b) மேலே குறிப்பிட்ட அதிகாரங்களில் ஒன்றை விளக்குக. (03 புள்ளிகள்)

# 10 - 3 பன்மைப் பண்பாட்டுச் சமூகம் தரம் - 10

## பகுதி - I

➢ **சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத்தெரிவு செய்க.**

1. இலங்கையில் பன்மைப் பண்பாட்டுச் சமூகம் உருவாகுவதில் செல்வாக்குச் செலுத்திய குடிபெயர்வு தொடர்பான காரணி,
   (1) மேலைத்தேச ஐரோப்பியர் வருகை (2) மதுராபுரி இளவரசியின் வருகை
   (3) சேனன் குத்திகனின் ஆக்கிரமிப்பு (4) சீனர் வர்த்தக நோக்கோடு வருகை

2. நல்லாட்சி தொடர்பில் பிரசைகள் பின்பற்ற வேண்டிய சமூக பண்பாட்டு அம்சமாக அமைவது,
   (1) தொழிற்சங்கத்தை நிறுவிச் செயற்படுதல்
   (2) தாம் விரும்பிய சட்டபூர்வ தொழிலை மேற்கொள்ளல்.
   (3) தமக்கு விருப்பமான அரசியல் கருத்தைப் பின்பற்றல்.
   (4) தாம் விரும்பும் சமயத்தைப் பின்பற்றல்.

3. பன்மைப் பண்பாட்டு சமூகமாக இலங்கை உருவாகுவதில் பங்களிப்புச் செய்த அமைவிடம் தொடர்பான காரணி?
   (1) சேனன் குத்திகன் ஆக்கிரமிப்பு.
   (2) இந்து சமுத்திரத்தின் மத்தியில் அமைந்திருத்தல்.
   (3) விஜனும் தோழர்களும் வருகை தந்தமை.
   (4) இந்திய தொழிலாளர்கள் அழைத்து வரப்பட்டமை.

4. நாட்டில் சமூக நீதி வீழ்ச்சியடைவதில் தாக்கம் செலுத்தும் காரணி **அல்லாதது,**
(1) அரச நிருவாகம் வினைத்திறன் அற்று இருத்தல்.
(2) ஆட்சியாளர்கள் பொறுப்புக் கூறலுடன் செயற்படுதல்.
(3) இலஞ்சம் ஊழல் உயர்வடைந்து காணப்படல்.
(4) அரச சேவை அரசியல் மயமாக்கப்பட்டிருத்தல்.

5. பன்மை பண்பாட்டு சமூகத்தில் பிரசைகள் வளர்த்துக் கொள்ள வேண்டிய பண்பு,
(1) வேற்று சமயத்தைப் பின்பற்றுதல் (2) ஓரினத்தின் உரிமைகளைப் பாதுகாத்தல்
(3) பிறரின் கருத்துக்களுக்கு மதிப்பளிக்காமை (4) ஏனையோருடன் மோதல் ஏற்படாதவாறு வாழுதல்

6. நல்லாட்சியின் அடிப்படைப் பண்பு **அல்லாதது,**
(1) ஊடக சுதந்திரத்தைப் பாதுகாத்தல்
(2) நீதித்துறையின் சுதந்திரத்தைப் பாதுகாத்தல்
(3) வெளிப்படைத் தன்மையற்ற வகையில் செயற்படுதல்
(4) வளங்களை வினைத்திறனான வகையில் பயன்படுத்தல்.

7. சமூகம் ஒன்றில் பல்வேறு பண்பாடுகளுக்கும் உரிய மக்கள் குழுக்கள் ஒற்றுமையாக வாழும் சமூகம் அழைக்கப்படும் விதம்,
(1) பன்மத சமூகம் (2) பல் பண்பாட்டுச் சமூகம்
(3) பல்லினச் சமூகம் (4) பல்தேசிய சமூகம்

8. "ஓர் இனத்துக்கு ஓர் அரசு" என்ற, எண்ணக்கருவை அடிப்படையாகக் கொண்டது,
(1) தேசிய அரசு (2) நிலமானிய அரசு
(3) சமஷ்டி அரசு (4) ஜனநாயக அரசு

9. "அ" நிரலில் பன்மைப் பண்பாட்டு சமூத்தில் காணப்படும் சமயங்களும்"ஆ" நிரலில் அச்சமயங்க ளுக்குரிய விழாக்களும் தரப்பட்டுள்ளது. இவற்றைத் தொடர்புபடுத்தும்போது கிடைக்கும் சரியான விடைத் தொகுதி,

| **அ - நிரல்** | **ஆ- நிரல்** |
|---|---|
| (1) பௌத்தம் | A- தீபாவளி |
| (2) இந்து | B- றம்ழான் |
| (3) இஸ்லாம் | C- பெரிய வெள்ளி |
| (4) கிறிஸ்தவம் | D-வெசாக் |

(1) ABCD (2) BCAD (3) DABC (4) DCBA

10. பின்வரும் கூற்றுக்களில் பன்மைப் பண்பாட்டு சமூகத்தின் சிறப்பான செயற்பாட்டுக்கு அடிப்படையாக அமையும் காரணிகளாக அமைவது,

A- பிற சமயங்களோடு இடையூறு ஏற்படுத்தாது செயற்படல்
B- அனைத்து மக்களும் பிற கலாசாரங்களை மதித்தல்
C- சமூகங்களிடையே முரண்பாடுகளை ஏற்படுத்தல்
D- புரிந்துணர்வு அடிப்படையில் செயற்படல்

(1) ABC (2) ADC (3) BCD (4) ABD

## பகுதி - II

1. (1) பல்பண்பாட்டுச் சமூகத்தின் கூறுகள் இரண்டைக் குறிப்பிடுக.
   (2) இலங்கையில் பின்பற்றப்படும் இந்து மதம் தவிர்ந்த ஏனைய இரு மதங்களைக் குறிப்பிடுக.
   (3) இலங்கையில் பன்மை பண்பாட்டுச் சமூகம் உருவாகுவதில் செல்வாக்குச் செலுத்தும் ஆக்கிரமிப்புத் தொடர்பான காரணிகள் இரண்டைக் குறிப்பிடுக.
   (4) சமூகநீதி வீழ்ச்சியடைவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் இரண்டைக் குறிப்பிடுக.
   (5) "வேற்றுமைக்கு மத்தியில் ஒற்றுமையை ஏற்படுத்துதல்" என்பதை இலக்காகக் கொண்டு விளங்கும் நாடுகள் இரண்டைக் குறிப்பிடுக.
   (6) பன்மைப் பண்பாட்டுச் சமூகத்தில் மக்கள் ஒற்றுமையுடன் செயற்படுவதால் ஏற்படும் நன்மைகள் இரண்டைக் குறிப்பிடுக.
   (7) பல்பண்பாட்டுச் சமூகம் என்பதற்கு வரைவிலக்கணம் கூறிய அறிஞர்கள் இருவரின் பெயர்களைக் குறிப்பிடுக.
   (8) இலங்கையில் இஸ்லாமிய மதத்தவரினதும் பௌத்த மதத்தவரினதும் வழிபாட்டுத் தலங்கள் அழைக்கப்படும் பெயர்களை **முறையே** குறிப்பிடுக.
   (9) நல்லாட்சி தொடர்பில் பிரசைகள் மதிப்பளிக்க வேண்டிய அரசியல் விடயங்கள் இரண்டைக் குறிப்பிடுக.
   (10) பல்பண்பாட்டைப் பின்பற்றும் நாடுங்கள் இரண்டைக் குறிப்பிடுக.

2. (i) பன்மைப் பண்பாட்டுச் சமூகம் என்பதை வரைவிலக்கணப்படுத்துக. (02 புள்ளிகள்)
   (ii) பன்மைப் பண்பாட்டுச் சமூகத்தின் அடிப்படைப் பண்புகள் மூன்றைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)
   (iii) (a) இலங்கையில் பல்பண்பாட்டு சமூகம் உருவாகுவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் இரண்டைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)
   (b) மேலே குறிப்பிட்ட காரணிகளில் ஒன்றை விளக்குக. (03 புள்ளிகள்)

3. (i) நல்லாட்சியின் அடிப்படைப் பண்புகள் இரண்டைத் தருக.
   (ii) பன்மைப் பண்பாட்டுச் சமூகத்தின் சிறப்பான செயற்பாட்டுக்குப் பிரசை ஒருவரால் விருத்தி செய்யப்பட வேண்டிய பண்புகள் மூன்றைக் குறிப்பிடுக.
   (iii) (a) பன்மைப் பண்பாட்டுச் சமூகத்தில் நல்லாட்சியைச் செயற்படுத்துவதன் மூலம் கிடைக்கும் நன்மைகள் இரண்டைக் குறிப்பிடுக.
   (b) மேலே குறிப்பிட்ட நன்மைகளில் ஒன்றைக் குறிப்பிடுக.

## 10 - 4 பொருளாதார முறைமைகளும், தொடர்புகளும் தரம் - 10

## பகுதி - I

➢ **பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

1. மனிதர்கள் தமது செயற்பாடுகளை மேற்கொள்வது தொடர்பில் அத்தியாவசியமான அம்சங்கள் அழைக்கப்படும் விதம்,
   (1) தேவை (2) விருப்பம்
   (3) அருமை (4) சேவை

2. வளங்கள் தேவையிலும் பார்க்க குறைவாகக் காணப்படும் தன்மை எவ்வாறு அழைக்கப்படும்?
   (1) விருப்பம் (2) அருமை
   (3) அமையச் செலவு (4) தேவை

3. உழைப்பு நுட்பம் என்பதனாற் கருதப்படுவது,
   (1) உற்பத்திச் செயற்பாட்டில் இயந்திர சாதனங்களை அதிகம் பயன்படுத்தல்.
   (2) உற்பத்திச் செயற்பாட்டில் செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தும் நுட்பமாகும்.
   (3) உற்பத்திச் செயற்பாட்டில் மனித வலுவை அதிகம் பயன்படுத்தல்
   (4) உற்பத்திச் செயற்பாட்டில் இயற்கை வளங்களை அதிகம் பயன்படுத்தல்

4. பின்வருவனவற்றுள் பொருளாதாரமல்லாப் பண்டமாக அமைவது,
(1) உணவு (2) உடை
(3) மருந்து (4) சூரிய ஒளி

5. நிலம் என்னும் உற்பத்திக் காரணிக்கான கொடுப்பனவாக அமைவது,
(1) வாடகை (2) கூலி
(3) வட்டி (4) இலாபம்

6. ஏதாவது ஒரு பொருளை உற்பத்தி செய்வதற்குப் பயன்படுத்தப்படும் உள்ளீடுகள் எவ்வாறு அழைக்கப்படும்?
(1) நுகர்வுப் பொருட்கள் (2) இடைநிலைப் (பொருட்கள்
3) மூலதனப் பொருட்கள் (4) பொருளாதாரப் பொருட்கள்

7. அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு விலைப்பொறிமுறை மூலம் தீர்வு காணும் பொருளாதாரம் எது?
(1) சந்தைப் பொருளாதாரம் (2) சமவுடமைப் பொருளாதாரம்
(3) கலப்புப் பொருளாதாரம் (4) மாறுநிலைப் பொருளாதாரம்

8. முதலாளித்துவப் பொருளாதாரத்தில் சந்தை இயல்பினை அதிகம் கொண்டுள்ள நாடுகளாவன,
(1) சீனா, ரஷ்யா (2) போலந்து ருமேனியா
(3) சிங்கப்பூர், தென்கொரியா (4) ரஷ்யா , ருமேனியா

9. இலங்கையில் திறந்த பொருளாதாரக் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு எது?
(1) 1948 (2) 1972 (3) 1977 (4) 1978

10. புத்தாயிரமாம் ஆண்டு அபிவிருத்தி இலங்குகள் என்பதை உருவாக்கிய சர்வதேச அமைப்பு,
(1) ஐக்கிய நாடுகள் சபை (2) சர்வதேச சங்கம்
(3) உலக வங்கி (4) சர்வதேச நாணய நிதி

11. தெற்காசிய முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கையில் அங்கம் வகிக்கும் நாடுகள் எவை?
(1) இலங்கை, இந்தியா, பூட்டான் (2) இந்தியா, இலங்கை, மியன்மார்
(3) பூட்டான், நேபாளம், தாய்லாந்து (4) மாலைதீவு, இலங்கை, மியன்மார்

12. உலகமயமாதல் காரணமாக இலங்கை எதிர்நோக்கும் பாதகமான விடயங்களுள் **அடங்காதது?**
(1) மூளைசாலிகளின் வெளியேற்றம் துரிதமடைதல்.
(2) தேசிய வளங்கள் சுரண்டப்படுதல்.
(3) தேசிய உற்பத்திக் காரணிகளுக்கு அதிக கேள்வி உருவாகுதல்.
(4) வெளிநாட்டுக் கடன்களைக் கொண்டு பிழைக்க வேண்டியிருத்தல்.

13. சமீபகாலமாக அதிகமாகக் கலந்துரையாடப்படுகின்ற அபிவிருத்தியாக அமையக் கூடியது?
(1) சமூக அபிவிருத்தி (2) பண்பாட்டு அபிவிருத்தி
(2) பொருளாதார அபிவிருத்தி (4) நிலையான அபிவிருத்தி

14. ஒரு மத்தியமயப்படுத்தப்பட்ட திட்டமிடல் குழுவொன்றின் மூலம் அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் பொருளாதாரம்,
(1) சந்தைப் பொருளாதாரம் (2) சமவுடமைப் பொருளாதாரம்
(3) நிலைமாறு பொருளாதாரம் (4) கலப்புப் பொருளாதாரம்

15. உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களைப் பாரியளவில் நுகர்வோருக்கு அல்லது இடைநிலை வர்த்தகர் களுக்குக் கொண்டு செல்லும் செயற்பாடு,
(1) மொத்த விற்பனை (2) சில்லறை விற்பனை
(3) கடன் விற்பனை (4) காசு விற்பனை

## பகுதி - II

➢ **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

1. (1) அடிப்படைத் தேவைகள் இரண்டு தருக.
   (2) பொருளாதாரத்தில் அருமை ஏற்படுவதற்கான இரு காரணிகளைக் குறிப்பிடுக.
   (3) உற்பத்தி தொடர்பாகப் பயன்படுத்தக் கூடிய நுட்பங்கள் இரண்டு தருக.
   (4) விருப்பங்கள், தேவைகளை அடிப்படையாகக் கொண்ட பொருட்கள் சேவைகளின் இரு பிரதான பிரிவுகளும் எவை?
   (5) சேவைகள் உற்பத்திக்கு இரு உதாரணங்கள் தருக.
   (6) வர்த்தக நடவடிக்கைகளின் இரு பிரதான பிரிவுகளும் எவை?
   (7) இடைநிலைப் பொருட்களுக்கு இரு உதாரணங்கள் தருக.
   (8) முதலாளித்துவப் பொருளாதார முறை நிலவும் இரு நாடுகளைத் தருக.
   (9) உலகமயமாதலுக்கு ஆதரவாகச் செயற்படும் சர்வதேச அமைப்புக்கள் இரண்டு தருக.
   (10) உலகமயமாதலுக்கு ஆதரவாகச் செயற்படும் பொருளாதாரக் குழுக்கள் இரண்டு தருக.

2. (i) அருமை என்றால் என்ன? (02 புள்ளிகள்)
   (ii) உற்பத்தியில் ஈடுபடும் மூன்று துறையினரையும் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)
   (iii) (a) பொருளாதாரமொன்றில் எதிர்நோக்கப்படும் அடிப்படைப் பொருளாதார பிரச்சினைகள் இரண்டினைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)
   (b) அவற்றுள் ஒரு பிரச்சினையை விளக்குக. (03 புள்ளிகள்)

3. (i) பொருளாதாரப் பண்டங்கள் இரண்டு தருக. (02 புள்ளிகள்)
   (ii) பொருளாதாரமல்லாப் பண்டங்கள் பொருளாதாரப் பண்டங்களாக மாற்றப்படும் சந்தர்ப்பங்கள் மூன்று தருக. (03 புள்ளிகள்)
   (iii) (a) பொருளாதாரமொன்றில் இடம்பெறும் அடிப்படைச் செயற்பாடுகள் இரண்டினைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)
   (b) அவற்றுள் ஒன்றினை விளக்குக. (03 புள்ளிகள்)

4. (i) உழைப்பு வழங்கப்படும் முறைக்கேற்ப அவற்றின் இரு பிரிவுகளும் எவை? (02 புள்ளிகள்)
   (ii) உற்பத்திக் காரணிகளுக்காக வழங்கப்படும் கொடுப்பனவுகள் மூன்றினைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)
   (iii) (a) உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் பயன்படுத்தப்படும் முறைக்கேற்ப அவற்றின் பிரிவுகள் இரண்டைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)
   (b) அப்பிரிவுகளில் ஒன்றினை விளக்குக. (03 புள்ளிகள்)

5. (i) மூலதனப் பொருட்களுக்கு இரு உதாரணங்கள் தருக. (02 புள்ளிகள்)
   (ii) பொருளாதாரத்தில் இடம்பெறும் உற்பத்தித் துறைகள் மூன்றைக் குறிப்பிடுக (03 புள்ளிகள்)
   (iii) (a) இலங்கையின் பொருளாதாரத்தில் வறிய மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்த அறிமுகப்படுத்தப்பட்ட வேலைத் திட்டங்கள் இரண்டு தருக. (02 புள்ளிகள்)
   (b) அவற்றள் ஒன்றினை விளக்குக. (03 புள்ளிகள்)

6. (i) பொருளாதார முறை என்றால் என்ன? (02 புள்ளிகள்)
   (ii) நவ லிபரல் வாத பொருளாதார முறையின் அடிப்படைப் பண்புகள் மூன்று தருக. (03 புள்ளிகள்)
   (iii) (a) உலகில் காணப்படும் பிரதான பொருளாதார முறைகள் இரண்டைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)
   (b) அவற்றுள் ஒரு பொருளாதார முறையை விளக்குக. (03 புள்ளிகள்)

7. (i) சமூக அபிவிருத்தி குறிகாட்டிகள் இரண்டைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)
   (ii) உலகமயமாதலின் விசேட பண்புகள் மூன்றினைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)
   (iii) (a) உலகமயமாதல் காரணமாக இலங்கை அனுபவிக்கும் சாதகமான விளைவுகள் இரண்டைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)
   (b) அவற்றுள் ஒன்றினை விளக்குக. (03 புள்ளிகள்)

## பகுதி - I

➢ **பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

1. பின்வருவனவற்றுள் சர்வதேச மோதல் வகைக்குள் உள்ளடங்குவது?
(1) குழுக்களுக்கிடையிலான மோதல் (2) வெளிப்படையான மோதல்
(3) கொள்கை ரீதியான மோதல் (4) உள்ளக மோதல்

2. வெற்றி - வெற்றி (Win - Win) தீர்வை நோக்காகக்கொண்ட மோதல் தீர்வு முறை?
(1) கலந்துரையாடல் (2) இணக்கப்பாடு
(3) மீட்கும்முறை (4) பேரம் பேசல்

3. மோதலைத் தீர்க்கும் நடுநிலைமையாளரிடம் காணப்பட வேண்டிய பிரதான பண்புகள்,
(1) இரக்கமுடையவராகவிருத்தல் (2) பொறுமையுடையவராகவிருத்தல்
(3) பக்கச்சார்பற்றவராகவிருத்தல் (4) அறச்சிந்தனையுடையவராகவிருத்தல்

4. மோதல் ஏற்படுவதில் தாக்கம் செலுத்தும் உளவியல் காரணிகளில் ஒன்று,
(1) நடத்தை (2) சந்தர்ப்பம்
(3) மனப்பாங்கு (4) திறன்கள்

5. மோதல் தீர்வு செயன்முறையில் மரபுவழிச் செயற்பாடாக அமைவது,
(1) தீர்ப்புக் கூறல் (2) உடன்படல்
(3) ஆலோசனையும் வழிகாட்டலும் 4) பேரம் பேசுதல்

6. மோதல் தீர்வின்போது கலந்துரையாடல் முறையைப் பயன்படுத்துவதால் இரு தரப்பினருக்கும் ஏற்படும் நன்மை,
(1) முறைப்பாட்டாளருக்கு வெற்றி கிடைத்தல் (2) வெற்றி -வெற்றி தீர்வு கிடைத்தல்
(3) பாதிக்கப்பட்டவருக்கு வெற்றி கிடைத்தல் (4) குறைந்த காலத்தில் தீர்வு கிடைத்தல்

7. மோதல் தீர்வில் மத்தியஸ்தம் வகிக்கும் முறையைப் பின்வரும் எவ்வகையான மோதலைத் தீர்ப்பதற்குப் பயன்படுத்தலாம்.
(1) நபர்களுக்கிடையிலான மோதல் (2) இனங்களுக்கிடையிலான மோதல்
(3) நாடுகளுக்கிடையிலான மோதல் (4) சமயங்களுக்கிடையிலான மோதல்

8. பின்வருவனவற்றுள் உள்நாட்டு முரண்பாடாக அமைவது,
(1) இலங்கையில் இன முரண்பாடு (2) 1 ஆம் உலக மகா யுத்தம்
(2) ரஷ்யா - உக்ரைன் யுத்தம் (4) இந்தியா - பாகிஸ்தான் யுத்தம்

9. வெற்றி - தோல்வி (Win -Lost) தீர்வு கிடைக்கும் மோதலைத் தீர்க்கும் வழிமுறை.
(1) பேச்சு வார்த்தை (2) நடுநிலையாளராகத் தலையிடல்
(3) தீர்ப்புக் கூறல் (4) காப்பாற்றும் or மீட்கும் முறை

10. மோதல் ஏற்படுவதற்கான மிக முக்கிய காரணங்களில் ஒன்று,
1) அபிலாசைகள் நிறைவேறாமை 2) இடையூறுகளை ஏற்படுத்துதல்
3) உளவியல் நிலைமை 4) இனப்பாகுபாடு

## பகுதி - II

➢ **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

01. (1) மோதலின் தனியாள் பிரதிபலிப்புக்கள் இரண்டு தருக.
(2) கல்டுங்கின் மோதல் முக்கோணத்தில் இடம்பெறும் இரு விடயங்களைக் குறிப்பிடுக.
(3) மோதலை ஏற்படுத்தும் இரு தரப்புக்களைக் குறிப்பிடுக.
(4) மோதலின் இரு பிரதான வகைகள் எவை?
(5) நுண்மையான மோதலுக்கு இரு உதாரணங்கள் தருக.
(6) மனதில் அமைதியை ஏற்படுத்திக் கொள்வதற்கான வழிமுறைகள் இரண்டு தருக.
(7) சமயக் கொள்கை மோதலுக்கான உதாரணங்கள் இரண்டு தருக.
(8) மோதல் தீர்வு தொடர்பில் தனிநபரிடம் காணப்பட வேண்டிய பண்புகள் இரண்டு தருக.
9) உடன்பாட்டின் மூலம் மோதலைத் தீர்ப்பதற்கான சந்தர்ப்பங்கள் இரண்டு தருக.
10) மோதல் தீர்வு வழிமுறைகள் இரண்டு தருக.

02. (i) மோதல் என்றால் என்ன? (02 புள்ளிகள்)
(ii) மோதலைச் சாதகமான வகையில் தீர்ப்பதனால் கிடைக்கும் நன்மைகள் மூன்று தருக. (03 புள்ளிகள்)
(iii) (a) மோதலைத் தீர்ப்பதற்கு தனிநபரிடம் காணப்பட வேண்டிய சமூகப் பண்புகள் இரண்டு தருக. (02 புள்ளிகள்)
(b) அவற்றுள் ஒன்றினை விளக்குக. (03 புள்ளிகள்)

3. (i) சர்வதேச மோதல் என்றால் என்ன? (02 புள்ளிகள்)
(ii) மோதல் ஏற்படுவதற்கான அடிப்படைக் காரணங்கள் மூன்று தருக. (03 புள்ளிகள்)
(iii) (a) தீர்ப்புக் கூறல் செயற்பாட்டின் இயல்புகள் இரண்டு தருக. (02 புள்ளிகள்)
(b) அவற்றுள் ஒன்றினை விளக்குக. (03 புள்ளிகள்)

4. (i) கலந்துரையாடல் தீர்வு முறை என்றால் என்ன? (02 புள்ளிகள்)
(ii) கலந்துரையாடல் தீர்வுமுறை பயன்படுத்தக் கூடிய சந்தர்ப்பங்கள் / முரண்பாடுகள் மூன்று தருக. (03 புள்ளிகள்)
(iii) (a) கலந்துரையாடலின் பண்புகள் இரண்டைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)
(b) அவற்றுள் ஒன்றினை விளக்குக. (03 புள்ளிகள்)

5. (i) பாடசாலையில் இடம்பெறக்கூடிய முரண்பாடுகள் இரண்டு தருக. (02 புள்ளிகள்)
(ii) பாடசாலையில் முரண்பாட்டைத் தவிர்ப்பதற்கு நீர் வளர்த்துக்கொள்ள வேண்டிய பண்புகள் மூன்று தருக. (03 புள்ளிகள்)
(iii) (a) பாடசாலையில் முரண்பாட்டைத் தீர்ப்பதற்குக் காணப்படும் குழுக்கள் இரண்டு தருக. (02 புள்ளிகள்)
(b) அவற்றுள் ஒன்றினால் மேற்கொள்ளப்படும் பணிகள் மூன்று தருக. (03 புள்ளிகள்)

**பகுதி - I**

➢ **சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

1. “சட்டம் என்பது அரசினால் செயற்படுத்தப்படும் உரிமைகள் மற்றும் கடமைகள் தொடர்பான ஒரு தொகுதியாகும்” என்று கூறியவர்?
(1) ஜோன் ஒஸ்டின் (2) நீ. எச். கிறீன் (3) கேசி. வியர் (3) ஆபிரகாம் லிங்கன்

2. சட்ட மூலாதாரம் என்பதனுள் **அடங்காதது,**
(1) அரசியல் யாப்பு (2) நீதிமன்ற தீர்ப்புக்கள் ( 3) சமயம் (4) பண்பாடு

3. ஒரு நாட்டின் அதிகாரத்தைச் செயற்படுத்தும் உயர் சட்டமாக அமைவது,
(1) குற்றவியல் சட்டம் (2) குடியியல்சட்டம் (3) அரசியல் யாப்புச் சட்டம் (4) தேசிய சட்டம்

4. பின்வருவனவற்றுள் குற்றவியல் சட்டத்தினுள் **உள்ளடங்காதது?**
(1) போதைப்பொருள் (2) கொள்ளை (3) குடும்பப் பிரச்சினை 4) கற்பழிப்பு

5. இலங்கையில் நடைமுறையில் உள்ள பொதுச் சட்டமாக அமைவது,
(1) கண்டியச் சட்டம் (2) தேசவழமைச் சட்டம்
(3) இஸ்லாமியச் சட்டம் (4) உரோமன் டச்சுச் சட்டம்

6. வடக்கு மாகாணத்தில் தமிழர்களின் சம்பிரதாயங்களின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட சட்டம்,
(1) தேசவழமைச் சட்டம் (2) கண்டியர் சட்டம் (3) முக்குவர் சட்டம் (4) தேசிய சட்டம்

7. இஸ்லாத்தின் அடிப்படை மூலாதாரங்களுள் முதன்மையாக அமைவது?
1) கியாஸ் 2) அல்குர்ஆன் 3) இஜ்மாஉ 4) அல்ஹதிஸ்

8. பிரித்தானியர் உயர் நீதிமன்றமான கோமறைக் கழகத்தில் மேன்முறையீடு செய்யும் அதிகாரத்தை நீக்கிய அரசியல் யாப்பு.
1) 1931 டொனமூர் அரசியல் யாப்பு 2) 1947 சோல்பரி அரசியல் யாப்பு
3) 1972 முதலாம் குடியரசு அரசியல் யாப்பு 4) 1978 இரண்டாம் முடியரசு அரசியல் யாப்பு

9. இலங்கையின் இறுதியானதும் அதி உயர் மேன்முறையீட்டு அதிகாரமுடைய நீதிமன்றம்,
(1) மாகாண உயர் நீதிமன்றம் (2) மாவட்ட நீதிமன்றம்
(3) நீதவான் நீதிமன்றம் (4) உயர் நீதிமன்றம்

10. உயர் நீதிமன்றத்தின் தலைவராக விளங்குபவர்,
(1) நீதி அமைச்சர் (2) பிரதம நீதியரசர் (3) சட்டமா அதிபர் (4) சபாநாயகர்

11. இலங்கையின் நீதிமன்ற அமைப்புக்களுள் 6-11 வரையான நீதிபதிகளைக் கொண்ட நீதிமன்றம்,
(1) உயர் நீதிமன்றம் (2) மேன்முறையீட்டு நீதிமன்றம்
(3) மாகாண உயர்நீதிமன்றம் (4) மாவட்ட நீதிமன்றம்

12. உயர், மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளை நியமிக்கும் அதிகாரத்தைக் கொண்டிருப்பவர்,
(1) ஆளுநர், (2) பிரதமர் (3) பிரதம நீதியரசர் (3) ஜனாதிபதி

13. இலங்கையில் மாகாண மேல்நீதிமன்றம் உருவாக்கப்படக் காரணமான சீர்திருத்தம்,
(1) 1978 ஆம் ஆண்டு இரண்டாம் குடியரசு யாப்பின் 13 ஆவது திருத்தம்.
(2) 1978 ஆம் ஆண்டு இரண்டாம் குடியரசு யாப்பின் 18 ஆவது திருத்தம்.
(3) 1978 ஆம் ஆண்டு இரண்டாம் குடியரசு யாப்பின் 19 ஆவது திருத்தம்.
(4) 1978 ஆம் ஆண்டு இரண்டாம் குடியரசு யாப்பின் 20 ஆவது திருத்தம்.

14. மேல் நீதிமன்றத்தினால் விசாரிக்க முடியாத குற்றச்செயலாக அமைவது,
(1) கடற்பரப்புக் குற்றங்கள்
(2) வான்பரப்புக் குற்றங்கள்
(3) அடிப்படை உரிமைகள் தொடர்பான பிரச்சினைகள்
(4) சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பானவை.

15. பாராளுமன்ற கட்டளைச் சட்டங்கள் மூலம் இனம் காணப்பட்ட குற்றச் செயல்கள் தொடர்பான வழக்குகளை விசாரிக்கும் அதிகாரம் கொண்ட நீதிமன்றம்.
(1) நீதவான் நீதிமன்றம் (2) மாவட்ட நீதிமன்றம்
(3) மேல் நீதிமன்றம் (4) மேன் முறையீட்டு நீதிமன்றம்

16. நீதித்துறைக்குரிய சட்டவரைவுகளைப் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்து தேவையான சட்டங்களை இயற்றுபவர்,
(1) பிரதம நீதியரசர் (2) நீதி அமைச்சர் (3) சட்டமா அதிபர் (3) சபாநாயகர்

17. சமாதான நீதவான்களை நியமிக்கும் அதிகாரம் கொண்டவர்,
(1) ஆளுநர் (2) பிரதம நீதியரசர் (3) நீதி அமைச்சர் (4) பிரதமர்

18. இலங்கையின் நீதிச்சேவை ஆணைக்குழுவின் தலைவராக விளங்குபவர்,
(1) ஜனாதிபதி (2) நீதி அமைச்சர் (3) சட்டமா அதிபர் (4) பிரதம நீதியரசர்

19. சட்டத்தரணிகளைச் சேவையிலிருந்து பதவி விலக்கும் அதிகாரத்தைக் கொண்டிருப்பவர்,
(1) பிரதம நீதியரசர் (2) சட்டமா அதிபர் (3) பிரதமர் (4) ஜனாதிபதி

20. இலங்கையின் பிரதான சட்ட அலுவலர்,
(1) சபாநாயகர் (2) சட்டமா அதிபர் (3) பிரதமநீதியரசர் (4) நீதி அமைச்சர்

21. போதியளவு சாட்சிகள் இல்லாத வழக்கில் குற்றவாளிகளை விடுதலை செய்யும் அதிகாரம் உடையவர்,
(1) ஜனாதிபதி (2) பிரதமர் (3) பிரதம நீதியரசர் (4) சட்டமா அதிபர்

22. அரசாங்க வழக்குகளின்போது தேவையான சட்ட ஆலோசனைகளை வழங்குபவர்,
(1) ஜனாதிபதி (2) சட்டமா அதிபர் (3) பிரதம நீதியரசர் (4 பிரதமர்

23. ஒம்புட்ஸ்மன் என்னும் பதவி அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு,
(1) 1972 ஆம் ஆண்டு முதலாம் குடியரசு அரசியல் யாப்பு.
(2) 1978 ஆம் ஆண்டு இரண்டாம் குடியரசு அரசியல் யாப்பு.
(3) 1947 ஆம் ஆண்டு சோல்பரி குடியரசு அரசியல் யாப்பு.
(4) 1931 ஆம் ஆண்டு டொனமூர் குடியரசு அரசியல் யாப்பு.

24. நிறைவேற்று மற்றும் நிர்வாக நடவடிக்கைகளின்போது பொதுமக்களின் அடிப்படை மனித உரிமைகள் மீறப்படுகையில் பாதுகாப்பதற்காக அரசினால் நியமிக்கப்படுபவர்,
(1) மனித உரிமைகள் ஆணையாளர் (2) சட்டமா அதிபர்
(3) ஓம்புட்ஸ்மன் (4) சபாநாயகர்

25. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களை நியமிப்பவர்,
(1) நீதி அமைச்சர் (2) பிரதமர் (3) பிரதமநீதியரசர் (4) சனாதிபதி

26. சட்டவாட்சியில் செல்வாக்குச் செலுத்தும் பண்புகள் பற்றிக் குறிப்பிட்டவர்,
(1) ஜி.மார்செல் (2) சி.எப். ஸ்ரோங் (4) சீலர் (4) பேராசிரியர் காணர்

27 இலங்கையின் நீதித்துறை சுதந்திரத்தைப் பாதுகாக்க மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளுள் **உள்ளடங்காதது,**
(1) நீதிபதிகளை நியமனம் செய்தல் (2) நீதிபதிகளைப் பதவி நீக்கம் செய்தல்
(3) நீதிபதிகளின் வேதனம் (4) நீதிச்சேவை ஆணைக்குழுவை அமைத்தல்

28. சட்டமா அதிபருக்கு உதவியாகச் செயற்படும் அதிகாரிகளுள் **அடங்காதவர்,**
(1) சொலிசிட்டல் ஜெனரல் (2) மேலதிக சொலிசிட்டல் ஜெனரல்
(3) குறைகேள் அதிகாரி 4) அரச சட்டத்தரணிகள்

29. இலங்கையில் சிறப்பாக ஒழுங்கமைந்த நீதிமன்ற முறையை அறிமுகப்படுத்தியவர்கள் ,
(1) போர்த்துக்கேயர் (2) ஒல்லாந்தர் (3) பிரித்தானியர் (4) பிரான்சியர்

30. முஸ்லிம்களின் விவாகரத்துத் தொடர்பான வழக்குகளை விசாரிக்கும் நீதிமன்றம்,
(1) காதி நீதிமன்றம் (2) குடும்ப நீதிமன்றம் (3) நீதவான் நீதிமன்றம் (4) மாவட்ட நீதிமன்றம்

## பகுதி - II

➢ **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

1. (1) சட்டம் பற்றிய வரைவிலக்கணத்தை முன்வைத்த இரு அறிஞர்களைக் குறிப்பிடுக.
   (2) சட்டம் செயற்படும் சமூகத்தில் காணப்படும் இரண்டு இலட்சணங்கள் தருக.
   (3) நீதியை நிலைநாட்டுவதில் பங்களிப்புச் செய்யும் பிரதான விடயங்கள் இரண்டு தருக.
   (4) சட்டத்தின் பிரதான வகைகள் இரண்டு தருக.
   (5) போர்த்துக்கேயர் காலத்தில் நீதிமன்ற அதிகாரத்தைச் செயற்படுத்திய அதிகாரிகள் இருவரைக் குறிப்பிடுக.
   (6) பாராளுமன்ற கட்டளைச் சட்டத்தின் மூலம் உருவாக்கப்படும் நியாய சபைகள் இரண்டைக் குறிப்பிடுக.
   (7) மாவட்ட நீதிமன்றத்தின் அதிகாரங்கள் இரண்டைக் குறிப்பிடுக.
   (8) சட்டமா அதிபரின் கீழ் செயற்படும் அதிகாரிகள் இருவரைக் குறிப்பிடுக.
   (9) பேச்சுவார்த்தை நடைபெறும் இரண்டு முறைகள் தருக
   (10) ஓம்புட்ஸ்மனின் பிரதான பணிகள் இரண்டு தருக.

2. (i) சட்டம் என்றால் என்ன? (02 புள்ளிகள்)
   (ii) சட்டத்தின் பண்புகள் மூன்று தருக. (03 புள்ளிகள்)
   (iii) (a) சட்டத்தின் மூலாதாரங்கள் இரண்டினைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)
   (b) அவற்றுள் ஒன்றினை விளக்குக. (03 புள்ளிகள்)

3. (i) தேசிய சட்டம் என்றால் என்ன? (02 புள்ளிகள்)
   (ii) தேசிய சட்டத்தின் மூன்று வகைகளும் எவை? (03 புள்ளிகள்)
   (iii) (a) இலங்கையில் செயற்படும் சட்டத்தொகுதிகள் இரண்டு தருக. (02 புள்ளிகள்)
   (b) அவற்றுள் ஒன்றினை விளக்குக. (03 புள்ளிகள்)

4. (i) ஒல்லாந்தர் காலத்தில் செயற்பட்ட நீதிமன்ற மாவட்டங்கள் இரண்டு தருக. (02 புள்ளிகள்)
   (ii) 1972 ஆம் ஆண்டு யாப்பில் உருவாக்கப்பட்ட நீதிமன்றங்கள் மூன்று தருக. (03 புள்ளிகள்)
   (iii) (a) உயர்நீதிமன்றத்தின் அதிகாரங்கள் இரண்டு தருக. (02 புள்ளிகள்)
   (b) அவற்றுள் ஒன்றை விளக்குக. (03 புள்ளிகள்)

5. (i) சட்டவாட்சியில் செல்வாக்குச் செலுத்தும் காணிகள் இரண்டு தருக. (02 புள்ளிகள்)
   (ii) சட்டத்தினைச் செயற்படுத்தும் பிரதானிகள் மூவரைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)
   (iii) (a) தாமதமாகவும், பக்கச்சார்பாகவும் நீதியை நிலைநாட்டுவதால் ஏற்படும் விளைவுகள் 2 தருக. (02 புள்ளிகள்)
   (b) அவற்றுள் ஒன்றினை விளக்குக. (03 புள்ளிகள்)

6. (i) மனித உரிமைகள் ஆணைக்குழுவின் செயற்பாடுகள் இரண்டு தருக. (02 புள்ளிகள்)
   (ii) சட்டவாட்சி உறுதிப்படுத்தப்பட்ட சமூகத்தில் காணப்படும் பண்புகள் மூன்று தருக. (03 புள்ளிகள்)
   (iii) (a) இலங்கையில் நீதித்துறை சுதந்திரத்தைப் பேணும் வகையில் அரசியல் யாப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடு இரண்டு தருக. (02 புள்ளிகள்)
   (b) அவற்றுள் ஒன்றை விளக்குக. (03 புள்ளிகள்)

## பகுதி - I

➢ **பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

1. இலங்கையின் அரசு முறைமை,
(1) ஒற்றையாட்சி (2) சமஸ்டி ஆட்சி
(3) பாராளுமன்ற ஆட்சி (4) ஜனாதிபதித்துவ

2. கோல்புறூக்கமரன் யாப்பில் சட்டவாக்கக் கழக உறுப்பினர்கள் எண்ணிக்கை,
(1) 61 (2) 15 (3) 21 (4) 37

3. வாக்குரிமை அறிமுகம் செய்யப்பட்ட அரசியல் யாப்புச் சீர்திருத்தம்,
(1) 1931 டொனமூர் யாப்பு (2) 1947 சோல்பரி யாப்பு
(3) 1910 குறூமக்கலம் (4) 1978 இரண்டாம் குடியரசு

4. இரு மாவட்டங்களைக் கொண்ட மாகாணம்,
(1) மத்திய மாகாணம் (2) வடமேல் மாகாணம் (3) கிழக்கு மாகாணம் (3) மேல் மாகாணம்

5. அடிப்படை உரிமைகள் முதன் முதலில் சேர்க்கப்பட்ட யாப்பு,
(1) டொனமூர் யாப்பு (2) 2ஆம் குடியரசு யாப்பு
(3) 1 ஆம் குடியரசு யாப்பு (4) சோல்பரி யாப்பு

6. ஒம்புட்ஸ்மன் பதவியை அறிமுகம் செய்த யாப்பு,
(1) 1978 இரண்டாம் குடியரசு யாப்பு (2) சோல்பரி யாப்பு
(3) 1972 முதலாம் குடியரசு யாப்பு (4) டொனமூர் யாப்பு

7. இலங்கையில் அதிகாரப் பகிர்வு நோக்குடன் 1978 ஆம் ஆண்டு அரசியல் யாப்பில் ஏற்படுத்தப்பட்ட சீர்திருத்தம்,
(1) 13 ஆம் திருத்தம் (2) 15 ஆம் திருத்தம் (3) 18 ஆம் திருத்தம் (4) 20 ஆம் திருத்தம்

8. இலங்கையில் அதிக உள்ளூராட்சி மன்றங்களைக் கொண்ட மாகாணம்,
(1) சப்பிரகமுவ மாகாணம் (2) வடமத்திய மாகாணம்
(3) தென் மாகாணம் (4) வட மாகாணம்

9. 1978 ஆம் ஆண்டு யாப்பின் கீழ் பாராளுமன்றத்தின் பதவிக்காலம்,
(1) 5 (2) 6 (3) 4 (4) 3

10. மத்திய அரசாங்கம், மாகாணசபை மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பில் பிரசைகள் நிறைவேற்ற வேண்டிய கடமை,
(1) பயன்மிக்க சீவனோபாயத்தில் ஈடுபடல் (2) சமூக ஒருங்கிணைவை ஏற்படுத்தல்
(3) கலாசார மரபுரிமைகளைப் பாதுகாத்தல் (4) தேசப்பற்றை மேம்படுத்தல்

11. இலங்கையில் சர்வஜன வாக்குரிமை அறிமுகம் செய்யப்பட்ட யாப்பு,
(1) 1978 ஆம் ஆண்டு யாப்பு (2) 1931 டொனமூர் யாப்பு
(3) 1947 சோல்பரி (4) 1910 குறூமக்கலம்

12. சட்டத்திற்கு விளக்கமளிக்கும் நீதிமன்றம்,
(1) மேன்முறையீட்டு நீதி மன்றம் (2) உயர் நீதிமன்றம்
(3) மாகாண நீதிமன்றம் (4) மாவட்ட நீதிமன்றம்

13. 1972 அரசியல் யாப்பின் சட்டத்துறை அழைக்கப்படுவது,
(1) பாராளுமன்றம் (2) தேசிய அரசுப் பேரவை
(3) அரசுக்கழகம் (4) சட்டநிர்வாக சபை

14. இலங்கையில் முதன் முதலில் மக்கள் தீர்ப்பு வாக்கெடுப்பு நடந்த ஆண்டு,
(1) 1982 (2) 1985 (3) 1978 (4) 1987

15. உள்ளூராட்சி மன்ற தேர்தல் எத்தனையாண்டுக்கொருமுறை நடாத்தப்படும்?
(1) 4 (2) 6 (3) 8 (4) 5

**பகுதி - II**

➢ **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

1. (1) அநுராதபுர கால இறுதியில் செயற்பட்ட நிர்வாக அலகுகள் இரண்டு தருக.
   (2) பிரித்தானியர் காலத்தில் நிர்வாகத்தை இலகுபடுத்த உருவாக்கப்பட்ட நிர்வாக அலகுகள் இரண்டு தருக.
   (3) இலங்கையர்களால் உருவாக்கப்பட்ட இரு யாப்புக்களைக் குறிப்பிடுக.
   (4) அரசுக் கழகத்தில் காணப்படும் இரு செயலாளர்களைத் தருக.
   (5) சோல்பரி யாப்பின் முக்கிய அம்சங்கள் இரண்டு தருக.
   (6) இலங்கையில் அதிகாரப் பரவலாக்கல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் இரண்டு தருக.
   (7) பாராளுமன்றத்திற்கு உள்வாங்கப்படும் உறுப்பினர்கள் இரண்டு அடிப்படையில் உள்வாங்கப் படுகின்றனர். அவ்விரண்டு விடயங்களும் எவை?
   (8) வடமாகாணத்தில் காணப்படும் தேர்தல் மாவட்டங்கள் இரண்டு தருக.
   (9) 1978அரசியல் யாப்பிற்கேற்ப ஜனாதிபதி ஜனாதிபதிக்குரித்தான இரண்டு சட்டத்துறை அதிகாரங்கள் தருக.
   (10) பண்டைய காலத்தில் கிராம நிர்வாகத்திற்காக உருவாக்கப்பட்ட இரு தலைவர்களைக் குறிப்பிடுக.

2. (I) இலங்கையில் தற்போது செயற்படும் உள்ளூராட்சி மன்ற நிறுவனங்கள் இரண்டு தருக. (02 புள்ளிகள்)
   (ii) உள்ளூராட்சி மற்றும் மாகாணசபைகளினால் கிடைக்கும் பயன்கள் மூன்று தருக.(03 புள்ளிகள்)
   (iii) (a) இலங்கையின் உள்ளூராட்சி மன்றங்களினால் வழங்கப்படும் செயற்பாடுகளை மூன்றாக வகைப்படுத்தலாம். அவற்றில் இரண்டைத் தருக. (02 புள்ளிகள்)
   (b) அவற்றுள் ஒன்றைப் பற்றி விளக்குக. (03 புள்ளிகள்)

3. (i) பிரதேச நிர்வாக அலகுகளுக்கு அதிகாரத்தைப் பரவலாக்கம் செய்வதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் இரண்டு தருக. (02 புள்ளிகள்)
   (ii) அதிகாரப் பரலாக்கத்தின்போது ஏற்படும் பிரச்சினைகள் மூன்று தருக. (03 புள்ளிகள்)
   (iii) (a) மத்திய அரசாங்கத்தின் நிறுவனங்கள் மூன்றைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)
   (b) அவற்றுள் ஒன்றின் பணியை விளக்குக. (03 புள்ளிகள்)

4. (i) சோல்பரி யாப்பின் பாராளுமன்றத்தின் இரு சபைகளையும் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)
   (ii) உள்ளூராட்சி மன்ற நிறுவனங்கள் மூன்றினதும் பிரதானிகள் எவ்வாறு அழைக்கப்படுகின்றனர்? (03 புள்ளிகள்)
   (iii) (a) பிரஜைகள் தொடர்பில் உள்ளூராட்சி மன்றங்களின் பொறுப்புக்கள் இரண்டு தருக. (02 புள்ளிகள்)
   (b) அவற்றுள் ஒன்றை விளக்குக. (03 புள்ளிகள்)

---

**11:3 மனித உரிமைகளும், கடமைகளும் தரம் - 11**

**பகுதி - I**

1. சிறுவர் உரிமை சமவாயத்தின் படி சிறுவர்கள் எனப்படுவோர்,
   (1) 18 வயதுக்குக் குறைந்தோர் (2) 16 வயதுக்குக் குறைந்தோர்
   (3) 12 வயதுக்குக் குறைந்தோர் (4) 21 வயதுக்குக் குறைந்தோர்

2. ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் தொடர்பான சர்வதேசப் பிரகடனம் 30 உறுப்பினர்களைக் கொண்டது. அவற்றுள் 3 - 27 வரையான உறுப்புரை.
   (1) மனித உரிமைகளின் அவசியத்தை வலியுறுத்துகின்றது.
   (2) மனிமை உரிமைகளின் இயல்பை வலியுறுத்துகின்றது.
   (3) பல்வேறு உரிமைகளையும் அட்டவணைப்படுத்தியுள்ளது.
   (4) பல்வேறு உரிமைகள் தொடர்பான கடமைகளைக் குறிப்பிடுகின்றது.

3. சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயத்தின் அடிப்படையாக அமைவது, பின்வருவனவற்றுள் எது?
   (1) பிள்ளையின் சுதந்திரத்தைப் பாதுகாத்தல்.
   (2) பிள்ளைக்கு அதிகபட்ச நன்மையை வழங்குதல்.
   (3) பிள்ளையின் கல்வியை உறுதிப்படுத்தல்.
   (4) பிள்ளையின் சுகாதாரப் பாதுகாப்பை உறுதிப்படுத்தல்.

4. இலங்கையின் சிரேஷ்ட பிரஜை எனப்படுவோர் வயதெல்லையாக அமைவது,
   (1) 70 - 75  (2) 40 - 50  (3) 55 - 60  (4) 57 - 60

5. இலங்கையில் ஆதிவாசிகள் தொடர்பாக பின்வரும் கூற்றுக்களில் பிழையான கூற்று.
   (1) ஆதிவாசிகளின் உரிமைகளைப் பாதுகாக்க வனப்பாதுகாப்புத் திணைக்களம் உருவாக்கப்பட்டுள்ளது.
   (2) ஆதிவாசிகள் ஒரு விசேட கலாசாரத்திற்கு உரித்தாகின்றனர்.
   (3) இலங்கையில் வாழும் ஆதிவாசிகள் வேடுவர் சமூகம் என அழைக்கப்படும்.
   (4) ஆதிவாசிகளின் உரிமைகளை மதிப்பது அனைத்து பிரசைகளினதும் கடமையாகும்.

6. இலங்கை சர்வதேச தொழிலாளர் அமைப்பில் அங்கத்துவத்தைப் பெற்றுக் கொண்ட ஆண்டு,
   (1) 1946  (2) 1947  (3) 1948  (4) 1950

7. குடியியல் மற்றும் உரிமைகள் மீதான சர்வதேச ஒப்பந்தத்துடன் இணைந்த முதலாவது விருப்பிலான பின்னேட்டின் படி,
   (1) குற்றவாளியாக்கப்பட்ட நபரொருவருக்கு மரண தண்டனைக்குப் பதிலாக மாற்றுத் தண்டனை வழங்க முடியும்.
   (2) எதிர்காலத்தைப் பாதிக்கும் வகையில் பிறப்பிக்கப்படும் தண்டனையிலிருந்து விடுபட முடியும்.
   (3) சிறுவர்களைக் கடத்தல்/பலாத்காரமாகத் தடுத்து வைத்தலுக்கெதிராகத் தண்டனை வழங்க முடியும்.
   (4) தமது நாட்டில் வழங்கப்பட்ட தீர்ப்பில் திருப்தியடையாவிட்டால் மனித உரிமை ஆணைக் குழுவுக்கு மேன்முறையீடு செய்ய முடியும்.

8. நாடொன்றின் பிரசையொருவருக்குரிய அடிப்படை உரிமைகளை உள்ளடக்கியுள்ள முக்கிய ஆவணம் எப் பெயரால் அழைக்கப்படும்?
   (1) மனித உரிமைகள் பிரகடனம்  (2) அரசியலமைப்பு
   (3) தண்டனைச் சட்டக் கோவை  (4) ஒருங்கியை பட்டியல்

9. கடைகள் மற்றும் காரியாலய ஊழியர் சட்டத்தினால் பின்வரும் எத்தரப்பினர் உரிமைகள் பாதுகாக்கப்படுகின்றது.
   (1) பெண்கள் உரிமைகள்  (2) பிரசைகளின் உரிமைகள்
   (3) தொழிலாளர் உரிமைகள்  (4) சிறுவர் உரிமைகள்

10. கருத்துச் சுதந்திரமும் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரமும் உரித்தாகும் மனித உரிமைத் தொகுதி யானது,
   (1) பொருளாதார மற்றும் குடியியல் உரிமைகள்
   (2) மனித மற்றும் பண்பாட்டு உரிமைகள்
   (3) அரசியல் மற்றும் பொருளாதார உரிமைகள்
   (4) குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள்

11. சிறுவர் பாதுகாப்பு தொடர்பான ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வதற்காக வழங்கப்பட்டுள்ள தொலைபேசி இலக்கம்,
   (1) 1918  (2) 1919  (3) 1929  (4) 1990

12. ஐக்கிய நாடுகள் சபையின் பெண்களுக்கு எதிரான பாரபட்சங்களை ஒழிப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கை,
   (1) யுனிசெப் (UNICEF)  (2) சிடோ (CEDAW)
   (3) யுனிபா (UNFPA)  (4) யுனெஸ்கோ (UNESCO)

13. 1978 அரசியல் யாப்பின்படி நிர்வாகச் செயற்பாடுகள் மூலம் அடிப்படை உரிமைகள் மீறப்படுமாயின், அது தொடர்பாக முறையீடு செய்ய நியமிக்கப்பட்ட அதிகாரி,
(1) சொலிசிட்டர் ஜெனரல் (2) நீதி அமைச்சின் செயலாளர்
(3) நீதிச் சேவை ஆணைக்குழுவின் தலைவர் (4) நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர்

14. அரசியல் யாப்பினைப் பாதுகாத்தல் பிரஜையொருவரின் எவ்வகையான கடமையாகும்.
(1) ஆன்மீக ரீதியான கடமை (2) பண்பாட்டு ரீதியான கடமை
(3) சட்ட ரீதியான கடமை (4) சமூக ரீதியான கடமை

15. குழந்தை பிறந்ததும் அதன் பிறப்பைப் பதிவு செய்வதன் மூலம் அக் குழந்தை அடையக்கூடிய உரிமைகளில் ஒன்றாக அமைவது,
(1) பெற்றோரின் அரவணைப்பில் வாழும் உரிமை.
(2) தனக்கான வாழ்வியல் உரிமையினைப் பெறல்.
(3) இனம் ஒன்றை அடையாளப்படுத்திக் கொள்ளும் உரிமை.
(4) சமூக ரீதியாகப் பாதுகாப்புப் பெறும் உரிமை.

## **பகுதி** - II

➢**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

01. (1) மனிதன் தனது உரிமைகளைப் பெற்றுக்கொண்ட வரலாற்றுச் சந்தர்ப்பங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
(2) சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தினுள் உள்ளடங்கும் சட்டங்கள் இரண்டு தருக.
(3) கி.பி. 6 ஆம் நூற்றாண்டில் இந்தியாவில் வாழ்ந்த லிச்சவி அரச குடும்பத்தினால் பின்பற்றப்பட்ட பெண்கள் சம்பந்தமான இரண்டு கொள்கைகளைக் குறிப்பிடுக.
(4) பெண்களின் குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் இரண்டு தருக.
(5) சிறுவர் உரிமைகள் மீறப்பட்ட சந்தர்ப்பங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
(6) ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயம் அவதானம் செலுத்தியுள்ள விடயங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
(7) இலங்கையில் சுற்றாடல் தொடர்பாகச் செயற்படும் நிறுவனங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
(8) பண்பாட்டு ரீதியான கடமைகளுக்கு இரண்டு உதாரணங்கள் தருக.
(9) ஆதிவாசிகளின் கலாசாரத்திற்கு இரு உதாரணங்கள் தருக.
(10) அடிப்படை உரிமைகள் மீறப்படும் போது மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் இரண்டு தருக.

02. (i) உரிமைகளுடன் தொடர்புடைய செயற்பாடுகள் இரு வகைப்படும். அவை எவை? (02 புள்ளிகள்)
(ii) குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளுக்கு மூன்று உதாரணங்கள் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)
(iii) (a) சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக இலங்கையில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் இரண்டு தருக. (02 புள்ளிகள்)
(b) மேலே (a) இல் குறிப்பிட்ட நடவடிக்கைகளில் ஒன்றை விளக்குக.
(2+3+2+3=10 புள்ளிகள்)

03. (i) தொழிலாளர் உரிமைகளைப் பாதுகாக்கும் சட்டங்கள் இரண்டு தருக.
(ii) சுற்றாடல் தொடர்பாக பிரஜையொருவர் ஆற்ற வேண்டிய கடமைகள் மூன்று தருக.
(iii) (a) பெண்கள் உரிமைகளைப் பாதுகாக்க இலங்கை அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் இரண்டினைக் குறிப்பிடுக.
(b) அவற்றுள் ஒரு நடவடிக்கையினை விளக்குக. (2+3+2+3=10 புள்ளிகள்)

04. (i) 1978 ஆம் அண்டு இலங்கையின் இரண்டாம் குடியரசு யாப்பில் 3 ஆவது அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் இரண்டு தருக.
(i) சிறுவர் உரிமைகள் சமவாயம் கொண்டுள்ள உரிமைகள் மூன்று தருக.
(iii) (a) குடும்ப அங்கத்தவர் எனும் வகையில் நீங்கள் அனுபவிக்கும் உரிமைகள் இரண்டு தருக.
(b) பாடசாலையின் அங்கத்தவர் என்ற வகையில் நீங்கள் பாடசாலைக்கு ஆற்ற வேண்டிய கடமைகள் மூன்று தருக.
(2+3+2+3=10 புள்ளிகள்)

**பகுதி** - I

➢ **சரியான விடையைத் தெரிவு செய்க.**

1. சூழல் தொகுதியில் உள்ளடங்கியுள்ள உயிரற்ற கூறுகளுள் **உள்ளடங்காதது,**
   (1) வளிக்கோளம் (2) தாவரங்கள்
   (3) கற்கோளம் (4) நீர்க்கோளம்

2. சமூகச் சூழல் என்பதால் கருதப்படுவது,
   (1) மனிதனின் தலையீடின்றி உருவான கூறுகளாகும்.
   (2) மனிதனால் கட்டியெழுப்பப்பட்டதாகும்.
   (3) பௌதீகக் கூறுகளால் கட்டியெழுப்பப்பட்டதாகும்.
   (4) பௌதீகக் கூறுகளுக்கிடையிலான இடைத் தொடர்பினால் கட்டியெழுப்பப்பட்டதாகும்.

3. காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் விளைவு **அல்லாதது,**
   (1) சமுத்திரத்தின் நீர்மட்டம் உயர்வடைவதில் (2) எல்நினோ பாதிப்பு ஏற்படல்
   (3) சுனாமி ஏற்படல் (4) சூழல் வெப்பநிலை உயர்வடைதல்

4. சூழலிலிருந்து கிடைக்கும் சேவையில் வாழ்க்கைக்கு உதவும் சேவைகளை மட்டும் கொண்டுள்ள விடையைத் தெரிவு செய்க.
   (1) நிலம், உயிர்ச்சுவட்டு எரிபொருள் (2) உயிர்ச்சுவட்டு எரிபொருள், சூரிய ஒளி
   (3) சூரிய ஒளி, நீர் (4) நீர், நிலம்

5. சூழற் பிரச்சினைகள் ஏற்படுவதில் செல்வாக்குச் செலுத்தும் மிகவும் முக்கியமான காரணியாக அமைவது,
   (1) சனத்தொகை அதிகரிப்பு (2) பொருளாதார நடவடிக்கைகள் விரிவடைதல்
   (3) வளங்களை அதிகளவில் பயன்படுத்துதல் (4) புவி வெப்பமடைதல்

6. பௌதீக வாழ்க்கைப் பண்புச் சுட்டெண்ணைக் கணக்கிடுவதற்காகப் பயன்படும் அம்சங்களைச் சரியாகக் குறிப்பிடும் விடையைத் தெரிவு செய்க.
   (1) எழுத்தறிவு, பிறப்பின் போதான ஆயுள் எதிர்பார்ப்பு, சிசு மரண விகிதம்.
   (2) கொள்வனவு சக்தி, மொத்த வெளிநாட்டு வருமானம், எழுத்தறிவு
   (3) ஆயுள் எதிர்பார்ப்பு, மொத்தத் தேசிய உற்பத்தி, சிசுமரண விகிதம்
   (4) சிசு மரண விகிதம், எழுத்தறிவு, தனிநபர் வருமானம்

7. இயற்கைக் காரணிகளால் புவியில் ஏற்படும் சூழல் பிரச்சினைகளை மட்டும் கொண்டுள்ள விடையைத் தெரிவு செய்க.
   (1) புவியதிர்வு, வறட்சி, எரிமலை.
   (2) நிலச்சரிவு, ரொனாடோ, வளி மாசடைதல்.
   (2) புவியதிர்வு, வெள்ளப்பெருக்கு, நீர் மாசடைதல்.
   4) சூறாவளி, காடழிப்பு, காட்டுத் தீ.

8. பின்வருவனவற்றுள் அபிவிருத்தியை அளவிடுவதற்கான நவீன அளவீட்டு முறை **அல்லாதது,**
   (1) பொருளாதார வளர்ச்சி வேகம் (2) பசுமை தலாதேசிய உற்பத்தி
   (3) சந்தைக் கட்டமைப்பு மாற்றம் (4) உள்ளடங்கியுள்ள செல்வம் பற்றிய சுட்டி

9. அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் காணப்படும் வறுமை நச்சு வட்டத்தில் உள்ளடங்கும் அம்சம்.
   (1) உள்நாட்டுச் சேமிப்பு (2) வெளிநாட்டு உதவிகள்
   (3) ஏற்றுமதி பன்முகப்படுத்தல் (4) உயர்வான நுகர்வுச் செலவு

10. அபிவிருத்தியடைந்த நாடுகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுள் **உள்ளடங்காதது,**
   (1) உயர்ந்த ஆயுள் எதிர்பார்ப்பு (2) வேலையின்மை
   (3) அதிகரித்த நகர்ப்புறச் சனத்தொகை (4) அதிகரித்த முதலீட்டு வளங்கள்

11. எதிர்கால சந்ததியினரின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் நிகழ்கால அபிவிருத்திச் செயன்முறைகளை முன்னெடுப்பது,
(1) சமூக அபிவிருத்தி (2) பொருளாதார அபிவிருத்தி
(3) பேண்தகு அபிவிருத்தி (4) சூழல் அபிவிருத்தி

12. சூழல் தொடர்பான பிரசைகளின் பொறுப்புக்களில் **உள்ளடங்காதது,**
(1) சுற்றாடல் சட்டதிட்டங்களுக்கு அமைவாகச் செயற்படாமை.
(2) சுற்றாடல் வளங்களைச் சிக்கனமாகப் பாவித்தல்.
(3) எப்போதும் சூழல் நேய வாழ்க்கைமுறையைப் பின்பற்றல்.
(4) கழிவுப் பொருட்களை மீள்சுழற்சிக்கு உட்படுத்தல்.

13. சூழலை "ஒயிகஸ்" (Oikes) என்ற, பெயரால் அழைத்தவர்கள்,
(1) கிரேக்கர் (2) இந்தியர்
(3) அரேபியர் (3) சீனர்

14. சுத்தமான நீரின் pH பெறுமானம்.
(1) 5 (2) 6 (3) 7 (4) 8

15. பின்வருவனவற்றுள் செயற்கையான முறையில் வளிமாசடையும் சந்தர்ப்பம் **அல்லாதது,**
1) ஆகாய விமானப் பயன்பாடு 2) குப்பை கூளங்கள்
3) புழுதிப் புயல் 4) கைத்தொழிற்சாலைகள்

16. சூழல் உரிமைகள் தொடர்பான பிரச்சினைகளின் போது நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய முக்கிய நிறுவனம் எது?
(1) சுற்றாடல் அமைச்சு.
(2) மத்திய சுற்றாடல் அதிகாரசபை.
(3) வனப் பாதுகாப்புத் திணைக்களம்.
(4) புவியியல் மற்றும் சுரங்கமறுத்தல் அலுவலகம்.

17. நீர் மாசடைதல் என்பதைச் சரியாகக் குறிப்பிடும் கூற்று.
(1) களை நாசினி, பூஞ்சணக்கொல்லி என்பன நீரில் கலத்தல்
(2) நீரின் இயற்கையான இயல்புகள் மாற்றமடைதல்
(3) அமில மழையினால் நீரில் நச்சுப் பதார்த்தங்கள் சேர்தல்
(4) கைத்தொழில் கழிவுகள் நீரில் கலத்தல்.

18. வளச் சமமின்மை என்பதாற் கருதப்படுவது,
(1) உலகில் வளங்களின் பரம்பலில் காணப்படும் சமமின்மையாகும்.
(2) உலகில் வளங்களுக்கு நிலவும் தட்டுப்பாடாகும்.
(3) வளங்கள் சமமாகப் பரம்பிக் காணப்படலாகும்.
(4) வளங்கள் ஓரிடத்தில் குவிந்திருத்தலாகும்.

19. அபிவிருத்தியை அளவீடு செய்யும் நவீன அளவீடாக அமைவது,
(1) இணையத்தளப் பயன்பாடு (2) தலா தேசிய உற்பத்தி
(3) மொத்தத் தேசிய உற்பத்தி (4) பொருளாதார வளர்ச்சி வேகம்

20. இலங்கையின் அபிவிருத்திக்கான சவாலை வெற்றிகொள்வதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகளாக **அமையாதது,**
(1) ஏற்றுமதியைப் பன்முகப்படுத்தல். (2) அரசியல் உறுதிப்பாட்டைக் கட்டியெழுப்புதல்.
(3) சுற்றுலாத்துறையை மேம்படுத்தல். (4) முதலீட்டு வளங்களை அதிகரித்தல்.

## பகுதி - II

➢ **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

1. (1) சூழல் தொகுதியில் உள்ளடங்கிய கூறுகள் இரண்டைக் குறிப்பிடுக.
   (2) இயற்கைச் சூழலுக்குரிய நிகழ்வுகளுக்கு இரு உதாரணங்களைக் குறிப்பிடுக.
   (3) வளி மாசடைவதற்குக் காரணமாய் அமைந்த பிரதான இரு புரட்சிகளைக் குறிப்பிடுக.
   (4) உலகில் பாரியளவில் காடழிப்பினை மேற்கொண்ட நாடுகள் இரண்டைக் குறிப்பிடுக.
   (5) சூழல் தொடர்பான அரசின் பொறுப்புக்கள் இரண்டைக் குறிப்பிடுக.
   (6) மனித அபிவிருத்திச் சுட்டி (HDI) மூலம் அளவிடக்கூடிய இரு அம்சங்களைக் குறிப்பிடுக.
   (7) நிலையான அபிவிருத்தி என்ற எண்ணக்கருவின் முன்னோடியையும் அவரது நாட்டையும் குறிப்பிடுக.
   (8) வளங்களின்வினைத்திறனை மேம்படுத்துவதற்காக உலகில் கைக்கொள்ளப்படும் வழிமுறைகள் இரண்டினை எழுதுக.
   (9) அபிவிருத்தியடைந்துவரும் நாடான இலங்கையின் சிறப்பியல்புகள் இரண்டினைக் குறிப்பிடுக.
   (10) அபிவிருத்தியை அளவீடு செய்யும் முறைகள் இரண்டைக் குறிப்பிடுக.

2. (i) உயிரற்ற சூழலில் உள்ளடங்கும் கூறுகள் இரண்டு தருக.
   (ii) சூழலில் இருந்து கிடைக்கும் சேவைகள் மூன்றினைக் குறிப்பிடுக.
   (iii) (a) சுற்றாடல் பிரச்சினைகளால் ஏற்படும் சமூகப் பாதிப்புக்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
   (b) மேலே (a) இல் குறிப்பிட்ட பாதிப்புக்களில் ஒன்றினைச் சுருக்கமாக விளக்குக.

(2+3+2+3=10 புள்ளிகள்)

3. (i) இயற்கையான முறையில் வளி மாசடையும் சந்தர்ப்பங்கள் இரண்டு தருக.
   (ii) பச்சைவீட்டு வாயுக்களை வெளியேற்றும் துறைகள் மூன்று தருக.
   (iii) (a) வளி மாசடைவதால் ஏற்படும் தீமைகள் இரண்டினைக் குறிப்பிடுக.
   (b) மேலே (a) இல் குறிப்பிட்ட தீமைகளில் ஒன்றினைச் சுருக்கமாக விளக்குக.

(2+3+2+3=10 புள்ளிகள்)

4. (i) அபிவிருத்தியை அளவீடு செய்கின்ற நவீன அளவீடுகள் இரண்டினைக் குறிப்பிடுக.
   (ii) பாரம்பரிய அளவீடுகளில் உள்ளடங்கும் தனிநபர் தேசிய உற்பத்தியின் குறைபாடுகள் மூன்றினைக் குறிப்பிடுக.
   (iii) (a) அபிவிருத்தி செயன்முறையின்போது அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் இரண்டினைக் குறிப்பிடுக.
   (b) மேலே (a) இல் குறிப்பிட்ட பிரச்சினைகளில் ஒன்றினைச் சுருக்கமாக விளக்குக.

(2+3+2+3=10 புள்ளிகள்)

5. (i) பௌதீக வாழ்க்கைப் பண்புச் சுட்டியைத் தயாரிப்பதற்குப் பயன்படுத்தும் இரண்டு அம்சங்களைக் குறிப்பிடுக.
   (ii) அபிவிருத்தி அடைந்த நாடுகளின் பண்புகள் மூன்று தருக.
   (iii) (a) இலங்கையின் அபிவிருத்திக்கான சவாலை வெற்றி கொள்வதற்காக மேற்கொள்ளப் பட்டுள்ள நடவடிக்கைகள் இரண்டினைக் குறிப்பிடுக.
   (b) மேலே (a) இல் குறிப்பிட்ட நடவடிக்கையில் ஒன்றினை மேம்படுத்தும் முறையினைச் சுருக்கமாக விளக்குக.

(2+3+2+3=10 புள்ளிகள்)

**பகுதி - I**

➢ **சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

1. தற்கால உலகில் பலமான நாடுகள் பலவீனமான நாடுகளை மறைமுகமாக ஆக்கிரமிப்புச் செய்யும் உபாயமுறையாக அமைவது,
   (1) கடன் மற்றும் நன்கொடை வழங்குதல் (2) நேரடியாகப் போர் தொடுத்தல்
   (3) தூதரக ரீதியாக தொடர்புகளைப் பேணுதல் (4) பரஸ்பர உடன்படிக்கையில் ஈடுபடல்

2. ஒரு நாடு எத்தகைய நாடுகளுடன் இராஜதந்திர உறவுகளைக் கட்டியெழுப்ப வேண்டும் எனத் தீர்மானிப்பது,
   (1) உள்நாட்டுக் கொள்கையின் மூலம் (2) வெளிநாட்டுக் கொள்கை மூலம்
   (3) பொருளாதாரக் கொள்கையின் மூலம் (4) அரசியல் கொள்கையின் மூலம்

3. உலகளாவிய அல்லது பிராந்திய ரீதியில் கடன் வழங்கும் நிதி நிறுவனமாக **அமையாதது,**
   (1) இலங்கை மத்திய வங்கி (2) உலக வங்கி
   (3) சர்வதேச நாணய நிதியம் (3) ஆசிய அபிவிருத்தி வங்கி

4. நேட்டோ அமைப்பின் மூலம் மேற்கொள்ளப்படும் ஆக்கிரமிப்புக்களுக்கு பதிலடி கொடுப்பதற்காக உருவாக்கப்பட்ட அமைப்பு
   (1) சார்க் அமைப்பு (2) பொதுநலவாய அமைப்பு
   (3) ஆசியான் அமைப்பு (4) வோர்ஸோ அமைப்பு

5. பிராந்திய அமைப்பினுள் தோற்றம் பெற்ற முதலாவது பொருளாதார அமைப்பு,
   (1) ஐரோப்பா சங்கம்
   (2) ஐரோப்பிய பொருளாதாரக் கட்டமைப்பு
   (3) இலத்தீன் அமெரிக்க சுதந்திர வர்த்தக அமைப்பு
   (4) சார்க் அமைப்பு

6. பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தியின் பொருட்டு தென்னாசிய நாடுகள் 1985 ஆம் ஆண்டு உருவாக்கிக் கொண்டஅமைப்பு,
   (1) சார்க் அமைப்பு (2) ஆசியான் அமைப்பு
   (3) பொதுநலவாய அமைப்பு (4) பிம்ஸ்டெக் அமைப்பு

7. சார்க் அமைப்பில் இறுதியாக இணைந்து கொண்ட நாடு,
   (1) மாலை தீவு (2) பங்காதேஷ் (3) ஆப்கானிஸ்தான் (4) பாகிஸ்தான்

8. சார்க் அமைப்பின் பிரதான செயலகம் அமைந்துள்ள நாடும் நகரமும்.
   (1) நேபாளம் - காத்மண்டு (2) இந்தியா - புதுடெல்கி
   (3) இலங்கை - கொழும்பு (4) பங்களாதேஷ் - டாக்கா

9. தென் மற்றும் தென்மேல் ஆசியநாடுகளின் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தியின் பொருட்டு ஏற்படுத்தப்பட்ட திட்டம்,
   (1) மகாவலி அபிவிருத்தித் திட்டம் (2) ஐக்கிய நாடுகள் சபையின் செயற்றிட்டம்
   (2) கொழும்புத் திட்டம் (4) தேசிய பாதுகாப்புத் திட்டம்

10. இரண்டாம் உலகப் போர் நிறைவில் சர்வதேச சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக உருவாக்கிக் கொண்ட அமைப்பு.
    (1) பிம்ஸ்டெக் (2) ஐக்கிய நாடுகள் சபை
    (3) ஐக்கிய சங்கம் (4) நேட்டோ அமைப்பு

11. ஐக்கிய நாடுகள் சபையின் அனைத்து நாடுகளையும் பிரதிநிதித்துவப்படுத்துவது,
(1) பொதுச்சபையாகும் (2) பாதுகாப்புச் சபையாகும்
(3) சமூக பொருளாதார சபையாகும் (4) நம்பிக்கைப் பொறுப்புச் சபையாகும்

12. ஐக்கிய நாடுகள் தாபனத்தின் பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்பு நாடாக அமைவது,
(1) இந்தியா (2) யப்பான் (3) ஜேர்மனி (3) பிரான்ஸ்

13. ஐக்கிய நாடுகள் தாபனத்தின் பிரதான நிர்வாகி.
(1) செயலாளர் நாயகம் (2) ஆணையாளர் நாயகம்
(3) பணிப்பாளர் நாயகம் (4) அமெரிக்க ஜனாதிபதி

14. ஐக்கிய நாடுகள் தாபனத்தின் இணைநிறுவனமாக **அமையாதது,**
(1) உலக சுகாதார அமைப்பு (2) சர்வதேச நாணய நிதியம்
(3) சர்வதேச தொழிலாளர் அமைப்பு (4) சார்க் அமைப்பு

15. பொதுநலவாய அமைப்பின் தலைவர்,
(1) அமெரிக்க ஜனாதிபதி (2) பிரித்தானிய முடி
(3) பிரான்சிய ஜனாதிபதி (4) இலங்கை ஜனாதிபதி

16. ஐரோப்பிய நாடுகள் தமக்கிடையே ஏற்படுத்திக் கொண்ட பொது நாணய அலகு,
(1) யூரோ (2) ஸ்ரேலிங் பவுன் (3) யென் (3) டொலர்

17. IMF என்று அழைக்கப்படும் அமைப்பின் முழுமையான வடிவம்.
(1) உலக சுகாதார தாபனம் (2) சர்வதேச நாணய நிதியம்
(3) உலக தொழிலாளர் தாபனம் (4) உலக விவசாய தாபனம்

18. “பிம்ஸ்டெக்” அமைப்பில் அங்கத்துவம் பெற்றுள்ள தென்கிழக்காசிய நாடு,
(1) தாய்லாந்து (2) நேபாளம் (3) இந்தியா (3) இலங்கை

19. ஐக்கியநாடுகள் தாபனம் தாபிக்கப்பட்ட வருடம்.
(1) 1935 (2) 1945 (3) 1955 (4) 1965

20. சர்வதேச உறவுகளின் சாதகமான விளைவாக அமைவது,
(1) கருத்து வேறுபாடுகளும் முரண்பாடுகளும் வலுப்பெறுதல்.
(2) நாடுகளுக்கிடையில் போர்கள் மூளுதல்.
(3) சர்வதேச ரீதியில் ஆயுதப் பரிமாற்றம் இடம்பெறுதல்.
(4) புதிய தொழில்நுட்ப அறிவுப் பரிமாற்றம் ஏற்படுதல்.

## பகுதி - II

➢ **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

1. (1) சர்வதேச உறவுகளின் நோக்கங்கள் இரண்டைக் குறிப்பிடுக.
(2) சர்வதேச உறவுகள் மேற்கொள்ளப்படும் பிரதான இரு முறைகளையும் தருக.
(3) சார்க் அமைப்பில் உள்ளடங்கும் நாடுகள் இரண்டினைக் குறிப்பிடுக.
(4) இரண்டாம் உலகப்போர் முடிவடைந்ததைத் தொடர்ந்து மீண்டுமொரு யுத்தம் ஏற்படாமல் தவிர்க்கும் பொருட்டு உருவாக்கப்பட்ட அமைப்பு எது? அவ் அமைப்பு எவ்வருடத்தில் தோற்றம் பெற்றது.?
(5) தூதுவர் ஒருவருக்கு இருக்க வேண்டிய பண்புகள் இரண்டு தருக.
(6) சர்வதேச வர்த்தகத்தின் இரு பிரிவுகளையும் குறிப்பிடுக.
(7) வெளிநாட்டு உதவிகளை வழங்கும் சர்வதேச அமைப்புக்கள் இரண்டின் பெயர்களைக் குறிப்பிடுக.

(8) பிரித்தானிய காலனித்துவத்திலிருந்து சுதந்திரம் பெற்ற நாடுகளிடையே தொடர்புகளைப் பேணுவதற்காக உருவாக்கப்பட்ட அமைப்பு எது? அதன் தோற்றத்திற்குக் காரணமாக அமைந்த அறிக்கை யாது?

9) ஒரு நாட்டிற்கு வெளிநாட்டு உதவிகள் கிடைக்கும் வழிமுறைகள் இரண்டைக் குறிப்பிடுக.

10) யுனிசெவ் (UNICEF) அமைப்பின் நோக்கங்கள் இரண்டினைத் தருக.

2. (i) சர்வதேச உறவுகள் என்பதனை வரைவிலக்கணப்படுத்துக. (02 புள்ளிகள்)

(ii) சர்வதேச உறவுகள் அபிவிருத்தியடைந்துள்ள துறைகளில் மூன்றைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iii) (a) சர்வதேச உறவு வளர்ச்சியடைவதில் தாக்கம் செலுத்திய காரணங்களில் இரண்டைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(b) மேலே குறிப்பிட்டவற்றுள் ஒன்றைச் சுருக்கமாக விளக்குக. (03 புள்ளிகள்)

3. (i) பிராந்திய அமைப்புக்கள் இரண்டு பிரதான நோக்கங்களின் அடிப்படையில் தோற்றம் பெற்றது. அவற்றைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) சர்வதேச சமூகம் இலங்கை மீது செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் மூன்றைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iii) (a) ஐரோப்பிய அரசுகள் இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின் இரண்டு பிரதான சக்திகளாக அணி திரண்டனர். அவ் இரு அணிகளையும் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(b) மேற்குறிப்பிட்ட அணிகளில் ஒன்றைப் பற்றிச் சுருக்கமாக விளக்குக. (03 புள்ளிகள்)

4. (i) சார்க் நாடுகளிடையே ஏற்படுத்திக் கொண்டுள்ள இரண்டு வர்த்தக ஒப்பந்தங்களும் எவை? (02 புள்ளிகள்)

(ii) சார்க் அமைப்புடன் தொடர்புகளைப் பேணுகின்ற வேறு சர்வதேச அமைப்புக்கள் மற்றும் வலய அமைப்புக்கள் மூன்றைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iii) (a) சார்க் அமைப்பு தற்போது எதிர்நோக்கும் சவால்கள் இரண்டைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(b) மேற்குறிப்பிட்ட விடயங்களில் ஒன்றை விளக்குக. (03 புள்ளிகள்)

5. (i) சர்வதேச அமைப்புக்களின் தோற்றத்திற்கு வழிவகுத்த காரணிகள் இரண்டு தருக. (02 புள்ளிகள்)

(ii) ஐக்கிய நாடுகள் சபையின் பிரதான ஆறு கட்டமைப்பில் மூன்றைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iii) (a) ஐக்கிய நாடுகள் சபையின் நோக்கங்கள் இரண்டைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(b) மேற்குறிப்பிட்ட விடயங்களில் ஒன்றை விளக்குக. (03 புள்ளிகள்)

6. (i) சர்வதேச வர்த்தகத்தில் பயன்படுத்தப்படும் நாணயங்கள் இரண்டினைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) ஆசிய வலயத்தினுள் பொருளாதார நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு உருவான பொருளாதார அமைப்புக்கள் மூன்றைக் குறிப்பிடுக.

(iii) (a) சர்வதேச உறவுகளால் ஏற்படும் சாதகமான விளைவுகள் இரண்டைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(b) மேற்குறிப்பிட்ட விளைவுகளில் ஒன்றைச் சுருக்கமாக விளக்குக. (03 புள்ளிகள்)

# முதலாம் தவணைப் பரீட்சை

**தரம் - 10** **குடியியற் கல்வி** **பகுதி - I**

➢ **மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

1. பண்டைய கிரேக்கத்தில் மக்கள் மன்றமாகத் தொழிற்பட்ட அரங்காக அமைவது,
   (1) காரியட்ஸ் அரங்கு (2) குளோப் அரங்கு (3) உரோம அரங்கு (4) நோ. அரங்கு

2. தீர்மானம் எடுக்கும் செயற்பாட்டில் மக்கள் அனைவரும் பங்கு கொள்ளச் சந்தர்ப்பம் வழங்கப்படும் ஆட்சி முறை,
   (1) பிரபுத்துவ ஆட்சிமுறை (2) மன்னராட்சி முறை
   (3) நேரடி சனநாயக ஆட்சிமுறை (4) சோசலிச ஆட்சிமுறை

3. பிரித்தானியாவில் பிரதிநிதித்துவ சனநாயகம் ஆரம்பிக்கப்பட்ட காலப்பகுதி,
   (1) கி.மு. 6ம் நூற்றாண்டு (2) கி.பி.17ம் நூற்றாண்டு
   (3) கி.பி. 15ம் நூற்றாண்டு (4) கி.மு.4ம் நூற்றாண்டு

4. தற்காலத்தில் நேரடி சனநாயக ஆட்சிமுறையை நடைமுறைப்படுத்தும்போது தோன்றும் பிரச்சினையாகக் காணப்படுவது
   (1) ஓரிடத்தில் ஒன்று திரட்டுவதில் உள்ள சிரமம்.
   (2) நிலப்பரப்பு குறுகியதாகக் காணப்படல்.
   (3) பிரசைகளிடையே வருமான வேறுபாடுகள் காணப்படுதல்.
   (4) பல்லின மக்கள் குறைந்தளவில் காணப்படல்.

5. இலங்கையில் தேர்தல் தொகுதிகளைப் பிரித்தொதுக்கும் அதிகாரமுள்ள ஆணைக்குழு.
   (1) தேர்தல்கள் ஆணைக்குழு (2) மனித உரிமைகள் ஆணைக்குழு
   (3) அரச சேவை ஆணைக்குழு (4) எல்லை நிர்ணய ஆணைக்குழு

6. 2ம் குடியரசு யாப்பின் பிரகாரம், வாக்களிப்பதற்கான வயதெல்லையாக அமைவது,
   (1) 21 வயது பூர்த்தி (2) 18 வயது பூர்த்தி (3) 16 வயது பூர்த்தி (4) 14 வயது பூர்த்தி

7. சனநாயக ஆட்சி நிலவும் நாடொன்றில், வாக்காளருக்குள்ள உரிமைகளுள் உள்ளடங்காதது
   (1) கல்வி கற்கும் உரிமை.
   (2) தனது வாக்கைப் பயன்படுத்தும் உரிமை.
   (3) தேர்தல் பிரச்சாரங்களில் கலந்து கொள்ளும் உரிமை.
   (4) தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் உரையாற்றும் உரிமை.

8. பின்வருவனவற்றுள் ஜனாதிபதி ஆட்சிமுறையின் பண்பினைக் குறிப்பிடும் விடையைத் தெரிவு செய்க.
   (1) சட்டத்துறை மூலம் நிறைவேற்றுத்துறை தெரிவு செய்யப்படல்.
   (2) சட்டத்துறைக்கும் நிறைவேற்றுத்துறைக்கும் நேரடித் தொடர்பு காணப்படல்.
   (3) பெயரளவு நிர்வாகம், உண்மை நிர்வாகம் என்ற வேறுபாடுகள் காணப்படல்.
   (4) சட்டத்துறைக்கு நிறைவேற்றுத்துறை பொறுப்புச் சொல்லத் தேவையில்லை.

9. தேர்தல் தொகுதிக்கமைவாக பாராளுமன்றத்துக்கு பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதாலேற்படும் அனுகூலமாக அமைவது.
   (1) ஆட்சியாளர் தன்னிச்சையாகச் செயற்படுவதைத் தடுத்தல்.
   (2) சனநாயக விரோதச் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தல்.
   (3) பிரதேச அபிவிருத்திக்குச் சந்தர்ப்பமளித்தல்.
   (4) சமாதானமான சூழலைக் கட்டியெழுப்பல்.

10. பலம்மிக்கத் தேசிய அரசுகளாக மேற்குலக நாடுகள் எழுச்சி பெற்றமைக்கான காரணங்களுள் **உள்ளடங்காதது.**
    (1) தேசிய ஒருமைப்பாடு (2) விஞ்ஞான மறுமலர்ச்சி
    (3) வளர்ச்சியடைந்த பொருளாதாரம் (4) போர் மற்றும் படைப்பலம்

11. வெளித்தடைகளற்ற விதத்தில் மனிதன் தனது தனித்துவத்தை விருத்தி செய்து கொள்வதற்கான நிலைமை.
    (1) உரிமை எனப்படும் (2) சுதந்திரம் எனப்படும் (3) சமத்துவம் எனப்படும் (4) சட்டம் எனப்படும்

12. அரசங்காமொான்றின் சட்டத்துறையின் பணிகளுள் ஒன்றாக அவைது.
(1) வெளிநாட்டுத் தொடர்புகளை மேற்கொள்ளல்.
(2) நீதியை நிலைநாட்டல்.
(3) தேசிய பாதுகாப்பு
(4) நிதி நிர்வாகம்

13. பாராளுமன்ற அரசாங்க முறையில் உண்மை நிர்வாகமாகச் செயற்படுவது.
(1) ஜனாதிபதி தலைமையிலான அமைச்சரவை ஆகும்.
(2) முடி.
(3) முதலமைச்சரும், அமைச்சரவையும்.
(4) பிரதமரும், அமைச்சரவையும்.

14. அரசின் விருப்பையும் மக்களின் எதிர்ப்பையும் நடைமுறைப்படுத்தும் பிரதிநிதியாகக் கருதப்படுவது.
(1) ஜனாதிபதி (2) பிரதமர் (3) சபாநாயகர் (4) அரசாங்கம்

15. சனநாயக சமூகமொன்றின் பிரசையொருவரினால் சமூகத்திற்கு ஆற்ற வேண்டிய இரண்டு வகையான கடமைகள்.
(1) சிவில் மற்றும் அரசியல் கடமைகள்.
(2) கலாசார மற்றும் சமயக் கடமைகள்.
(3) பொருளாதார மற்றும் சமூகக் கடமைகள்.
(4) சட்ட மற்றும் ஒழுக்க ரீதியான கடமைகள்.

16. பாராளுமன்ற அரசாங்க முறையின் பிரதான பகுதிகள் மூன்று வரிசையொழுங்கில்,
(1) நிறைவேற்றுத் துறை, சட்டத்துறை, நீதித்துறை.
(2) சட்டத்துறை, நிறைவேற்றுத் துறை, நீதித்துறை.
(3) நீதித்துறை, நிறைவேற்றுத்துறை, சட்டத்துறை.
(4) நிறைவேற்றுத்துறை, நீதித்துறை, சட்டத்துறை.

17. தேர்தலொன்றில் பொதுமக்கள் விரும்பும் அரசாங்கமொன்றை அதிகாரத்தில் அமர்த்துவதில் செல்வாக்குச் செலுத்தும் முக்கிய காரணியாக அமைவது.
(1) சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல் நடைபெறுதல்.
(2) சட்டத்தின் ஆட்சி பாதுகாக்கப்படல்.
(3) மக்களுக்குப் போதியளவு அரசியலறிவு காணப்படல்.
(4) அனைவருக்கும் சமவுரிமை காணப்படல்.

18. சனநாயக மக்கள் சமூகத்தில் ஊடகங்கள் மூலம் நிறைவேற்ற வேண்டிய செயற்பாடு **அல்லாதது.**
(1) அரசியல் கட்சிகளை முன்னேற்றுதல்.
(2) மக்களின் அறிவை விருத்தி செய்தல்.
(3) உண்மையானதும் சரியானதுமான தகவல்களை வழங்குதல்.
(4) சமகால தகவல்களை உரிய நேரத்தில் வழங்குதல்.

19. சனநாயக ஆட்சிமுறை நடைமுறையிலுள்ள நவீன அரசுகள் முயற்சிப்பது.
(1) தொடர்பாடல் சேவைகளை இணைப்பதற்கு.
(2) சனநாயக கோட்பாடுகளை உறுதிப்படுத்துவதற்கு.
(3) உலகமயமாக்கத்தின் நோக்கங்களை நிலைநாட்டுவதற்கு.
(4) பண்பாட்டுப் பல்வகைமையில் நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு.

20. அரசின் அல்லது மக்களின் விருப்பங்களைக் கொள்கைகளாக மாற்றுவதன் மூலம் அவற்றை நடைமுறைக்கு கொண்டு வரும் பிரதிநிதி அரசாங்கமாகும் எனக் கூறிய அறிஞர்.
(1) எ.்.ப். ஸ்ட்ரோங் (2) ஹரட். ஜே. வஸ்கி (3) பேராசிரியர் காணர் (4) ஏ.வி. டைசி

(20×2 = 40 புள்ளிகள்)

## பகுதி - II

1. (1) கிரேக்கத்தில் நேரடி ஜனநாயக ஆட்சியில் பங்குபெற்ற சந்தர்ப்பம் மறுக்கப்பட்ட தரப்பினர் இருவரைக் குறிப்பிடுக.
   (2) கி.மு.6ஆம் நூற்றாண்டில் இந்தியாவில் ஆரிய குடியேற்றமான வஜ்ஜியில் ஜனநாயகப் பண்பு கள் பின்பற்றப்பட்டமைக்கான ஆதாரங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
   (3) சனநாயக ஆட்சி முறையின் இரு பிரதான பிரிவுகளைக் குறிப்பிடுக.
   (4) இரு கட்சி முறை நிலவும் நாடுகள் இரண்டு தருக.
   (5) அரசியல் யாப்பில் உள்ளடங்கப்பட்டுள்ள விடயங்கள் இரண்டு தருக.
   (6) அரசு தொடர்பாக வரைவிலக்கணங்களை முன்வைத்த இரு அறிஞர்களைக் குறிப்பிடுக.
   (7) சனாதிபதி அரசாங்க முறையின் பண்புகள் இரண்டினைக் குறிப்பிடுக.
   (8) பண்டைய காலம் தொட்டு உலகில் நிலவிய ஆட்சி முறைகளுக்கு இரண்டு உதாரணங்களைக் குறிப்பிடுக.
   (9. கிழக்கு மாகாணத்தில் உள்ளடங்கும் மாவட்டங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
   (10. இலங்கை மக்கள் தமது வாக்குரிமையைப் பயன்படுத்தும் சந்தர்ப்பங்கள் இரண்டு தருக.

2. (1) மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்காக பின்பற்றப்படும் தேர்தல் முறைகளைக் குறிப்பிடுக.
   (2) சனநாயக சமூகத்தின் நடைமுறைக்காக சுதந்திர ஊடகங்களால் நிறைவேற்றப்பட வேண்டிய பொறுப்புக்கள் மூன்று தருக.
   (3) a) அரசின் பொறுப்புக்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
   b) மேலே (a) இல் குறிப்பிட்ட பொறுப்புக்களில் ஒரு பொறுப்பினை விளக்குக.

   $(2+3+2+3=10)$

3 (1) ஐரோப்பாவில் ஆரம்பத்தில் தோற்றம் பெற்ற தேசிய அரசுகள் இரண்டினைக் குறிப்பிடுக.
   (2) ஐரோப்பாவில் பலம்மிக்க தேசிய அரசுகள் எழுச்சி பெறுவதற்கு பங்களித்த காரணிகள் மூன்றினைக் குறிப்பிடுக.
   (3) a) 1978 ஆம் ஆண்டு இரண்டாம் குடியரசு யாப்பில் 28ஆம் அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பிரஜைகளின் கடமைகள், பொறுப்புக்கள் இரண்டு தருக.
   b) மேலே (a) இல் குறிப்பிடப்பட்டுள்ள கடமைகள் பொறுப்புக்களில் ஒன்றினை விளக்குக.

   $(2+3+2+3=10)$

4. (1) சனநாயக ஆட்சிமுறை நிலவும் ஓர் நாட்டில் மேற்கொள்ளப்படும் சமூக நலனோம்பல் செயற்பாடுகள் இரண்டு தருக.
   (2) சனநாயகப் பிரஜைகளிடம் காணப்படும் பண்புகளில் மூன்றைக் குறிப்பிடுக.
   (3) (a) தேர்தல் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டு பிரதிநிதிகளைத் தெரிவு செய்யப்படும் நிறுவனங்கள் இரண்டு தருக.
   (b) தேர்தல் தொகுதிகள் மூலம் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதன் நன்மைகள் மூன்று தருக.

   $(2+3+2+3=10)$

5) (1) சட்டசபையின் செயற்பாடுகள் இரண்டு தருக.
   (2) அரசின் பிரஜைகள் மீதான பொறுப்புக்களுக்கு மூன்று உதாரணங்கள் தருக.
   (3) (a) மாணவர் என்ற வகையில் நீங்கள் அனுபவிக்கும் உரிமைகள் இரண்டினைக் குறிப்பிடுக.
   (b) அவ் உரிமைகளை அனுபவிப்பதற்காக நீங்கள் நிறைவேற்ற வேண்டிய கடமைகள் மூன்றினைக் குறிப்பிடுக.

   $(2+3+2+3=10)$

# இரண்டாம் தவணைப் பரீட்சை

**தரம் - 10** **குடியியற் கல்வி** **பகுதி - I**

➢ **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

1. பிரதிநிதித்துவ ஜனநாயகத்தை உலகுக்கு அறிமுகம் செய்த நாடு,
   (1) பிரித்தானியா (2) இலங்கை
   (3) மாலைதீவு (3) இந்தியா

2. அரசொன்றின் கூறுளுள் **உள்ளடங்காதது?**
   (1) நிலப்பரப்பு (2) சனத்தொகை
   (4) இறைமை (4) சட்டம்

3. சனநாயக சமூகத்தில் சமூகத்துக்கு ஆற்ற வேண்டிய கடமைகளில் ஒன்றாக அமைவது?
   (1) சட்ட ரீதியான கடமை (2) அரசியற் கடமை
   (3) சமயக் கடமை (4) சமூகக் கடமை

4. பராளுமன்ற அரசாங்க முறையின் நிறைவேற்றுத்துறையின் தலைவர்,
   (1) சனாதிபதி (2) பிரதமர்
   (3) ஆளுநர் (4) முதலமைச்சர்

5. அரசின் விருப்பை மக்களின் எதிர்பார்ப்பையும் நடைமுறைப்படுத்தும் பிரதானி,
   (1) அரசாங்கம் (2) சனாதிபதி
   (3) பிரதமர் (4) ஆளுநர்

6. எந்த ஒரு வேறுபாடுகளும் இன்றி உரிமைகள் மற்றும் சுதந்திரத்தை அனுபவிக்க பிரஜை ஒருவருக்கு வழங்கப்பட்ட வாய்ப்பு அறியப்படுவது?
   (1) சமத்துவம் (2) நீதி
   (3) சட்டம் (4) ஒழுங்கு

7. வெளித்தடைகளற்ற விதத்தில் மனிதன் தனது தனித்துவத்தை விருத்தி செய்வதற்கான நிலமை சுதந்திரமாகும் எனக் குறிப்பிட்டவர்?
   (1) EUH தோஸ் (2) இலிங்கன்
   (3) H.கிரீன் (4) K.சிவியர்

8. கிரேக்க நகர ஆச்சி அரசின் பிரதான ஆட்சி நிறுவனம்,
   (1) பிரதிநிதிகள் சபை (2) மக்கள் மன்றம்
   (3) குடிமக்கள் சபை (4) செனட் சபை

9. குறித்த வயதெல்லை தாண்டியுள்ள மக்களுக்கு ஆட்சியாளரைத் தெரிவுசெய்வதற்குள்ள உரிமையைக் குறிப்பது?
   (1) வரையறுக்கப்பட்ட வாக்குரிமை (2) விகிதாசார வாக்குரிமை
   (3) விருப்பு வாக்குரிமை (4) சர்வசன வாக்குரிமை

10. சனநாயக மக்கள் சமூகத்துவ ஊடகம் மூலம் நிறைவேற்றப்பட வேண்டிய செயற்பாடு அல்லாதது?
    (1) அரசியல் கட்சிகளின் முன்னேற்றம்
    (2) மக்களின் அறிவை விருத்தி செய்தல்
    (3) உண்மையானதும் சரியானதுமான தகவல்களை வழங்குதல்
    (4) சமகாலத் தகவல்களை உரிய நேரத்துள் வழங்குதல்

11. மக்களினால் அவர்களின் நிர்வாகத்திற்காக நடத்தப்படும் நிர்வாக முறை,
(1) பாசிச வாதம் (2) சனநாயகம்
(3) முதலாளித்துவம் (4) சோசலிசம்

12. அரசொன்றின் இறைமையதிகாரம் தங்கியிருப்பது,
(1) நிறைவேற்றுத்துறையிடம் (2) பாராளுமன்றத்திடம்
(3) பொதுமக்களிடம் (4) சட்டத்துறையிடம்

13. ஜனநாயக நாட்டின் வெற்றிக்கு அவசியமான காரணி,
(1) வறுமையை ஒழித்தல்.
(2) அரசியல் அறிவு படைத்த மக்கள்.
(3) ஊழலை ஒழித்தல்.
(4) இருத்தல் மக்கள் பிரச்சினைகளை முன்வைக்கும் ஆற்றல்.

14. இரு கட்சி முறையிலுள்ள நாடுகளின் சோடி
(1) பெரிய பிரித்தானியா, இந்தியா (2) சீனா, ரஷ்யா
(3) பெரிய பிரித்தானியா, அமெரிக்கா (4) இந்தியா, இலங்கை

15. தேசிய அரசின் தோற்றத்திற்குக் காரணமான சிந்தனையாளருள் **அடங்காதவர்.**
(1) ஜீன் போடின் (2) நிக்கலோ மக்கியவல்லி
(3) கானர் (4) தோமஸ் கொப்ஸ்

16. இலங்கை பிரசையொருவருக்கு வாக்குரிமையைப் பயன்படுத்துவதற்கான தலைமையைப் பெறும் வயதெல்லை.
(1) 15 வயது பூரணப்படுத்தல் (2) 18 வயதைப் பூரணப்படுத்தல்
(3) 21 வயரைப் பூரணப்படுத்தல் (4) 24 வயதை பூரணப்படுத்தல்

17. நேரடிஜனநாயகம் நிலவிய எதென்ஸ் நகராட்சியில் நிர்வாக நடவடிக்கைகளின் பலவற்றுக்கு உரித்துடைய குழுவினர்,
(1) பெண்கள் (2) பிரஜா உரிமையுடைய ஆண்கள்
(3) வெளிநாட்டவர் (4) அரச சேவையாளர்

18. தேர்தல் தொகுதிக்கமைய பாராளுமன்றத்தற்கு மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதால் ஏற்படும் அனுகூலம்,
(1) சுதந்திரமான தேர்தலை நடத்துதல்
(2) சமாதானமான சூழலை உருவாக்குதல்
(3) சனநாயக விவகார செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தல்
(4) பிரதேச அபிவிருத்திக்கு உதவுதல்

19. ஜனநாயக ஆட்சி பெற்றி பெறுவதற்கு எதிர்க்கட்சியின் பொறுப்புக்களும் கடமைகளுள் **உள்ளடங்காதது,**
(1) ஆளும் கட்சியின் சிறந்த செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்குதல்.
(2) ஆளும் கட்சியின் அரச விரோத செயற்பாடுகளுக்கு எதிர்ப்பு தெரிவித்தல்
(3) ஆளும் கட்சியின் அடக்குமுறைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குதல்.
(4) மிகச் சிறப்பான மாற்று ஆட்சியை ஏற்படுத்தல்.

20. மனித உரிமைகள் பற்றிய பிரகடனத்தை வெளியிட்ட ஐக்கிய நாடுகள் சபையின் நிறுவனம்,
(1) பாதுகாப்புச் சபை (2) பொதுச்சபை
(3) செயலகம் (4) சமூக பொருளாதார சபை

21. இலங்கையில் மாகாண ஆளுநரின் பதவிக்காலம்,
(1) மூன்று வருடம (2) 2 வருடம் (3) 5 வருடம் (4) 6 வருடம்

22. இலங்கையில் செயற்படும் மாநகர சபையின் பிரதானி,
(1) ஆணையாளர் (2) செயலாளர் (3) தவிசாளர் (4) நகரபிதா

23. மாகாணசபையொன்றின் அமைச்சரவையானது, முதல் அமைச்சர் உட்பட,
(1) மூன்று அமைச்சர்களைக் கொண்டது, (2) நான்கு அமைச்சர்களைக் கொண்டது
(3) ஐந்து அமைச்சர்களைக் கொண்டது. (4) ஆறு அமைச்சர்களைக் கொண்டது.

24. சமஷ்டி ஆட்சிமுறை நிலவும் நாடாக அமைவது,
(1) ஐக்கிய அமெரிக்கா (2) ஐக்கிய இராச்சியம் (3) பிரான்ஸ் (4) இலங்கை

25. மத்திய அரசின் அதிகாரங்கள் அரசியல் யாப்பின் மூலம் பிராந்திய ஆட்சி அலகுகளுக்கு ஒப்படைக்கப்பட்டது.
(1) அதிகாரத்தைப் பகிர்ந்தளித்தல் எனப்படும்.
(2) அதிகாரத்தைப் பன்முகப்படுத்தல் எனப்படும்.
(3) அதிகாரக் குவிப்பு
(4) அதிகாரத்தைக் கை விடுதல் எனப்படும்.

26. சுவிட்சர்லாந்து சட்டத்துறை அழைக்கப்படுவது?
(1) சமஷ்டி பேரவை (2) தேசிய சபை (3) அரசசபை (4) சமஷ்டி சபை

27. மாகாண முதலமைச்சரை நியமிக்கும் அதிகாரமுடையவர்
(1) சனாதிபதி (2) பிரதம மந்திரி (3) பிரதம செயலாளர் (4) ஆளுநர்

28. ஒரு மத்திய அதிகாரபீடம் மாத்திரம் சட்டமியற்றும் உயர் அதிகாரத்தைக் கொண்டிருப்பது, ஒற்றையாட்சியின் அடிப்படைப் பண்பாகும் எனும், கருத்தை முன்வைத்தவர்.
(1) பேராசிரியர் A.V. டைசி (2) பேராசிரியர் C.F. ஸ்ரோங்
(3) கலாநிதி K.C வியர் (4) பேராசிரியர் பைனர்

29. சமஸ்டி அரசொன்றை வெற்றி பெறுவதற்கான இயல்பு **அல்லாதது,**
(1) அரசியல் யாப்புக்கு ஏற்ப செயற்படல்.
(2) சகல இனக்குழுக்களுக்கும் தேசிய உணர்வுடன் செயற்படுதல்.
(3) நிதி வளங்களைப் பங்கிடும்போது நேர்மையான முறையில் செயற்படுதல்.
(4) அரசியல் யாப்புக்கு விளக்கம் வழங்கும்போது மத்திய அரசுக்கு சார்பாகச் செயற்படுதல்.

30. அமெரிக்காவில் உள்ள மாநிலங்களின் எண்ணிக்கை,
(1) 13 (2) 26 (3) 50 (4) 28

31. வழிபாடுகள், சிந்தனை முறை நடைமுறைக்கலைகள், வாழ்க்கை முறைகள், பழக்கவழக்கங்கள், சம்பிரதாயங்கள் மற்றும் சமூக ரீதியாகப் பின்பற்றுவது தொடர்பில் ஏற்றுக் கொள்ளப்பட்ட நடத்தைகள் பண்பாடாகும் எனக்கூறியவர்,
(1) J.P. ரெயிலர் (2) A. சாள்ஸ் எல்லுஸ்
(3) C.சீலர் (4) கானர்

32. வேற்றுமைக்கு மத்தியில் ஒற்றுமையை ஏற்படுத்தலை இலக்காகக் கொண்டு செயற்படும் நாடுகள்.
(1) இலங்க, இந்தியா (2) மாலைதீவு, நோபளம்
(3) உக்ரைன், ரஷ்யா (4) சிங்கப்பூர், சுவிட்சர்லாந்து

33. இலங்கை பண்பாட்டுச் சமூகம் உருவாக்கத்தில் செல்வாக்குச் செலுத்திய ஆக்கிரமிப்புத் தொடர்பான காரணியாக **அமையாதது,**
(1) இந்தியா, சீனா வருகை (2) சேனன், குத்திகன் ஆக்கிரமிப்பு
(3) பண்டுபாகிந்த குழுவின் ஆக்கிரமிப்பு (4) கலிங்க மாகனின் ஆக்கிரமிப்பு

34. நல்லாட்சி தொடர்பான எண்ணக்கரு தோற்றம் பெற்ற ஆண்டு,
(1) 1979 (2) 1980 (3) 1972 (4) 1975

35. சமூகம் ஒன்றில் பல்வேறு பண்பாடுகளுக்குரிய மக்கள் குழுக்கள் ஒற்றுமையாக வாழும் சமூகம் அழைக்கப்படும் விதம்?
(1) பன்மத சமூகம் (2) பல்பண்பாட்டு சமூகம்
(4) பல்லின சமூகம் (4) பல்தேசிய சமூகம்

36. "அ" நிரலில் பன்மைப் பண்பாட்டுச் சமூகத்தில் காணப்படும் சிறப்பான சமயங்களும் "ஆ" நிரலில் அச்சமயங்களுக்குரிய விழாக்களும் தரப்பட்டுள்ளன. அவற்றைத் தொடர்புபடுத்தும்போது கிடைக்கும் சரியான விடைத் தொகுதி,

| "அ" | "ஆ" |
|---|---|
| 1) பௌத்தம் | A- தீபாவளி |
| 2) இந்து | B- நம்ழான் |
| 3) இஸ்லாம் | C- பெரியவெள்ளி |
| 4) கிறிஸ்தவம் | D- வெசாக் |

1) ABCD 2) BCAD 3) DABC 4) DCBA

37. இலங்கையில் உள்ள தேர்தல் மாவட்டங்களின் எண்ணிக்கை?
(1)30 (2) 25 (3) 09 (4) 22

38. இலங்கையில் உள்ள மிகச்சிறிய நிர்வாகப் பிரிவு
(1) கிராம சேவகர் பிரிவு (2) பிரதேச செயலாளர் பிரிவு
(3) மாவட்ட செயலகம் (4) மத்திய அமைச்சு

39. தற்கால உலகில் பண்பாட்டுக் கலப்பிற்கு ஏதுவான முக்கிய காரணி
(1) நாடுகளின் புவியியல் அமைவிடம்
(2) வர்த்தகத் தொடர்புகள் விரிவடைதல்
(3) மேற்கு நாடுகளின் செல்வாக்கு அதிகரித்தல்
(4) உலகம் கிராமமாக மாறியமை

40. பண்டுகாபய மன்னன் ஆட்சிக்காலத்தில் கிராம நிர்வாகத்திற்காக நியமிக்கப்பட்ட அதிகாரி,
(1) கமீபார (2) திச.வை (3) கோரளை (4) பற்று

(40x1=40 புள்ளிகள்)

## பகுதி - II

➢ **முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

1. (1) பண்டைய காலம் தொடக்கம் உலகில் இடம்பெற்று வந்துள்ள ஆட்சி முறைகள் இரண்டு தருக.
(2) புராதன கிரேக்கத்தின் எதென்ஸ் நகரில் செயற்பட்ட மக்கள் மன்றங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
(3) இறைமை அதிகாரம் உள்ளடக்கியுள்ள கூறுகள் இரண்டினைக் குறிப்பிடுக.
(4) ஜனநாயக ஆட்சி ஒன்றின் சீரான செயற்பாட்டிற்கு எதிர்க்கட்சியொன்றினால் ஆற்றப்படும் பணிகள் இரண்டு தருக.
(5) தேசிய அரசொன்றின் தோற்றத்தில் பங்களிப்புச் செய்த காரணிகள் இரண்டு தருக.
(6) அதிகாரத்தின் பிரதான வகைகள் இரண்டு தருக.
(7) சமஷ்டி அரசொன்றின் பிரதான பண்புகள் இரண்டு தருக.
(8) சுவிட்சர்லாந்தின் கன்ரன் அரசுகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் இரண்டு தருக.
(9) வியாபார நோக்கில் இலங்கைக்கு வருகை தந்த இரு நாட்டவரைக் குறிப்பிடுக.
(10) பன்மைப் பண்பாட்டுச் சமூகத்தின் விருத்திக்கு பிரசையொருவர் விருத்தி செய்ய வேண்டிய பண்புகள் இரண்டு தருக. (10x2= 20 புள்ளிகள்)

2. (i) கிரேக்க மொழிச் சொற்களான"Demos",'Kratos" என்பதன் கருத்துக்களை முறையே குறிப்பிடுக.

(ii) கி.மு. 6 ஆம் நூற்றாடில் இந்தியாவின் வஜ்ஜி என்னும் குடியிருப்பில் பின்பற்றியிருந்த ஜனநாயகப் பண்புகள் மூன்றினைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iii) (a) உலகில் காணப்படும் பிரதான கட்சி முறைகள் இரண்டைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iv) (b) அவற்றுள் ஒன்றினை விளக்குக. (02 புள்ளிகள்)

3. (i) தற்கால உலகில் காணப்படும் அரசாங்கத்தின் பிரதான வகைகள் இரண்டும் எவை? (02 புள்ளிகள்)

(ii) அரசின் பிரசைகள் மீதான பொறுப்புக்கள் மூன்று தருக. (03 புள்ளிகள்)

(iii) (a) ஜனநாயக ஆட்சி வெற்றி பெறுவதற்கு அவசியமான காரணங்கள் இரண்டு குறிப்பிடுக.

(b) அவற்றுள் ஒன்றினை விளக்குக.

4. (i) 1978 இரண்டாம் குடியரசு யாப்பில் இறைமை அதிகாரம் செயற்படுத்தப்படும் விதம் இரண்டு தருக. (02 புள்ளிகள்)

(ii) ஒற்றையாட்சி முறையின் பண்புகள் மூன்றினைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(a) 1978 ஆம் ஆண்டு இரண்டாம் குடியரசு யாப்பின் 13 ஆவது சீர்த்திருத்தத்தில் அதிகாரங்கள் பகிரப்பட்டுள்ள பட்டியல்கள் இரண்டு தருக.

(b) அவற்றுள் ஒன்றின் அதிகாரங்களை விளக்குக.

5. (i) ஐக்கிய அமெரிக்காவின் சட்டத்துறையான காங்கிரசின் இரு மன்றங்களும் எவை?

(ii) சுவிட்சர்லாந்து சமஷ்டி அரசாக உருவாகுவதில் செல்வாக்குச் செலுத்திய காரணங்கள் மூன்று தருக.

(iii) (a) சமஷ்டி ஆட்சியொன்று வெற்றிபெறுவதற்கு அவசியமான காரணங்கள் இரண்டு தருக.

(b) அவற்றுள் ஒன்றினைச் சுருக்கமாக விளக்குக.

6. (i) இலங்கையில் பன்மைத்துவ சமூகத்தில் வாழும் சிறுபான்மையின இனங்கள் இரண்டு தருக.

(ii) நல்லாட்சி என்னும் எண்ணக்கரு தோற்றம் பெறுவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணங்கள் மூன்று தருக.

(iii) (a) பன்மைப் பண்பாட்டுச் சமூகத்தில் மக்கள் ஒற்றுமையுடன் செயற்படுவதன் மூலம் ஏற்படும் நன்மைகள் இரண்டு தருக.

(a) மேலே குறிப்பிட்ட நன்மைகளுள் ஒன்றினை விளக்குக.

7. (i) இலங்கையில் ஒன்றுக்கு மேற்பட்ட சமயங்களைப் பின்பற்றுகின்ற இனங்கள் இரண்டைக் குறிப்பிடுக.

(ii) எமது நாடு பன்மைப் பண்பாட்டுச் சமூகமாக உருவாகுவதில் செல்வாக்குச் செலுத்திய குடிப்பெயர்வு தொடர்பான காரணிகள் மூன்று தருக.

(iii) (a) நல்லாட்சியை சமூகத்தில் நிலைநாட்டுவதற்குக் கருத்திற்கொள்ள வேண்டிய சமூக, பண் பாட்டுக் காரணிகள் இரண்டு தருக.

(b) மேலே குறிப்பிட்ட காரணிகள் ஒன்றினை விளக்குக.

# மூன்றாம் தவணைப் பரீட்சை

**தரம் - 10** **குடியியற் கல்வி** **பகுதி - I**

➢ **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

1. நேரடி ஜனநாயகத்தின் தாயகமாக விளங்கும் நாடு,
   (1) பிரித்தானியா (2) கிரேக்கம்
   (3) எதென்ஸ் (4) சுவிஸ்லாந்து

2. பண்டைக்காலத்தில் குழுவாட்சி முறை நிலவிய கீழைத்தேய நாடு,
   (1) கிரேக்கம் (2) இங்கிலாந்து
   (3) இந்தியா (4) அமெரிக்கா

3. உலகில் இருகட்சி முறையை மட்டும் கொண்ட நாடுகளின் தொகுதி,
   (1. இந்தியா, இலங்கை (2. இலங்கை, ஐக்கிய அமெரிக்கா
   (3. பிரித்தானியா, ஐக்கிய அமெரிக்கா (4. வடகொரியா, பிரித்தானியா

04. ஜனநாயக நாடொன்றில் சகலருக்கும் சமவாய்ப்புக்களையும் சந்தர்ப்பங்களையும் வழங்குவது,
   (1) உரிமை (2) சுதந்திரம் (3) சமத்துவம் (4) சட்டவாட்சி

05) சட்டத்துறையிலிருந்து நிறைவேற்றுத்துறை தெரிவு செய்யப்படும் அரசாங்க முறை,
   (1) ஜனாதிபதி அரசாங்க முறை (2) பாராளுமன்ற அரசாங்க முறை
   (3) ஒற்றையாட்சி அரசாங்க முறை (4) சமஷ்டியாட்சி அரசாங்க முறை

06. இலங்கையில் இரண்டு நிர்வாக மாவட்டங்களைக் கொண்ட தேர்தல் மாவட்டம்,
   (1) கொழும்பு (2) யாழ்ப்பாணம்
   (3) மட்டக்களப்பு (4) ஹம்பகா

07. நாட்டின் அடிப்படைச் சட்டமாக அமைவது,
   (1) குடியியல் சட்டம் (2) குற்றவியல் சட்டம்
   (3) அரசியலமைப்புச் சட்டம் (4) நிர்வாகச் சட்டம்

08. ஜனாதிபதி அரசாங்க முறையொன்றில் நிறைவேற்றதிகாரத்தைச் செயற்படுத்துபவர்,
   (1) ஜனாதிபதி (2) பிரதமர் (3) பிரதம நீதியரசர் (4) முதலமைச்சர்

09. இலங்கையில் தேர்தல் தொகுதிகளைப் பிரித்தொதுக்கும் அதிகாரம் உள்ள ஆணைக்குழு,
   (1) தேர்தல் ஆணைக்குழு (2) எல்லை நிர்ணய ஆணைக்குழு
   (3) அரச சேவை ஆணைக்குழு (4) லஞ்ச ஊழல் ஆணைக்குழு

10. ஐரோப்பாவில் முதலில் தோன்றிய தேசிய அரசுகள்,
   (1) இங்கிலாந்து, பிரான்ஸ் (2) ஜேர்மனி, இத்தாலி
   (3) பிரான்ஸ், போர்த்துக்கல் (4) ஸ்பானியா, ஜேர்மனி

11. தேர்தல் தொகுதியைப் பிரிக்கும்போது கவனத்தில் எடுக்க வேண்டிய அடிப்படை நியதிகள்,
   (1) நிலப்பரப்பு, சனத்தொகை (2) சனத்தொகை, இன வேறுபாடு
   (3) நிலப்பரப்பு, சுகாதாரம் (4) பொருளாதாரம், கலாசாரம்

12. கிரேக்க நகராட்சியின் பிரதான ஆட்சி நிறுவனம்,
   (1) பிரதிநிதிகள் சபை (2) குடிமக்கள் சபை
   (3) மக்கள் மன்றம் (4) செனற் சபை

13. “மனிதன் தனது சமூக வாழ்க்கையைச் செல்வனே கொண்டு செல்லத் தேவையான நிபந்தனைகள்” அழைக்கப்படுவது,
(1) சமத்துவம் (2) உரிமை
(3) சுதந்திரம் (4) கடமை

14. தேசிய அரசின் சிந்தனையை முன்வைத்தவர்கள்,
(1) ஆபிரகாம் லிங்கன், சீலர் (2) ஜீன்போடின், தோமஸ் ஹொப்ஸ்
(3) அரிஸ்ரோட்டில், பிளேட்டோ (4) நிக்கலோ மாக்கியவல்லி, ரூசோ

15. இலங்கையில் செயற்படும் மாநகர சபையின் பிரதானி,
(1) ஆணையாளர் (2) செயலாளர்
(3) நகரபிதா (4) தவிசாளர்

16. இலங்கையில் மகாண ஆளுநரின் பதவிக்காலம்,
(1) 3 வருடங்கள் (2) 4 வருடங்கள்
(3) 5 வருடங்கள் (4) 6 வருடங்கள்

17. மாகாணசபையொன்றின் அமைச்சர்களின் எண்ணிக்கை,
(1) முதலமைச்சர் உட்பட 4 பேர் (2) முதலமைச்சர் உட்பட 5 பேர்
(3) ஆறு அமைச்சர்கள் (4) ஏழு அமைச்சர்கள்

18. மத்திய அரசின் அதிகாரங்கள் அரசியல் யாப்பின் மூலம் பிராந்திய ஆட்சி அலகுகளுக்கு ஒப்படைப்பது,
(1) அதிகாரத்தைப் பகிர்ந்தளித்தல் (2) அதிகாரத்தைப் பன்முகப்படுத்தல்
(3) அதிகாரத்தைக் குவித்தல் (4) அதிகாரத்தைக் கைவிடுதல்

19. இலங்கையில் மாகாணசபையின் பதவிக்காலம்,
(1) 3 வருடங்கள் (2) 4 வருடங்கள்
(3) 5 வருடங்கள் (4) 6 வருடங்கள்

20. சமஷ்டியாட்சி முறை நிலவும் நாடுகள் இரண்டு,
(1) சுவிட்சர்லாந்து ஐக்கிய அமெரிக்கா (2) பிரித்தானியா, இந்தியா
(3) பிரான்ஸ், இலங்கை (4) பிரித்தானியா, சுவிஸ்

21. சுவிற்சர்லாந்தின் மாநிலங்கள் அழைக்கப்படுவது,
(1) தேசிய சபை (2) சமஷ்டி சபை
(3) கன்ரன் (4) அரச சபை

22. இலங்கையில் பன்மைப் பண்பாட்டுச் சமூகம் உருவாவதில் செல்வாக்குச் செலுத்திய குடிப்பெயர்வு தொடர்பான காரணி,
(1) ஐரோப்பியர் வருகை (2) மதுராபுரி இளவரசியின் வருகை
(3) சேனன், குத்திகன் வருகை (4) சீனரின் வருகை

23. நல்லாட்சியின் அடிப்படைப் பண்பு <u>அல்லாதது,</u>
(1) ஊடக சுதந்திரத்தைப் பாதுகாத்தல்.
(2) நீதித்துறை சுதந்திரத்தைப் பாதுகாத்தல்.
(3) சட்டவாட்சியை நடைமுறைப்படுத்தல்.
(4) வெளிப்படைத் தன்மையற்ற வகையில் செயற்படல்.

24. ஓரினத்திற்கு ஓர் அரசு என்ற எண்ணக்கருவை அடிப்படையாகக் கொண்டது,
(1) நவீன தேசிய அரசு (2) நிலமானிய அரசு
(3) சமஷ்டியரசு (4) ஜனநாயக அரசு

25. பன்மைப் பண்பாட்டுச் சமூகமொன்றில் மக்கள் ஒற்றுமையாக வாழ்வதால்,
(1) அன்னியோன்ய தொடர்பு விருத்தியடையும்.
(2) ஊழல் மற்றும் மோசடிகள் குறைக்கப்பட முடியும்.
(3) ஊடக சுதந்திரம் பாதுகாக்கப்பட முடியும்.
(4) அரசியல் தலைமைத்துவத்துக்கு மதிப்பளித்தல் இடம்பெறும்.

26. சமூகமொன்றில் பல்வேறு பண்பாடுகளுக்குரிய மக்கள் குழுக்கள் ஒற்றுமையாக வாழும் சமூகமானது,
(1) பன்மதச் சமூகம் எனப்படும்
(2) பன்மைப் பண்பாட்டுச் சமூகம் எனப்படும்
(3) பல்லினச் சமூகம் எனப்படும்
(4) பல்தேசிய சமூகம் எனப்படும்

27. நவீன பன்மைப் பண்பாட்டுச் சமூகங்களில் காணக்கூடிய சிறப்புப் பண்பு,
(1) சமயக் கருத்துக்களிடையே முரண்பாடு உருவாதல்.
(2) பூகோளமயமாதலில் செல்வாக்கிற்கு உள்ளாகுதல்.
(3) இனங்களுக்கிடையில் முரண்பாடு உருவாகுதல்.
(4) கலாசார சங்கமங்கள் வேகமாக நிகழுதல்.

28. வளங்கள் தேவையிலும் பார்க்கக் குறைவாகக் காணப்படுவது,
(1) விருப்பம்
(2) அருமை
(3) தேவை
(4) ஆசை

29. முதலாளித்துவப் பொருளாதாரத்தில் சந்தை இயல்பினை அதிகம் கொண்டுள்ள நாடுகளாவன,
(1) சீனா, ரஷ்யா
(2) போலந்து, ருமேனியா
(3) சிங்கப்பூர், தென்கொரியா
(4) ரஷ்யா, ருமேனியா

30. இலங்கையில் திறந்த பொருளாதாரக் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு,
(1) 1948 (2) 1972 (3) 1977 (4) 1978

31. புத்தாயிரமாம் ஆண்டு அபிவிருத்தி இலக்குகள் என்பதை உருவாக்கிய சர்வதேச அமைப்பு,
(1) ஐக்கிய நாடுகள் சபை
(2) சர்வதேச சங்கம்
(3) உலக வங்கி
(4) சர்வதேச நாணய நிதியம்

32. சமீப காலத்தில் அதிகமாக கலந்துரையாடப்படுகின்ற அபிவிருத்தியாக அமையக் கூடியது,
(1) சமூக அபிவிருத்தி
(2) பண்பாட்டு அபிவிருத்தி
(3) பொருளாதார அபிவிருத்தி
(4) நிலையான அபிவிருத்தி

33. அரசியல் மற்றும் சமூக பொருளாதார ரீதியில் நிலவும் கருத்து வேற்றுமையை அடிப்படையாகக் கொண்டு எழும் மோதல்,
(1) சமூக மோதல்
(2) பொருளாதார மோதல்
(3) கொள்கைரீதியான மோதல்
(4) இன ரீதியான மோதல்

34. மோதல் தீர்வின்போது கலந்துரையாடல் முறையைப் பயன்படுத்துவதால் இரு தரப்பினருக்கும் ஏற்படும் நன்மை,
(1) முறைப்பாட்டாளருக்கு வெற்றி கிடைத்தல்.
(2) பாதிக்கப்பட்டவருக்கு வெற்றி கிடைத்தல்.
(3) வெற்றி - வெற்றி தீர்வு கிடைத்தல்.
(4) குறைந்த காலத்தில் தீர்வு கிடைத்தல்.

35. பின்வரும் பணிகளில் மாநகர சபையின் அதிகாரத்திற்கு **உட்படாதது** எது?
(1) வீதிகளுக்கு மின் விளக்கைப் பொருத்துதல்.
(2) நூலக வசதியை ஏற்படுத்தல்.
(3) அளவை, நிறுவை நடவடிக்கைகளை நிர்வகித்தல்.
(4) மாநகர சபையின் எல்லையை நிர்ணயித்தல்.

36. மோதல் தீர்வில் மத்தியஸ்தம் வகிக்கும் முறையைப் பின்வரும் எவ்வகை மோதலைத் தீர்ப்பதற்கு பயன்படுத்தலாம்,

(1) நபர்களுக்கிடையிலான மோதல்
(2) இனங்களுக்கிடையிலான மோதல்
(3) நாடுகளுக்கிடையிலான மோதல்
(4) சமயங்களுக்கிடையிலான மோதல்

37. பொருளாதாரமொன்றில் இடம்பெறும் செயன்முறைகளைச் சரியான ஒழுங்கில் குறிப்பிடும் விடை யாது,

(1) உற்பத்தி, விநியோகம், நுகர்வு.
(2) உற்பத்தி, நுகர்வு, விநியோகம்.
(3) விநியோகம், உற்பத்தி, நுகர்வு.
(4) நுகர்வு, விநியோகம், உற்பத்தி.

38. தொழில் வழங்குனர் - தொழில் புரிபவர் ஆகிய இரு தரப்பினரிடையே ஏற்படும் தொழில் பிணக்கு களைத் தீர்ப்பதற்குப் பயன்படுத்தக்கூடிய பொருத்தமான முறை,

(1) மத்தியஸ்தம் வகித்தல் (2) இணைக்கப்படுதல்
(3) தலையிடல் (4) ஆலோசனை வழங்குதல்

39. சமஷ்டி அரசொன்றின் முக்கிய பண்பாக அமைவது யாது?

(1) மத்திய அரசாங்கத்தால் ஆட்சி செய்யப்படுதல்.
(2) அதிகாரங்கள் பகிரப்பட்டிருத்தல்
(3) அதிகாரங்களை மீளப்பெற முடியுமாயிருத்தல்
(4) மேல்சபையொன்று காணப்படுதல்

40. அரசியல் விழிப்புணர்வுமிக்க மக்கள் ஒரு நாட்டில் வாழ்வதால்,

(1) தனியாள் ஆற்றல்களை மேம்படுத்தலாம்
(2) அரசாங்கத்தின் செயற்பாடுகளை விமர்சிக்கலாம்
(3) எதிர்க்கட்சியின் மக்கள் விருப்பை அதிகரிக்கலாம்
(4) மக்களுக்கு நேசமான அரசாங்கமொன்றை உருவாக்கலாம்

(40×2=40 புள்ளிகள்)

## பகுதி - II

1. (1) கிரேக்கத்தில் நிலவிய நேரடி ஜனநாயத்தின் கீழ் ஆட்சியில் பங்கு கொள்ளச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருக்காத இரு தரப்பினைத் தருக?
(2) சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தல் முறையின் இரண்டு பண்புகள் தருக.
(3) மத்திய அரசும், மாகாண சபைகளும் சமமாகக் கொண்டிருக்கும் இரு வகையான அதி காரங்களைத் தருக.
(4) பன்மைப் பண்பாட்டுச் சமூகத்தில் அவதானிக்கக்கூடிய அடிப்படைப் பண்புகள் இரண்டு தருக.
(5) மனித தேவைகளையும் எதிர்பார்ப்புக்களையும் நிறைவேற்ற முயலுகையில் எதிர் நோக்கும் அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகள் இரண்டு தருக.
(6) மோதல் ஏற்படுவதற்குக் காரணமான முக்கிய அடிப்படைகள் இரண்டினைக் குறிப்பிடுக?
(7) வர்த்தகத்தில் காணக்கூடிய இரண்டு முக்கிய பகுதிகள் எவை?
(8) இலங்கையின் வாக்காளர்கள் வாக்குரிமையைப் பயன்படுத்துவதற்குச் சந்தர்ப்பங்களை உருவாக்கும் தேர்தல்கள் இரண்டின் பெயர்களைத் தருக.
(9) உற்பத்திக் காரணிகள் இரண்டையும் அவற்றுக்குச் செய்யும் கொடுப்பனவின் பெயரையும் குறிப்பிடுக.

(10) இலங்கைக்குப் புராதன காலத்தில் வியாபாரத்துக்காக வருகை தந்த இரண்டு வெளி நாட்டு இனத்தவர்களின் பெயர்களைத் தருக.

(10 ×2 = 20 புள்ளிகள் )

2) (1) ஜனநாயகத்துக்கு வரைவிலக்கணம் கூறிய இரு அறிஞர்களைத் தருக.

(2) நேரடி ஜனநாயக ஆட்சி முறையினைத் தற்காலத்தில் நடைமுறைப்படுத்துவதிலுள்ள சவால்கள் / பிரச்சினைகள் மூன்று தருக.

(3) a) சனநாயக சமூகத்தின் நடைமுறைக்காக சுதந்திர ஊடகங்களால் நிறைவேற்றப்பட வேண்டிய பொறுப்புக்கள் மூன்று தருக.

b) அவற்றுள் ஒன்றை விளக்குக.

(2+3+3+2 = 10 புள்ளிகள் )

03) (1) அரசின் பிரதான வகைகள் இரண்டும் எவை?

(2) அரசாங்கத்தின் மூன்று பிரதான துறைகளும் எவை?

(3) (a) சனநாயகப் பிரசைகளிடம் காணப்படும் பண்புகள் மூன்று தருக.

(b) அதில் ஒரு பண்பினைச் சுருக்கமாக விளக்குக.

(2+3+3+2 = 10 புள்ளிகள் )

04) (1) இலங்கையில் நடைமுறையிலுள்ள உள்ளூராட்சி நிறுவனங்கள் இரண்டு தருக.

(2) உள்ளூராட்சி நிறுவனங்களின் பயன்கள் மூன்று தருக.

(3) (a) இலங்கையில் மத்திய அரசாங்கம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்கள் ஆகியனவற்றுக்குப் பிரஜையொருவர் ஆற்ற வேண்டிய கடமைகள் மூன்றினைக் குறிப்பிடுக.

(b) அவற்றுள் ஒன்றினை விளக்குக.

(2+3+3+2 = 10 புள்ளிகள் )

05) (1) இலங்கை பன்மைப் பண்பாட்டுச் சமூகம் உருவாவதில் செல்வாக்கு செலுத்திய காரணிகள் இரண்டு தருக.

(2) நல்லாட்சியில் காணக்கூடிய அடிப்படைப் பண்புகள் மூன்று தருக.

(3) (a) பன்மைப் பண்பாட்டுச் சமூகத்தில் மக்கள் அனைவரும் ஒற்றுமையுடன் செயல்படுவதன் மூலம் கிடைக்கும் நன்மைகள் மூன்று தருக.

(b) அவற்றுள் ஒன்றை விளக்குக.

(2+3+3+2 = 10 புள்ளிகள்)

06) (1) தற்கால உலகில் உற்பத்திகளுடன் தொடர்புபடுகின்ற துறைகளுள் இரண்டினைத் தருக.

(2) உலக நாடுகளில் நிலவும் பிரதான பொருளாதார முறைகள் மூன்றினைத் தருக.

(3) (a) உலகமயமாக்கல் காரணமாக இலங்கைக்கு ஏற்பட்டுள்ள சாதகமான நிலைமைகள் மூன்றினைக் குறிப்பிடுக.

(b) அவற்றுள் ஒன்றை விளக்குக.

(2+3+3+2 = 10 புள்ளிகள்)

07) (1) மோதலுக்கு உட்படக்கூடிய இரண்டு தரப்புக்களைக் குறிப்பிடுக.

(2) மனதில் அமைதியை ஏற்படுத்திக் கொள்வதற்கான வழிகள் மூன்று தருக.

(3) a) மோதலை சமாதானமாக வளர்த்துக் கொள்வதால் ஏற்படும் மூன்று நன்மைகளைக் குறிப்பிடுக.

b) அவற்றினுள் ஏதேனும் ஒன்றினால் சமூகத்தில் ஏற்படும் பயன்களை விபரிக்குக.

(2+3+3+2 = 10 புள்ளிகள்)

# முதலாம் தவணைப் பரீட்சை

**தரம் - 11** **குடியியற் கல்வி** **பகுதி - I**

- 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3),(4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

1. கிரேக்க நாட்டின் எதென்ஸ் நகராட்சியில் இடம்பெற்ற ஆட்சிமுறையாக அமைவது,
(1) நேரடி சனநாயக ஆட்சிமுறை (2) குழுவாட்சி முறை
(4) சர்வாதிகார ஆட்சிமுறை (4) பிரபுத்துவ ஆட்சிமுறை

2. மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட பாராளுமன்ற ஆட்சிமுறையை உலகிற்கு அறிமுகப்படுத்திய நாடு,
(1) ஐக்கிய அமெரிக்கா (2) இந்தியா
(3) இங்கிலாந்து (4) சுவிட்சர்லாந்து

3. பின்வருவனவற்றுள் சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தலின் பண்பு **அல்லாதது,**
(1) குறித்த காலத்தில் தேர்தல் நடாத்தப்படல்
(2) தேர்தல் சட்டதிட்டங்களுக்கமைய தேர்தல் நடாத்தப்படல்
(3) சுதந்திரமாகத் தேர்தல் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கான உரிமை காணப்படுதல்
(4) சுமுகமான சூழலில் தேர்தல் நடாத்தப்படாமை.

4. உள்நாட்டுச் சட்டத் தொகுதிக்குள் **உள்ளடங்காதது,**
(1) சர்வதேச சட்டம் (2) அரசியலமைப்பச் சட்டம்
(3) குற்றவியல் சட்டம் (4) குடியியல் சட்டம்

5. சர்வதேச சட்டங்களை மீறும் போது அது தொடர்பில் செயற்படக் கூடிய நிறுவனமாக அமைவது,
(1) உயர்நீதிமன்றம் (2) மேன்முறையீட்டு நீதிமன்றம்
(3) சர்வதேச நீதிமன்றம் (4) மேல் நீதிமன்றம்

6. உள்ளூராட்சி மன்றம் ஒன்றில் கொள்கை உருவாக்கம் செய்யும் அலகு,
(1) பிரதேச சபை (2) நகரசபை
(3) மாநகரசபை (4) பொதுச்சபை

7. பின்வருவனவற்றுள் சமஷ்டி அரசொன்றின் பண்புகளுள் **உள்ளடங்காதது,**
(1) அசரின் சட்டத்துறை, நீதி, நிறைவேற்றுத்துறையின் அதிகாரங்கள் ஒரு மத்திய அரசினால் மாத்திரம் நடைமுறைப்படுத்தப்படுல்.
(2) எழுதப்பட்ட அரசியலமைப்புக் காணப்படுதல்
(3) சட்டவாக்கத்துறையில் மேற்சபையொன்று காணப்படுதல்
(4) அரசியலமைப்புக்கு விளக்கமளிக்கும் அதிகாரம் உயர்நீதிமன்றம் ஒன்றிடம் ஒப்படைக்கப்பட்டிருத்தல்.

8. முதலாம் குடியரசு யாப்பில் சட்டத்துறைக்கு வழங்கப்பட்ட பெயர்,
(1) அரசுக்கழகம் (2) தேசிய அரசுப் பேரவை
(3) பாராளுமன்றம் (4) காங்கிரஸ்

9. பின்வருவனவற்றுள் சுவிட்சர்லாந்தின் மத்திய அரசின் அதிகாரமாக அமைவது?
(1) கல்வியும் உயர்கல்வியும் (2) வங்கி நடவடிக்கை
(3) தகவல் பரிமாற்றம், தபால் தந்திச் சேவை (4) கைத்தொழில்

10. மாகாணசபையொன்றின் ஆளுநரை நியமிக்கும் அதிகாரம் கொண்டவர்,
(1) பிரதமர்	2) முதலமைச்சர்
(3) சட்டமா அதிபர்	4) ஜனாதிபதி

11. பின்வருவனவற்றுள் ஒரு கட்சி முறையைக் கொண்ட நாடு,
(1) கியூபா	(2) பிரான்ஸ்
(3) அமெரிக்கா	(4) இலங்கை

12. பின்வருவனவற்றுள் "வேற்றுமையில் ஒற்றுமை" என்பதைத் தொனிப்பொருளாகக் கொண்டு அபிவிருத்தியடைந்த ஆசிய நாடாக அமைவது,
(1) சுவிட்சர்லாந்து	(2) நோர்வே
(3) சிங்கப்பூர்	(4) ரஷ்யா

13. நல்லாட்சியின் அடிப்படைப் பண்புகளில் **உள்ளடங்காதது,**
(1) இலஞ்ச ஊழலற்ற ஆட்சிமுறை	(2) சட்டங்களை முறையாகப் பின்பற்றுதல்
(3) சுதந்திரமான நீதித்துறை	(4) வெளிப்படை அற்ற தன்மை

14. பின்வருவனவற்றுள் பண்மைப் பண்பாட்டுச் சமூகத்தை உருவாக்குவதில் செல்வாக்குச் செலுத்திய ஆக்கிரமிப்புத் தொடர்பான காரணியாக அமைவது,
(1) மேலைத்தேய ஐரோப்பிய நாட்டவரின் வருகை
(2) பக்தசச்சானாவும் சகோதரக் குழுவினரும் வருகை தந்தமை
(3) சங்கமித்தை பிக்குணியும் குழுவினரும் வருகை தந்தமை
(4) பண்டுவாசுதேவனும் குழுவினரும் வருகை தந்தமை.

15. பின்வருவனவற்றுள் சமூகமொன்றின் "பண்பாடு" என்பதைத் தெளிவுபடுத்தும் கூற்று எது?
(1) சமூகத்தில் வழக்காறுகளுக்கிணங்க செயற்படல்
(2) சமய நம்பிக்கைகளுக்கமைய பல்வேறுபட்ட வழிபாடுகளை பின்பற்றல்.
(3) சமூகத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட வாழ்க்கை முறைகளுக்கேற்ப செயற்படுதல்.
(4) பல்லின மக்கள் ஒன்றாக வாழ்தல்.

16. பின்வருவனவற்றுள் முதலாளித்துவப் பொருளாதார முறை நிலவும் நாடாக விளங்குவது,
(1) வடகொரியா	(2) கியூபா
(3) யப்பான்	(4) சீனா

17. பன்மைப் பண்பாட்டுச் சமூகமாகிய இலங்கையில் மக்கள் ஒற்றுமையுடன் செயற்படுவதால் ஏற்படும் அனுகூலம்,
(1) ஏனைய நாடுகளின் அச்சுறுத்தலுக்கு ஆளாகும் நிலை கிட்டும்.
(2) ஒரே தேசம் ஒரே நாடு எனும் உணர்வு ஏற்படும்
(3) நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்குத் தடைப்படும்.
(4) முரண்பாடுகள் ஏற்படும் வாய்ப்புண்டு.

18. இடைநிலைப் பொருளாகக் கொள்ள **முடியாதது** பின்வருவனவற்றள் எது?
(1) உரம்	(2) பலகை
(3) நூல்	(4) ஆடையணிகள்

19. தனிப்பட்ட நபர் ஒருவரின் சமூக, பொருளாதார நிலைமைகளைப் பொறுத்து, வேறுபடும் விடயம்,
(1) விருப்பங்கள்	(2) முதலீடுகள்
(3) வளங்கள்	(4) பிரச்சினைகள்

20. இலங்கையில் இணக்கப்பாடு செய்வதற்கான சட்டரீதியான நிறுவனம்,
(1) மேல்நீதிமன்றம்	(2) உயர்நீதிமன்றம்
(3) இணக்கசபைகள்	(4) ஒம்பூட்ஸ்மன்

21. மோதல்தீர்வு தொடர்பாகப் பிரசையொருவரிடம் காணப்பட வேண்டிய சமூகப் பண்புகளில் **உள்ளடங்காதது,**
(1) ஏனையோரின் கருத்துக்களை மதித்தல் (2) கடமையைச் செய்தல்
(3) நபர்களுக்கிடையிலான தொடர்பு (4) பயனுள்ள தொடர்பாடல்

22. மோதல் தீர்வு தொடர்பான மரபுவழிச் செயற்பாடாக அமைவது,
(1) உடன்படுதல் (2) இணக்கப்பாடு
(3) தீர்ப்புக் கூறல் (4) கலந்துரையாடுதல்

23. டொனமூர் யாப்பின் கீழ் தாபிக்கப்பட்ட அரசுக்கழக உறுப்பினர்களின் எண்ணிக்கை,
(1) 225 (2) 15 (3) 168 (4) 61

24. ஊவா மாகாணத்திலுள்ள மாவட்டங்களை மட்டும் கொண்ட விடையைத் தெரிவு செய்க.
(1) பதுளை, மொனராகலை (2) இரத்தினபுரி, கேகாலை
(3) குருநாகல், புத்தளம் (4) பொலனறுவை, அநுராதபுரம்

25. வடமாகாணத்திலுள்ள மாநகரசபை எண்ணிக்கை,
(1) ஒன்றாகும் (2) இரண்டாகும்
(3) மூன்றாகும் (4) நான்காகும்

26. நீதிச்சேவைகள் ஆணைக்குழுவின் தலைவராகச் செயற்படுபவர்,
(1) சனாதிபதி (2) பிரதமர்
(3) சட்டமா அதிபர் (4) பிரதம நீதியரசர்

27. பிறப்புச் சான்றிதழில் பெயர் மாற்றங்களுக்கான விண்ணப்பம் சமர்ப்பிக்க வேண்டியது,
(1) நீதிவான் நீதிமன்றம் (2) மாவட்ட நீதிமன்றத்தில்
(3) மேல் நீதிமன்றத்தில் (4) மேன்முறையீட்டு நீதிமன்றத்தில்

28. பாராளுமன்றத் தேர்தல் தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்யும் நீதிமன்றம்
(1) உயர் நீதிமன்றம் (2) மேன்முறையீட்டு நீதிமன்றம்
(3) மேல் நீதிமன்றம் (4) மாவட்ட நீதிமன்றம்

29. குற்றவியல் சட்டத்திற்கு ஏற்ப விசாரணை செய்யப்படக்கூடிய குற்றங்களை மட்டும் கொண்டுள்ள விடையைத் தெரிவு செய்க.
(1) கொலை, கொள்ளை, காணிப்பிரச்சினை
(2) பாலியல் வன்முறை, போதைப்பொருள் விற்பனை
(3) காயம் ஏற்படுத்தல், வர்த்தகப் பிரச்சினை, காணிப் பிரச்சினை
(4) அரசுக்கு எதிரான செயல், சொத்துக்களைத் திருடுதல், கொலை

30. நிறைவேற்று மற்றும் நிருவாக நடவடிக்கைகளின் போது பிரசைகளின் அடிப்படை மனித உரிமைகள் மீறப்படுகையில் அவற்றைப் பாதுகாப்பதற்காக உருவாக்கப்பட்ட பதவி நிலை எது?
(1) குறைகேள் அதிகாரி (2) சட்டமா அதிபர்
(3) பிரதம நீதியரசர் (4) பிரதம மந்திரி

31. வடக்கு மாகாணத்தில் தமிழர்களின் மரபுகள், சம்பிரதாயங்களின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட சட்டம்,
1) கண்டியச் சட்டம் 2) முஸ்லிம் தனியார் சட்டம்
3) பொதுச் சட்டம் 4) தேசவழமைச் சட்டம்

32. பாராளுமன்றக் கட்டளைச் சட்டங்கள் மூலம் இனங்காணப்பட்டுள்ள குற்றச் செயல்கள் தொடர்பாகச் செயற்படுவதற்கு அதிகாரம் உடைய நீதிமன்றம்,
(1) மேன்முறையீட்டு நீதிமன்றம் (2) மேல் நீதிமன்றம்
(3) நீதிதவான் நீதிமன்றம் (4) மாவட்ட நீதிமன்றம்

33. ஒற்றையாட்சி நிலவும் அபிவிருத்தியடைந்த நாடு,
(1) பாகிஸ்தான் (2) பங்காளதேஷ்
(3) ஐக்கிய இராச்சியம் (4) நேபாளம்

34. பிரித்தானியரால் அறிமுகப்படுத்தப்பட்ட அரசியல் யாப்புக்களில் இலங்கையர்கள் அரசியல் நிர்வாகத்தில் அதிகளவில் பங்குபற்றும் சந்தர்ப்பத்தை முதன் முதலில் வழங்கிய யாப்பு,
(1) டொனமூர் (2) குறூ - மக்கலம்
(3) கோல்புறூக் (4) மனிங்

35. இலங்கை சுதந்திரமடையும் போது நடைமுறையிலிருந்த அரசியல் யாப்பு,
(1) டொனமூர் (2) சோல்பரி
(3) 1972 ஆம் ஆண்டு (4) 1978 ஆம் ஆண்டு யாப்பு

36. அடிப்படை உரிமைகள் தொடர்பான அத்தியாயத்தை முதன் முதலில் உள்ளடக்கிய அரசியல் யாப்பு,
(1)1972 ஆம் ஆண்டு அரசியல் யாப்பு (2) 1978 ஆம் ஆண்டு அரசியல்
(3) டொனமூர் யாப்பு (4) சோல்பரி யாப்பு

➢ **அரசாங்கமொன்றின் முத்துறைகளின் அதிகாரங்கள் சில கீழே தரப்பட்டுள்ளன. அதனை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

A - குடியுரிமையைப் பாதுகாத்தல்
B - தேசிய பாதுகாப்பை நிறைநிறுத்தல்
C - வெளிநாட்டு விவகாரம் தொடர்பான பணிகள்.
D - வரவு செலவுத்திட்ட நிர்வாகம்
E - ஆலோசனைப் பணிகள்
F - குறைகளை முன்வைத்தல்
G - அரசியல் யாப்பைப் பாதுகாத்தல்
H - அரசாங்க சேவை நிர்வாகம்
I - நிறைவேற்றுத்துறையைக் கட்டுப்படுத்தல்

37. சட்டத்துறையின் பணிகளை மட்டும் உள்ளடக்கிய விடைத் தொகுதி,
1) ACD 2) BGH 3) DEF 4) DFI

38. நிறைவேற்றுத்துறையின் பணிகளை மட்டும் உள்ளடக்கிய விடைத் தொகுதி
1) BCH 2) BDG 3) BHI 4) BGI

39 சட்ட, நிறைவேற்று, நீதித்துறைகளின் பணிகளை வரிசையொழுங்கில் காட்டும் விடைத் தொகுதி யாக அமைவது,
1) DGI 2) DHE 3) DEF 4) DGH

40. இலங்கையில் தற்போது நடைமுறையிலுள்ள யாப்பு எது?
1) முதலாம் குடியரசு யாப்பு 2) இரண்டாம் குடியரசு யாப்பு
3) சோல்பரி யாப்பு 3) டொனமூர் யாப்பு

## பகுதி - II

01. (1) கிரேக்க நகர ஆட்சியில் பங்குபெற்ற உரிமை மறுக்கப்பட்ட தரப்புக்கள் இருவரைத் தருக.
(2) ஜனநாயக ஆட்சியின் இரு பிரதான வகைகளையும் தருக.
(3) அதிகாரத்தில் பொதுவான வகைகள் இரண்டு தருக.
(4) கூட்டாட்சியில் அதிகாரங்கள் பகிரப்பட்ட இரு நிறுவனங்கள் தருக.
(5) அதிகாரத்தை பன்முகப்படுத்துகையில் அவதானிக்கக் கூடிய இரு இயல்புகள் தருக.
(6) பன்மை பண்பாட்டு சமூகம் உருவாகுவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் இரண்டு தருக.
(7) உற்பத்தித் தொடர்பாகப் பயன்படுத்தும் நுட்பங்கள் இரண்டு தருக.
(8) இலங்கையில்தேர்தல் ஒன்றின்போது வாக்காளராவதற்கு நபரொருவர் கொண்டிருக்க வேண்டிய தகுதிகள் இரண்டு தருக.
(9) மனதில் அமைதியை ஏற்படுத்துவதற்கான வழிகள் இரண்டு தருக.
(10) நீதியை நிலைநாட்டுவதில் செல்வாக்குச் செலுத்தும் முக்கிய விடயங்கள் இரண்டு தருக.

(2x10= 20 புள்ளிகள்)

2. (i) புராதன கிரேக்கத்தில் நேரடி ஜனநாயகம் வெற்றி பெற்றமைக்கான காரணிகள் இரண்டு தருக.
(ii) சனநாயக ஆட்சியின் பண்புகள் மூன்று தருக.
(iii) (a) சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தல் ஒன்றின் பண்புகள் இரண்டு தருக.
(b) அதில் ஒரு பன்மை விளக்குக.

3. (i) இறைமை என்பதனுள் உள்ளடங்கும் அடிப்படை மூலக்கூறுகள் இரண்டு தருக.
(ii) அதிகாரபன்முகப்படுத்தல் செயல்முறையில் பிரதேசமட்ட நிர்வாக நிறுவனங்களுக்கு ஒப்படைக்கும் பொறுப்புக்கள் மூன்று தருக.
(iii) (a) மாகாண ஆளுநரின் அதிகாரங்கள் மற்றும் பணிகள் இரண்டைத் தருக.
(b) அவற்றுள் ஒன்றை விளக்குக.

4. (i) பண்பாடு தொடர்பில் வரைவிலக்கணம் முன்வைத்த அறிஞர்கள் இருவரின் பெயரைத் தருக.
(ii) பன்மைப் பண்பாட்டு சமூகத்தில் மக்கள் ஒற்றுமையுடன் செயற்படுவதால் கிடைக்கும் நன்மைகள் மூன்று தருக.
(iii) (a) பன்மைப் பண்பாட்டு சமூகத்தின் அடிப்படைகள் மூன்று தருக.
(b) இவற்றுள் ஒரு இயல்பை விளக்குக.

5. (i) உலகிலுள்ள பொருளாதார முறைகள் இரண்டு தருக.
(ii) நிலையான அபிவிருத்தியின்போது கவனத்தில் கொள்ள வேண்டிய காரணிகள் மூன்று தருக.
(iii) (a) உலகமயமாக்கல் காரணமாக இலங்கைக்கு ஏற்பட்ட சாதகமான தாக்கங்கள் மூன்று தருக.
(b) அவற்றுள் ஒன்றினை விளக்குக.

6. (i) "கல்டூனின்" மோதல் முக்கோணத்தில் உள்ளடங்கும் விடயங்கள் இரண்டு தருக.
(ii) மோதல் ஒன்றினைத் தீர்க்கும் நடுநிலையாளரின் பண்பகள் மூன்று தருக.
(iii) (a) மோதலைச் சமாதானமாகத் தீர்ப்பதனால் கிடைக்கும் நன்மைகள் இரண்டு தருக.
(b) அவற்றுள் ஒன்றினைச் சுருக்கமாக விளக்குக.

7. (i) சட்டத்தைச் செயற்படுத்தும் பிரதானிகள் இருவரைத் தருக.
(ii) உயர் நீதிமன்றத்தின் பிரதான அதிகாரங்கள் மூன்றினைத் தருக.
(iii) a) இலங்கையின் தற்போதைய அரசியல் யாப்பில் நீதித்துறைச் சுதந்திரத்தைப் பேணும் வகையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகள், கொள்கைகள் இரண்டினைத் தருக.
b) அவற்றுள் ஒன்றினை விளக்குக.

# இரண்டாம் தவணைப் பரீட்சை

**தரம் - 11** **குடியியற் கல்வி** **பகுதி - I**

- எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
- ஒன்று தொடக்கம் 40 வரையான வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4) என இலக்கம் இடப்பட்ட விடைகளில் சரியாக அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

---

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

1. மனிதன் தனது சமூக வாழ்க்கையை செவ்வனே கொண்டு செல்லத் தேவையான நிபந்தனைகள் எவ்வாறு அழைக்கப்படும்?

(1) சுதந்திரம் (2) உரிமைகள்
(3) சமத்துவம் (4) கடமை

2. மத்திய அரசிடம் உள்ள நிர்வாக அதிகாரங்களுள் சிலவற்றைப் பிராந்திய நிர்வாக அலகுகளிடம் கையளிப்பது,

(1) அதிகார பன்முகப்படுத்தல் (2) அதிகாரப் பகிர்வு
(3) அதிகாரப் பிரயோகம் (4) அதிகார வேறாக்கம்

3. தேர்தல் தொகுதிகளைப் பிரித்து வேறாக்குவதற்குப் பயன்படுத்தப்படும் இரண்டு பிரதான அளவீட்டு நியதிகள் எவை?

(1) நிலப்பரப்பும் சனத்தொகையும் (2) சனத்தொகையும் இனவேறுபாடும்
(3) நிலப்பரப்பும் சுகாதாரமும் (4) நிலப்பரப்பும் பொருளாதாரமும்

4. இலங்கையில் பன்மைப் பண்பாட்டு சமூகம் உருவாவதில் குடிப்பெயர்வு தொடர்பான காரணியாக அமைவது,

(1) அரேபியரின் வருகை
(2) சேனன் குத்திகன் படையெடுப்பு
(3) புத்தகச்சானாவும் சகோதரர் குழுவினரும் வருகை
(4) இந்து சமுத்திரத்தின் மத்தியில் அமைந்துள்ளமை

5. நேரடி ஜனநாயக ஆட்சிமுறையினைத் தற்காலத்தில் நடைமுறைப்படுத்துவதில் உள்ள பிரச்சினை **அல்லாதது,**

(1) அரசுகளின் நிலப்பரப்பு அதிகரித்தமை
(2) அரசுகளின் சனத்தொகை அதிகரித்தமை
(3) சமூகத்தின் தேவைகளின் சிக்கல் வாய்ந்த தன்மை
(4) மக்களிடையே வருமான வேறுபாடு காணப்பட்டமை

6. மாகாண சபை ஒன்றின் முதலமைச்சரை நியமிக்கும் அதிகாரத்தைக் கொண்டவர்,

(1) ஜனாதிபதி (2) ஆளுநர்
(3) பிரதம நீதியரசர் (4) தேர்தல் ஆணைக்குழு

7. வேற்றுமைக்கு மத்தியில் ஒற்றுமையை ஏற்படுத்துவதை இலக்காகக் கொண்ட நாடு பின்வருவனவற்றுள் எது?

(1) இந்தியா (2) தென் ஆபிரிக்கா
(3) சிங்கப்பூர் (4) வடகொரியா

8. இங்கிலாந்தில் மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட பாராளுமன்ற ஆட்சிமுறை வளர்ச்சியடைவதில் பங்களிப்புச் செய்த புரட்சி
(1) அமைதிப் புரட்சி (2) கைத்தொழில் புரட்சி
(3) சோசலிசப் புரட்சி (4) பிரான்சியப் புரட்சி

9. இலங்கையில் சுதந்திரத்தின் பின்னர் அதிகாரப் பரவலாக்கம் தொடர்பாக 1980 இல் உருவாக்கப் பட்ட சபை,
(1) பிரதேச சபை (2) கிராமசபை
(3) மாகாண சபை (4) மாவட்ட சபை

10. இங்கிலாந்து, பிரான்ஸ், ஒல்லாந்து, போர்த்துக்கல் ஆகிய நாடுகள் பலம்மிக்க தேசிய அரசுகளாக எழுச்சி பெறுவதற்கு பங்களித்த காரணியாக அமைவது,
(1) விஞ்ஞான மறுமலர்ச்சி (2) மக்களின் அறிவு மற்றும் ஆக்கபூர்வத் திறமைகள்
(3) உள்வெளி இறைமையைக் கொண்டிருத்தல் (4) புரட்டஸ்தாந்து மத சீர்திருத்த இயக்கம்

11. இலங்கையில் மாகாணசபை முறைமையொன்றில் மத்திய அரசுக்குரிய அதிகாரங்களில் ஒன்றாகக் கருதப்படுவது,
(1) உள்ளூராட்சி மன்ற நடவடிக்கை (2) சனத்தொகை மற்றும் புள்ளிவிபரவியல்
(3) சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் (4) சமூக சேவைகளும் புனர்வாழ்வும்

12. பின்வருவனவற்றுள் நல்லாட்சி நிலவும் நாடொன்றின் அடிப்படை இயல்புகளில் ஒன்று அல்லாதது எது?
(1) சுதந்திரமும் நீதியும் உறுதிப்படுத்தப்படல்
(2) உரிமைகளைப் பாதுகாத்தலும்
(3) ஊடக சுதந்திரத்தைப் பாதுகாத்தல்
(5) நட்டத்தில் இயங்கிவரும் நிறுவனங்களைத் தனியார்மயப்படுத்தல்.

13. “ஒரு மத்திய அதிகார பீடம் மாத்திரம் சட்டமியற்றும் உயர் அதிகாரத்தைக் கொண்டிருப்பது ஒற்றை யாட்சியின் அடிப்படைப் பண்பாகும்.
(1) ஏ.வீ. டைசி (2) சீ. எப். ஸ்ட்ரோங்
(3) கே.வீ. வியர் (3) ஹ்மன் ஜே. பைனர்

14. எமது நாட்டின் தேசிய கீதத்தில் பன்மைப் பண்பாட்டுச் சமூகத்தைக் குறிக்கும் வாசகம் எது?
(1) நல்லொழில் பொழில் (2) ஞானம் புகழ்
(3) ஒரு தாய் பிள்ளைகள் போல (4) எழில் கொள் சேய்கள்

15. இரு கட்சிமுறை நிலவும் சமஷ்டி ஆட்சி முறையுள்ள நாடு,
(1) பிரித்தானியா (2) ஐக்கிய அமெரிக்கா
(3) இந்தியா (4) இலங்கை

16. வளங்கள் தேவையிலும் பார்க்கக் குறைவாகக் காணப்படும் தன்மை,
(1) அருமை (2) மிகை
(3) சேமிப்பு (4) உச்சப் பயன்பாடு

17. பொருளாதாரம் ஒன்றில் முயற்சியாண்மைக்காக வழங்கப்படும் கொடுப்பனவு,
(1) வாடகை (2) ஊதியம்
(3) வட்டி (4) இலாபம்

18. வெற்றி - வெற்றி (Win - Win Strategy) எனும் தீர்வைப் பெற்றுக்கொள்ளக்கூடிய மோதல் தீர்வு முறை பின்வருவனவற்றுள் எது?
(1) பேரம் பேசுதல் (2) தீர்ப்புக் கூறுதல்
(3) கலந்துரையாடல் (3) இணக்கப்பாடு

19. பின்வருவனவற்றுள் கைத்தொழில் உற்பத்திக்குள் உள்ளடங்குவது,
1) தேயிலை 2) ஆடைகள் 3) மின்சாரம் 4) தொலைத்தொடர்பு

20. கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட வேண்டிய சந்தர்ப்பம் **அல்லாதது,**
(1) அகமோதல் (2) குடும்ப மோதல்
(3) உள்நாட்டு மோதல் (4) சொத்துத் தகராறு

21. இந்திய - பாகிஸ்தான் எல்லைப் பிரச்சினை எந்த மோதல் வகைக்குள் உள்ளடங்கும்?
(1) உள்நாட்டு மோதல் (2) சமய மோதல்
(3) இன மோதல் (4) நாடுகளுக்கிடையிலான மோதல்

22. சந்தைப்பொருளாதாரம் தொடர்பில் முதலாளித்துவப் பொருளாதாரத்தின் சந்தை இயல்பான அதிகமாகக் கொண்டுள்ள நாடுகள் முறையே,
(1) சீனா, கொங்கொங் (2) சிங்கப்பூர், தாய்வான்
(3) ரஷ்யா, போலந்து (4) பல்கேரியா, தென்கொரியா

23. மோதல் தீர்வு தொடர்பாக பிரஜை ஒருவரிடம் காணப்பட வேண்டிய சமூகப் பண்பு.
(1) புரிந்துணர்வு (2) கருணை
(3) பிறரை மதித்தல் (4) அனுபவமுதிர்ச்சி

24. உற்பத்தி செய்யப்படும் பொருட்களை நுகர்வோரிடம் கொண்டு செல்லும் செயற்பாடு,
(1) விநியோகம் (2) நுகர்வு
(3) உற்பத்தி (4) மொத்த விற்பனை

25. மோதல் தீர்வு தொடர்பான மரபுவழிச் செயற்பாடு எது?
(1) கலந்துரையாடல் (2) இணக்கப்படுத்துதல்
(3) பேச்சுவார்த்தை (4) தீர்ப்புக் கூறல்

26. பின்வருவோரில் சட்டமா அதிபரின் பணிகளுக்கு உதவும் அதிகாரி யார்?
(1) நீதி அமைச்சர் (2) அரச சட்டத்தரணிகள்
(3) பிரதம நீதியரசர் (4) பொலிஸ்மா அதிபர்

27. ஆரம்ப நீதிவான் நீதிமன்றத்தினால் வழங்கப்படும் தரப்புக்களுக்கு எதிராக மேன்முறையீடு செய்யத்தக்க உயர்ந்த நீதிமன்றம்
(1) மாகாண மேல் நீதிமன்றம் (2) மேன்முறையீட்டு நீதிமன்றம்
(3) உயர் நீதிமன்றம் (3) மேல் நீதிமன்றம்

28. ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைப்பிரகடனம் வெளியிடப்பட்ட ஆண்டு
(1) 1938 (2) 1945 (3) 1948 (4) 1950

29. மனித உரிமைகளைப் பெற்றுக் கொண்ட வரலாற்றுச் சந்தர்ப்பம் **அல்லாதது,**
(1) அமெரிக்க சுதந்திரப் பிரகடனம் (2) கைத்தொழிற் புரட்சி
(3) ரஷ்யப் புரட்சி (4) அமெரிக்க சுதந்திரப் பிரகடனம்

30. புராதன காலத்தில் கிராம சபைகள் மூலம் கிராம நிர்வாகம் மேற்கொள்ளப்பட்டமையை உறுதிப்படுத்தும் வெளிநாட்டவரின் குறிப்பு,
(1) பாகியன் தேரர் (2) கியூங்சா
(3) டைசி (4) றொபேட் நொக்ஸ்

31. இலங்கையின் சுற்றாடல் தொடர்பாக செயற்படும் நிறுவனம்,
(1) தொழில் திணைக்களம் (2) சுகாதாரத் திணைக்களம்
(3) வனப்பாதுகாப்புத் திணைக்களம் (4) பொலிஸ் திணைக்களம்

32. 2015 ஆம் ஆண்டு புள்ளிவிபரத்தின்படி இலங்கையில் செயற்படும் நகரசபைகளின் எண்ணிக்கை,
(1) 41 (2) 23 (3) 271 (4) 51

33. 1978 ஆம் ஆண்டின் அரசியல் யாப்பின் பிரகாரம் நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளரின் பணிகளில் ஒன்று,
(1) அரசாங்க வழக்குகளின்போது தேவையான சட்ட ஆலோசனை வழங்கல்.
(2) பிரஜைகளின் அடிப்படை உரிமை மீறப்படுவதைத் தடுத்தல்.
(3) சமாதான நீதவான்களை நியமனம் செய்தல்.
(4) மாகாணசபைக்குரிய கட்டளைகளை விதித்தல்.

34. இலங்கையில் கொலை, கொலை முயற்சி மற்றும் கற்பழிப்புத் தொடர்பான வழக்குகளை விசாரிக்கும் அதிகாரம் கொண்ட நீதிமன்றம்,
(1) உயர் நீதிமன்றம் (2) மாகாண மேல் நீதி மன்றம்
(3) மாவட்ட நீதிமன்றம் (4) மேல் நீதிமன்றம்

35. சிறுவர் உரிமை பற்றிய சமவாயத்தின் முதலாவது உறுப்புரை எத்தனை வயதுக்குக் குறைந்த வர்களைச் சிறுவர் என அடையாளப்படுத்துகின்றது.
(1) 12 வயதுக்குக் குறைந்தோர் (2) 15 வயதுக்குக் குறைந்தோர்
(3) 17 வயதுக்குக் குறைந்தோர் (4) 18 வயதுக்குக் குறைந்தோர்

36. இலங்கையில் அடிப்படை உரிமைகள் தொடர்பான விடயங்கள் முதன் முதலில் எந்த அரசியல் யாப்பில் சேர்த்துக் கொள்ளப்பட்டது.
(1) சோல்பரி அரசியல் யாப்பு (2) இரண்டாம் குடியரசு யாப்பு
(3) முதலாம் குடியரசு யாப்ப (4) டொனமூர் அரசியல் யாப்பு

37. பின்வருவனவற்றுள் அரசியல் உரிமையாகக் காணப்படுவது,
(1) கல்வியைப் பெற்றுக் கொள்வதற்கான உரிமை.
(2) சட்டத்தின் முன் அனைவரும் சமமானவர்கள் எனும் உரிமை.
(3) வாக்களிக்கும் உரிமை.
(4) விடுமுறை மற்றும் ஓய்வு பெறும் உரிமை

38. இலங்கையின் தற்போதுள்ள தேர்தல் மாவட்டங்களின் எண்ணிக்கை,
(1) 22 (2) 23
(3) 24 (4) 25

39. தற்காலத்தில் நீதிமன்றங்களுக்குச் செல்லாமல் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில் உருவாக்கப்பட்ட அமைப்பு,
(1) ஒம்புட்ஸ்மன் (2) இணக்கசபை
(3) காதிநீதிமன்றம் (4) மஜிஸ்ரேட் நீதிமன்றம்

40. இலங்கையில் வரையறுக்கப்பட்ட வாக்குரிமையை வழங்கிய யாப்பு?
(1) கோல்புறூக் கமரன் சீர்திருத்தம் (2) குறூமக்கலம் யாப்பு
(3) டொனமூர் யாப்பு (4) சோல்பரி யாப்பு

## பகுதி - II

- முதலாம் வினா கட்டாயமானது.
- முதலாம் வினாவுக்கும் மேலும் நான்கு வினாக்களுக்குமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

1. (1) நேரடி சனநாயகக்தை நடைமுறைப்படுத்துவதில் உள்ள சவால்கள் இரண்டைக் குறிப்பிடுக.
   (2) அதிகாரங்களின் அடிப்படையில் அரசின் பிரதான வகைகள் இரண்டைக் குறிப்பிடுக.
   (3) அதிகாரப் பங்கீடு தொடர்பாக சுதந்திரத்தின் பின் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் இரண்டைக் குறிப்பிடுக.
   (4) உற்பத்தி தொடர்பாகப் பயன்படுத்தப்படும் நுட்பங்கள் இரண்டைக் குறிப்பிடுக.
   (5) இலங்கையில் செயற்படும் சட்டங்களில் பொதுச்சட்டம், உரோமன் டச்சுச் சட்டம் தவிர்ந்த வேறு சட்டங்கள் இரண்டைக் குறிப்பிடுக.
   (6) இலங்கையின் மாகாண சபையின் இரண்டு நிறைவேற்று நிர்வாகிகளையும் குறிப்பிடுக.
   (7) தற்காலத்தில் ஐக்கிய அமெரிக்க மாநில அரசுகளை விஞ்சி மத்திய அரசு பலம் பெற்றுத் திகழுவதற்கு ஏதுவாக இருந்த காரணிகள் இரண்டைக் குறிப்பிடுக.
   (8) உரிமைகளின் பிரதான இரண்டு வகைகளும் எவை?
   (9) இன்று இலங்கையில் செயற்படும் உள்ளூராட்சி மன்ற வகைகள் இரண்டைக் குறிப்பிடுக.
   (10) தற்போது உலகில் இடம்பெற்றுக்கொண்டிருக்கும் உலக நாடுகளைப் பாதிக்கும் இரண்டு மோதல்களை (யுத்தம்) குறிப்பிடுக.

2. (i) ஜனநாயகம் பற்றி வரைவிலக்கணம் கூறிய அறிஞர் பெயர்கள் இரண்டைக் குறிப்பிடுக.
   (ii) சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தலின் பண்புகள் மூன்று தருக.
   (iii) (a) அரசின் மூலக்கூறுகள் மூன்றைக் குறிப்பிடுக.
   (iv) (b) மேலே கூறப்பட்ட கூறுகளில் ஒன்றினை விளக்குக. (2+3+3+2=10 புள்ளிகள்)

3. (i) பன்மைப் பண்பாட்டு சமூகத்தில் நல்லாட்சி செயற்படுத்துவதன் மூலம் ஏற்படும் நன்மைகள் இரண்டு தருக.
   (ii) பன்மைப் பண்பாட்டு சமூகத்தின் சிறப்பான செயற்பாட்டிற்கு பிரசை ஒருவர் விருத்தி செய்ய வேண்டிய பண்புகள் மூன்றைக் குறிப்பிடுக.
   (iii) (a) மோதலைத் தீர்ப்பதற்கான பேரம்பேசும் முறையின் பண்புகள் மூன்று தருக.
   (b) மோதலைச் சமாதானமாக தீர்ப்பதால் ஏற்படும் பயன்கள் இரண்டு தருக.
   (2+3+3+2=10 புள்ளிகள்)

4. (i) சட்ட மூலாதாரங்கள் இரண்டைக் குறிப்பிடுக.
   (ii) உயர் நீதிமன்றத்தின் அதிகாரங்கள் மூன்று தருக.
   (iii) (a) நீதிமன்றங்கள் தவிர்ந்த வழக்கு விசாரணைக்கான மாற்றுவழிகள் மூன்றைக் குறிப்பிடுக.
   (b மேற்குறிப்பிட்ட வழிகளின் ஒன்றினை விளக்குக. (2+3+3+2=10 புள்ளிகள்)

5. (i) இறைமை என்பதனுள் உள்ளடங்கும் விடயங்கள் இரண்டைக் குறிப்பிடுக.
   (ii) ஒற்றையாட்சிக்கும் சமஷ்டிக்கும் இடையிலான வேறுபாடுகள் மூன்றைக் குறிப்பிடுக.
   (iii) (a) இலங்கையின் உள்ளூராட்சி மன்றங்கள் உருவாக்கப்பட்டமைக்கான காரணங்கள் இரண்டைக் குறிப்பிடுக.
   (b) அவற்றுள் ஒன்றை விளக்குக. (2+3+3+2=10 புள்ளிகள்)

6. (i) அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினையான எவ்வாறு உற்பத்தி செய்வது என்பதில் அடங்கும் இரு உப பிரச்சினைகளும் எவை?

(ii) உற்பத்தித் துறைகள் மூன்றும் எவை?

(iii) (a) இலங்கையில் காணப்படும் சந்தைப் பொருளாதார முறையின் பண்புகள் இரண் டைக் குறிப்பிடுக.

(b) அவற்றில் ஒன்றினை விபரிக்குக. (2+3+3+2=10 புள்ளிகள்)

7. (i) சீடோ உடன்படிக்கையிலுள்ள பெண்களின் குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் இரண்டு தருக.

(ii) ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் உரிமைபற்றிய சமவாயம் அவதானம் செலுத்திய பிரதானமான மூன்று விடயங்களைக் குறிப்பிடுக.

(iii) (a) இலங்கையின் உள்ளூராட்சி மன்றங்களுக்கு வழங்கப்பட்ட செயற்பாடுகளை மூன்று தலைப்புக்களில் உள்ளடக்கலாம். அவற்றைக் குறிப்பிடுக.

(b) மேலே குறிப்பிட்ட தலைப்புக்களில் ஏதாவது ஒன்றில் உள்ளடங்கும் விடயங்கள் இரண்டைக் குறிப்பிடுக. (2+3+3+2=10 புள்ளிகள்)

# மூன்றாம் தவணைப் பரீட்சை

**தரம் - 11** **குடியியற் கல்வி** **பகுதி - I**

- எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
- ஒன்று தொடக்கம் 40 வரையான வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4) என இலக்கம் இடப்பட்ட விடைகளில் சரியாக அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

---

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

1. சர்வசன வாக்குரிமை என்பது,
   (1) ஆண்களுக்கு மட்டும் கிடைக்கும் உரிமையாகும்.
   (2) பெண்களுக்கு மட்டும் கிடைக்கும் உரிமையாகும்
   (3) உயர்ந்த வருமானம் பெறுவோருக்கு மட்டும் கிடைக்கும் உரிமையாகும்.
   (4) குறித்த வயதெல்லையைக் கொண்ட சகலருக்கும் வேறுபாடின்றிக் கிடைக்கும் உரிமையாகும்.

2. இரு கட்சிமுறை நடைமுறையிலுள்ள நாடு
   (1) ஐக்கிய அமெரிக்கா (2) இந்தியா
   (3) சீனா (4) இலங்கை

3. 1948 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 10 ஆம திகதி உலகின் அனைத்து மக்களுக்கும் முக்கியத்துவம் மிக்கதாக அமைந்தமைக்கான காரணம்,
   (1) சிறுவர் உரிமைகள் சாசனம் பிரகடனப்படுத்தப்பட்டமை.
   (2) சர்வதேச மனித உரிமைகள் பிரகடனம் வெளியிடப்பட்டமை.
   (3) பெண்களுக்கு எதிரான பாரபட்சங்களை ஒழிப்பதற்கான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டமை.
   (4) சர்வதேச தொழிலாளர் அமைப்பு தோற்றுவிக்கப்பட்டமை.

4. சனநாயகப் பிரசையொருவரினால் நிறைவேற்றப்பட வேண்டிய பண்பாட்டு ரீதியான கடமையாக அமைவது,
   (1) அரசியல் யாப்பினைப் பாதுகாத்தல்
   (2) அரசுக்குரிய வரியைச் செலுத்துதல்
   (3) சமூகப் பழக்க வழக்கங்களைக் கடைப்பிடித்தல்
   (4) நடைமுறையிலுள்ள சட்டங்களை மதித்தல்

5. மத்திய அரசாங்கத்தின் நிர்வாக அதிகாரங்களை மாத்திரம் பிராந்திய அலகுகளிடம் ஒப்படைத்தல்.
   (1) அதிகாரத்தைப் பன்முகப்படுத்தல் எனப்படும்
   (2) அதிகாரத்தை பகிர்ந்தளித்தல் எனப்படும்
   (3) அதிகாரத்தை ஒருமுகப்படுத்தல் எனப்படும்
   (4) அதிகாரத்தைக் கையளித்தல் எனப்படும்

6. ஒற்றையாட்சி நிலவும் நாடு,
   (1) பிரான்ஸ் (2) ஐக்கிய அமெரிக்கக் குடியரசு
   (3) சுவிற்சர்லாந்து (4) அவுஸ்திரேலியா

7. இலங்கையில் மத்திய அரசுக்கும் மாகாண சபைக்கும் இடையிலான இணைப்பாளராகச் செயற்படுபவர்,
   (1) சனாதிபதி (2) பிரதமர்
   (3) மாகாண முதலமைச்சர் (4) மாகாண ஆளுநர்

8. இலங்கையில் உள்ளூராட்சி மன்றக் கட்டமைப்புக்குள் **அடங்காத** நிறுவனம்,
(1) மாகாணசபை (2) மாநகர சபை (3) நகர சபை (4) பிரதேச சபை

9. பன்மைப் பண்பாட்டுச் சமூகமாக இலங்கை உருவாவதில் செல்வாக்குச் செலுத்திய குடிப்பெயர்வுடன் தொடர்புடைய குழுவினர்,
(1) பண்டு பாரிந்த குழுவினர் (2) சேனன், குத்திகன் குழுவினர்
(3) பண்டு வாசுதேவன் குழுவினர் (4) கலிங்க மாகன் குழுவினர்

10. நல்லாட்சியின் அடிப்படைப் பண்பு **அல்லாதது,**
(1) ஊடக சுதந்திரத்தைப் பாதுகாத்தல்
(2) நீதித்துறைச் சுதந்திரம் பாதுகாக்கப்படுதல்
(3) அரச சேவை அரசியல் மயமாக்கப்பட்டிருத்தல்
(4) சுதந்திரமும், சமூகநீதியும் நிலைநாட்டப்படுதல்

11. வளங்கள் தேவையிலும் பார்க்கக் குறைவாகக் காணப்படும் தன்மை,
(1) மிகை உற்பத்தி எனப்படும். (2) அருமை எனப்படும்.
(3) தேவைகள் எனப்படும். (4) விருப்பங்கள் எனப்படும்.

12. மூலதனம், முயற்சி ஆகிய உற்பத்திக் காரணிகளுக்கான கொடுப்பனவுகள் முறையே,
(1) வாடகை, கூலி (2) இலாபம், வட்டி (3) வட்டி, இலாபம் (4) இலாபம், கூலி

13. பொருளாதாரமல்லாத பண்டமாக அமைவது,
(1) உணவு (2) உடை (3) சூரிய ஒளி (4) மருந்துகள்

14. சந்தைப் பொருளாதார முறையின் அடிப்படைப் பண்பாக அமைவது,
(1) வருமானம் சமனற்ற வகையில் பகிரப்பட்டிருத்தல்.
(2) உற்பத்திக் காரணிகள் அனைத்தும் அரசுடமையாக்கப்பட்டிருத்தல்.
(3) போட்டித் தன்மை வாய்ந்த சந்தைமுறை காணப்படுத்தல்.
(4) தனியார்துறை முதலீடுகள் ஊக்குவிக்கப்படுதல்.

15. பண்பாட்டின் கூறுகளை மட்டும் கொண்ட விடையைத் தெரிவு செய்க.
(1) வழிபாடுகள், மரபுகள் (2) நம்பிக்கைகள், போதைவஸ்து பாவனை
(3) தொழிநுட்பம், விளையாட்டுக்கள் (4) கலைகள், விவசாயம்

16. நல்லாட்சி தொடர்பில் ஒவ்வொருவரினதும் கலாசாரப் பெறுமானங்களுக்கு மதிப்பளிக்க வேண்டியதன் முக்கியத்துவங்களில் அரசியல் தொடர்பான காரணியாக அமைவது,
(1) தாம் விரும்பும் பிரதேசத்தில் வாழுதல்
(2) முடிவுகளை மேற்கொள்வதில் சுதந்திரமாகச் செயற்படல்
(3) தொழிற்சங்கங்களை நிறுவிச் செயற்படுதல்
(4) உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்.

17. “ஜொகான் கல்டூன்” என்பவரினால் அறிமுகப்படுத்தப்பட்ட மோதல் முக்கோணியில் உளவியல் காரணியாக அமையும் கூறு எது?
(1) சூழ்நிலை (2) மனப்பாங்கு (3) நடத்தை (4) ஒத்துழைப்பு

18. மோதலைத் தீர்க்கும் முறைகளில் வெற்றி-வெற்றி தீர்வைப் பெற்றுக்கொள்ளும் வழிமுறையாக அமைவது,
(1) பேரம் பேசுதல் (2) இணக்கப்பாடு (3) தீர்ப்புக் கூறுதல் (4) கலந்துரையாடுதல்

19. தொழிலாளர்களுக்கிடையே தொழில் ரீதியான மோதல் ஏற்படும் சந்தர்ப்பத்தில் அதனைத் தீர்ப்பதற்கு பின்பற்றப்படும் தீர்வு முறை,
(1) கலந்துரையாடல் (2) இணக்கப்பாடு
(3) காப்பாற்றும் முறை (4) பேச்சுவார்த்தையும் பேரம் பேசுதலும்

20. மோதலை இணக்கப்பாட்டின் மூலமாகத் தீர்ப்பதற்கு "இணக்க சபைகள்" எந்த அமைச்சினால் நிறுவப்பட்டுள்ளன.
   (1) பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு (2) கல்வி அமைச்சு
   (3) வெளிவிகார அமைச்சு (4) நீதி அமைச்சு

21. பின்வருவனவற்றுள் உயர்நீதிமன்றத்தின் பணியாக **அமையாதது?**
   (1) அடிப்படை உரிமைகள் தொடர்பாக விசாரணை செய்யும் அதிகாரம்
   (2) சனாதிபதி தேர்தல் முறைப்பாடுகளை விசாரணை செய்யும் அதிகாரம்
   (3) அரசியல் யாப்பு வியாக்கியானம் கூறல்
   (4) பாராளுமன்றத் தேர்தல் தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்தல்

22. இலங்கையில் மனித உரிமைகள் ஆணைக்குழு எச்சட்டத்திற்கமைய உருவாக்கப்பட்டுள்ளது.
   (1) 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க கட்டளைச் சட்டம்
   (2) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க கட்டளைச் சட்டம்
   (3) 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க பாராளுமன்றக் கட்டளைச் சட்டம்
   (4) 1939 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க நகரசபைக் கட்டளைச் சட்டம்

23. பின்வருவனவற்றுள் குடியியல் சட்டத்தில் உள்ளடங்கும் குற்றமாக கருதப்படுவது,
   (1) களவு (2) காணிப் பிரச்சினை
   (3) சிறுவர் துஷ்பிரயோகம் (4) கொலை

24. பின்வருவனவற்றுள் சட்டத்தின் பிரதான நோக்கமாகக் கருதப்படக் கூடியது?
   (1) பொதுமக்களின் சொத்துக்கள் பாதுகாக்கப்படும் வகையில் மனித நடவடிக்கைகளை நிர்வகிப்பதன் ஊடாக நீதியை நிலைநாட்டுவதாகும்.
   (2) பொதுமக்களின் வாழ்க்கை உரிமைகள் மற்றும் சொத்துக்கள் ஆகியன பாதுகாக்கப்படும் வகையில் மனித நடவடிக்கைகளை நிர்வகிப்பதினூடாக நீதியை நிலைநாட்டுவதாகும்.
   (3) பொதுமக்களின் வாழ்க்கை உரிமைகள் ஆகியன பாதுகாக்கப்படும் வகையில் மனித நடவடிக்கைகளை நிர்வகிப்பதினூடாக நீதியை நிலைநாட்டுவதாகும்.
   (4) மனித நடவடிக்கைகளை நிர்வகிப்பதினூடாக நீதியை நிலைநாட்டுவதாகும்.

25. டொனமூர் யாப்புச் சீர்திருத்தம் அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு,
   (1) 1910 (2) 1931 (3) 1947 (4) 1933

26. ஒற்றையாட்சிமுறையின் அடிப்படைப் பண்புகள் இரண்டாகும் அவை மத்திய அரசின் உயர்தன்மை மற்றும் மேலதிக சுயாதீன நிறுவனங்கள் ஆட்சி முறையில் காணப்படாமை. இக்கருத்தைக் கூறிய அரசியலறிஞர்?
   (1) ஏ.வி.டைசி (2) கலாநிதி கே. சீ.வியர்
   (3) கி.எவ்.ஸ்ரோங் (4) ஹர்மன் ஜே. பைனர்

27. பின்வருவனவற்றில் முதலாம் குடியரசு யாப்பின் அம்சமாகக் கருதப்படக் கூடியது,
   (1) இரு சபைகளைக் கொண்ட பாராளுமன்றம் அறிமுகப்படுத்தப்பட்டமை.
   (2) மந்திரிசபை (கபினட்) ஆட்சிமுறை அறிமுகப்படுத்தப்பட்டமை.
   (3) சனாதிபதி தலைமையிலான அமைச்சரவை அறிமுகப்படுத்தப்பட்டமை.
   (4) அரசியல் யாப்பு நீதிமன்றம் உருவாக்கப்பட்டமை.

28. பின்வருவனவற்றுள் உள்ளூராட்சி மன்றங்களுக்கு வழங்கப்பட்டுள்ள செயற்பாடுகளினுள் பொதுப் பண்பாடு சேவையாகக் குறிப்பிடக் கூடியது,
   (1) முறையற்ற கட்டடங்களை அகற்றுதல்
   (2) வீதிகளைப் பரிபாலித்தல்
   (3) வடிகாலமைப்பும் திருத்தமும்
   (4) பொது இடங்களுக்கு மின்னொளி வசதி செய்து கொடுத்தல்.

29. மனிதன் மற்றும் பிரசைகளின் உரிமை தொடர்பான பிரான்சியப் பிரகடனம் வெளியிடப்பட்ட ஆண்டு,
(1) கி.பி.1789 (2) கி.பி.1689 (3) கி.பி.1776 (4) கி.பி.1917

30. பின்வரும் மனித உரிமைகளில் பொருளாதார சமூக கலாசார உரிமைகளில் அடங்குவது,
(1) சட்டத்தின் முன் ஒரு ஆளாக சமமானவர்கள் எனும் உரிமை.
(2) சுதந்திரமாக கருத்துக்களை வெளியிடுவதற்கான உரிமை.
(3) தனிப்பட்ட சொத்துக்களை வைத்திருப்பதற்கான உரிமை.
(4) போக்குவரத்து செய்வதற்கான உரிமை.

31. இலங்கையில் அரசியல் யாப்பின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ள மனித உரிமைகளை விபரிக்கும் எண்ணக்கரு யாது?
(1) சமூக உரிமைகள் (2) அடிப்படை உரிமைகள்(3) மக்கள் உரிமைகள்(4) குடியியல் உரிமைகள்

32. பின்வரும் கூற்றுக்களில் தொழிலாளர் உரிமை **அல்லாததைத்** தெரிவு செய்க.
(1) தொழில் பாதுகாப்பைப் பெற்றுக் கொள்ளல்
(2) எட்டு மணித்தியாலய வேலை நேரத்திற்குள் வேலை செய்தல்
(3) நிறுவனத்தின் நோக்கங்களுக்கேற்ப வேலை செய்தல்
(4) விடுமுறையைப் பெற்றுக் கொள்வதற்கான இயலுமை

33. இலங்கையில் சுற்றாடல் தொடர்பாக ஏற்படும் பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காகச் செயற்படும் பிரதான நிறுவனம்,
(1) மத்திய சுற்றாடல் அதிகார சபை (2) சுற்றாடல் அமைச்சு
(3) புவியியல் மற்றும் பாதுகாப்புச் சபை (4) வன பாதுகாப்புத் திணைக்களம்

34. காலநிலை மாற்றத்தால் ஏற்படும் ஏற்படும் விளைவு **அல்லாத** நிகழ்வானது,
(1) சூழல் வெப்பநிலை உயர்தல் (2) சுனாமி ஏற்படல்
(3) சமுத்திர நீர்மட்டம் உயர்வடைதல் (4) எல்நிளோ பாதிப்பு

35. பின்வருவனவற்றுள் வளிமாசடைதல் மற்றும் பச்சை வீட்டு வாயுக்களை அதிகம் வெளியேற்றும் செயற்பாடாக அமைவது,
(1) கைத் தொழில்கள் (2) போக்குவரத்துத்துறை
(3) காடழிப்பு (4) வலுச்சக்திப் பிறப்பாக்கம்

36. அபிவிருத்தியை அளவிடும் பாரம்பரிய முறைகளுள் **உள்ளடங்குவது,**
(1) பௌதீக வாழ்க்கைப் பண்புச் சுட்டெண் (2) மனித வறுமைச் சுட்டி
(3) மொத்தத் தேசிய உற்பத்தி (4) கணனி அறிவு

37. பேண்தகு அபிவிருத்தி தொடர்பாக பிரசைகளின் கடமைகளில் <u>உள்ளடங்காதது?</u>
(1) அபரிமிதமான நுகர்வை மேற்கொள்ளல் (2) சூழல் நேய வாழ்க்கை முறை
(3) முறையான கழிவகற்றல் (4) சட்டதிட்டங்களுக்கு அமைய நடத்தல்

38. நாடுகளுக்கிடையே உறவுகளைச் சிறப்பாக நடாத்திச் செல்வதற்குப் பயன்படும் பிரதான ஊடகமாக விளங்குவது,
(1) சனாதிபதி செயலகமாகும் (2) தூதுவர் சேவையாகும்
(3) உள்நாட்டு அமைச்சாகும் (4) வெளிநாட்டு அமைச்சாகும்

39. தென் மற்றும் தென் மேல் ஆசிய நாடுகளது பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தியின் பொருட்டு ஏற்படுத்தப்பட்ட அமைப்பு,
(1) ஆசியான் (2) சார்க் (3) பிம்ஸ்டெக் (4) கொழும்புத் திட்டம்

40. ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையிலுள்ள நாடுகளில் ரத்து (வீட்டோ) அதிகாரத்தைப் பயன் படுத்தக் கூடிய நிரந்தர உறுப்புரிமையைக் கொண்டுள்ள நாடு எது?
(1) சீனா (2) கனடா (3) ஜேர்மனி (4) தென்கொரியா

## பகுதி - II

➢ **முதலாம் வினா உட்பட விரும்பிய ஐந்து வினாக்களுக்கு விடைதருக.**

1. (1) நேரடி ஜனநாயக ஆட்சிமுறையைத் தற்காலத்தில் செயற்படுத்த முடியாமைக்கான காரணங்கள் இரண்டைக் குறிப்பிடுக.
   (2) மாகாண சபையொன்றின் நிறுவனக் கட்டமைப்பில் காணப்படும் பிரதான அலகுகளில் இரண்டைக் குறிப்பிடுக.
   (3) பன்மைப் பண்பாட்டு சமூகத்தில் மக்கள் ஒற்றுமையுடன் செயற்படுவதால் கிடைக்கும் நன்மைகள் இரண்டைக் குறிப்பிடுக.
   (4) உற்பத்தி தொடர்பாகப் பயன்படுத்தப்படும் பிரதான இரண்டு நுட்பங்களையும் குறிப்பிடுக.
   (5) சர்வதேச மோதலின் இரண்டு வகைகளையும் குறிப்பிடுக.
   (6) சட்டமா அதிபரின் கீழ் செயற்படும் அதிகாரிகளில் இருவரைக் குறிப்பிடுக.
   (7) இலங்கை உள்ளூராட்சி மன்றங்களுக்கு வழங்கப்பட்டுள்ள செயற்பாடுகளின் பிரதான தலைப்புக்களில் இரண்டைக் குறிப்பிடுக.
   (8) ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் உரிமைகள் சமவாயத்தைத் தயாரிக்கும் போது கவனத்தில் கொள்ளப்பட்ட விடயங்களில் இரண்டைக் குறிப்பிடுக.
   (9) கற்கோளம் பாதிக்கப்படுவதால் ஏற்படும் விளைவுகள் இரண்டைக் குறிப்பிடுக.
   (10) ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபையின் நிரந்தர உறுப்பு நாடுகளில் இரண் டைக் குறிப்பிடுக.

(10x2= 20 புள்ளிகள்)

02. “உலகில் பல்வேறு வகையான பொருளாதார முறைகள் மூலம் பொருளாதார நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றன”
   (i) யாரால் உற்பத்தி செய்தல் என்பது தொடர்பாக உற்பத்தியுடன் தொடர்புடைய மூன்று துறைகளில் இரண்டைக் குறிப்பிடுக.
   (ii) பொருளாதாரம் ஒன்றின் இடம்பெறும் பிரதான செயற்பாடுகள் மூன்றும் எவை?
   (iii) a) உலகமயமாக்கல் காரணமாக இலங்கைக்கு ஏற்பட்டுள்ள சாதகமான விளைவுகள் இரண்டைக் குறிப்பிடுக.
   b) மேலே குறிப்பிட்ட விளைவுகளில் ஒன்றை விளக்குக.

(2+3+2+3 = 10 புள்ளிகள்)

03. “மனிதர்களாகிய நாம் கௌரவத்துடனும் சமத்துவத்துடனும் சமூகத்தில் வாழ்வதற்கு மனித உரிமைகள் வழி வகுக்கின்றன”
   (i) உலகில் மனித உரிமைகளை வென்றெடுத்த வரலாற்றுச் சந்தர்ப்பங்கள் இரண்டைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)
   (ii) சர்வதேச மனித உரிமைகள் சட்டங்களில் மூன்றைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)
   (iii) a) கடமைகளின் பிரதான வகைகள் இரண்டையும் குறிப்பிடுக.(02 புள்ளிகள்)
   b) மேலே குறிப்பிட்ட வகைகளில் ஒன்றை விளக்குக. (03 புள்ளிகள்)

04. “தனிப்பட்ட நோக்கங்கள், தேவைகள், விருப்பங்கள் என்பவற்றின் அடிப்படையில் மோதல்கள் உருவாக்கின்றன.”
   (i) மோதலுடன் தொடர்புடைய தரப்புகள் இரண்டைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்
   (ii) மோதல் ஏற்படுவதற்கான அடிப்படைக் காரணங்கள் மூன்றைக் குறிப்பிடுக.
   (03 புள்ளிகள்)

(iii) a) மோதலைச் சமாதானமாகத் தீர்ப்பதால் உண்டாகும் பயன்கள் இரண்டைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

b) மேலே குறிப்பிட்ட பயன்களில் ஒன்றை விளக்குக. (03 புள்ளிகள்)

05. "சூழல் என்பது உயிர் ஒன்றினைச் சூழவுள்ள பௌதீக இரசாயன, உயிரியல் நிலையாகும்"

(i) சூழல் தொகுதியில் உள்ளடங்கியுள்ள சமூகச் சூழலின் கூறுகள் இரண்டைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) செயற்கை முறையில் வளிமாசடையும் சந்தர்ப்பங்கள் மூன்றைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(iii) a) இலங்கையின் அபிவிருத்திக்கான சவாலைப் பெற்றுக்கொள்வதற்காக மேற்கொள்ளப் பட்டுள்ள நடவடிக்கைகளில் இரண்டைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

b) மேலே குறிப்பிட்டுள்ள நடவடிக்கைகளில் ஒன்றை விளக்குக. (03 புள்ளிகள்)

06. "இலங்கையில் பல்வேறு இனங்களைச் சேர்ந்த, மதங்களைப் பின்பற்றுகின்ற,மொழிகளைப் பேசுகின்ற மக்கள் ஒன்றாக வாழ்கின்றனர்"

(i) இலங்கையில் பேசப்படும் இரண்டு மொழிகளைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) இலங்கையில் பன்மைப் பண்பாட்டுச் சமூகம் உருவாகுவதில் செல்வாக்குச் செலுத்திய பிரதான காரணிகள் மூன்றைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iii) a) பன்மைப் பண்பாட்டுச் சமூகத்தில் நல்லாட்சியைச் செயற்படுத்துவதன் மூலம் கிடைக்கும் நன்மைகள் இரண்டைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

b) மேலே குறிப்பிட்ட நன்மைகளில் ஒன்றை விளக்குக. (03 புள்ளிகள்)

07. "ஒரு நாட்டின் அடிப்படைச் சட்டமாக அமைவது, அந்நாட்டின் அரசியல் யாப்புச் சட்டமாகும்?"

(i) இலங்கையில் தேர்தல் தொகுதிகளைப் பிரிக்கும்போது கவனத்தில் கொள்ளப்படும் விடயங்கள் இரண்டையும் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) நாடொன்றில் அரசியல் யாப்பில் உள்ளடங்கும் விடயங்களில் மூன்றைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iii) a) இலங்கையில் 1978 ஆம் ஆண்டு அரசியல் யாப்பின் படி சட்டத்துறை சார்ந்த அதிகாரங்களும் பணிகளும் இரண்டைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

b) மேலே குறிப்பிட்ட அதிகாரங்கள், பணிகளில் ஒன்றை விளக்குக.) (03 புள்ளிகள்)